கல்கி



KALKI

9-6-1963

30 காசு


TAM
சுறுசுறுப்பான
மாணவர்கள்
எப்பொழுதும்
அதிகப்படியான
வெண்மைக்கு
டினோபாலையே
உபயோகிக்கிறார்கள்
வெண்மையின் இரகசியம்
வெள்ளைத் துணிகள் கண்ணைப் பறிக்கும் தனி வெண்மை அடைவது, சதா டினோபாலை உபயோகிப்பதால்தான் என்ற இரகசியத்தை சுறுசுறுப்பான எல்லா மாணவர்களும் அறிவார்கள். புடவைகள், சேலைகள், ஷர்ட்டுகள், டிரௌசர்கள் முதலியவற்றிற்கு எப்பொழுதும் டினோபாலை உபயோகியுங்கள்.
டினோபால் மிகச் சிக்கனமானதுங்கூட—ஒரு வாளி நிறையவுள்ள துணிகளை வெண்மையாக்க ஒரு ¼ தேக்கரண்டி டினோபால் போதுமானது. டினோபால் வெண்மையுள்ள நாள்கணக்கில் நீடித்திருப்பதால், துணிகளைத் துவைக்கும் போதெல்லாம் டினோபால் கலவையில் தோய்க்கவேண்டிய அவசியம் இல்லை.
டினோபால் என்ற வார்த்தை ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸ்ல், ஸ்விட்ஸர்லாந்து என்பவர்களுடைய ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.
ஒரு சிறிதளவு
டினோபால்
வெள்ளைத் துணிகளை மிக
வெண்மையாக்கப் போதுமானது.
தயாரிப்பாளர்கள் :
ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்:

கல்கி

பொருளடக்கம்



படவிளக்கம் 12ம் பக்கம் பார்க்க

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

சோபகிருது, வைகாசி 26உ
ஜூன், 9உ 1963

பலே, விற்பனையாளரே!

எமதுடைய ரகங்களை வாங்கிவைத்து, விற்பனை செய்து, அவற்றின் பெயரும் புகழும் பரவப் பேருதவி புரிகின்றீர்கள். உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்கும் இடையே இன்றியமையாத இணைப்பாக விளங்கும் உங்கள் பணியே பணி. நம் நாட்டு சிகரெட்டுத் துறை வேற்றுநாட்டு ஏகபோக உரிமையாளர்களின் ஆதிக்கத்திலிருப்பதாலும், இந்திய சிகரெட்டுத் தொழிலுடன் ஒத்துழைப்பதிலே சில இடர்களை நீங்கள் எதிர்ப்படுகிறீர்கள். நல்லவேளையாக அவை உங்கள் மனவுறுதியைத் தகர்ப்பதற்கு மாறாக உங்களுக்கு ஊக்கமூட்டியே வருகின்றன. நாட்டுப் பற்றுமிகுந்த நல்வணிகருக்கு அடையாளமாக நீங்கள் தூண்டுதல்களையும் தடைகளையும் மீறி சொந்த சிகரெட்டுத் தொழிலுக்கு ஆதரவுதர அணிவகுத்துள்ளீர்கள். அஞ்சாமையும் ஆர்வமும் சலியாமுயற்சியும் சாதனையுமே உருவகமான தங்களைத் தாயகத்து சிகரெட்டுத் தொழிலைத் தாங்கும் தூணாகக் கருதுகின்றோம். உங்கள் ஒத்துழைப்பையே கொழுகொம்பாகக் கொண்டு இத் தொழில் வளர்ச்சி பெற்று, வருங்காலத்தில் வளமை காணப் போவது உறுதி.

சுதேசி சிகரெட்டுகளை விற்பனை செய்து விதேச நாணயமாற்றினைக் காப்பாற்றுக.



கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்., பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

CT. 62 TAM. Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 45

ராஜ்கோட் வெற்றி

'ஸ்ரீ மஸானி அவர்களின் வெற்றியானது காங்கிரஸின் பிரேதப் பெட்டியில் மேலுமொரு ஆணியை அடித்துள்ளது' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறுகிறது. நூற்றுக்கு நூறு மெய்யான வார்த்தைகள்!

இன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் மூடப் பிடிவாதமாகக் கட்டி அழுகின்ற பத்தாம் பசலி 'சோஷலிஸ'த்தை ஒரு காலத்தில் பின்பற்றியவர் ஸ்ரீ மஸானி. பிறகு அவர் அது ஓர் உருப்படாத சித்தாந்தம் என்று தெளிந்தார். சோஷலிஸத்தை எதிர்க்கலானார். இன்று சுதந்திரக் கட்சியின் பிரதான ஸ்தம்பங்களில் ஒருவராக விளங்கும் ஸ்ரீ மஸானி காங்கிரஸ் கட்சியினரின் 'சோஷலிஸ'ப் பித்தையும் அவர்களுடைய இதர கொள்கைகளிலுள்ள பொத்தல்களையும் வெளிப்படுத்திக் கண்டித்து நாட்டின் அரசியல் உணர்வை நல்வழியில் திருப்ப நிச்சயமாக உதவுவார். ஸ்ரீ மஸானி அவர்களுக்கு நம் வாழ்த்தைத் தெரிவிக்கும் அதே சமயத்தில் அவரைத் தேர்வுசெய்த மக்களுக்கும் நமது நன்றியையும் வாழ்த்தையும் அறிவிக்கிறோம்.

அம்ரோஹா, ஃபருக்காபாத் ஆகிய இரு இடங்களிலும் எதிர்க் கட்சிகள் வெற்றி பெற்றதற்கு ஒரு சிகரமாக ராஜ்கோட் வெற்றி அமைந்துவிட்டது. காங்கிரஸின் ஆட்சியில் மக்கள் அதிருப்தி கொண்டுவிட்டார்கள் என்பது முக்காலே மூன்று முறையும் நிரூபணமாகிவிட்டது. அரசாங்கத்தின்மீது அவநம்பிக்கை தெரிவிப்பதற்காகச் சிறப்பு வாக்கெடுப்பு (Referendum) விதி நம் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இல்லை. அத்தகைய அகில இந்திய வாக்கெடுப்புக்குச் சமானம் இம்மூன்று உபதேர்தல்கள்.

'காங்கிரஸால்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்' என்று முன்பெல்லாம் சொல்லும்போது அதற்கு ஒரு பொருள் இருந்தது. இதே வார்த்தைகளைச் சொல்லி இப்போது வோட்டு கேட்கும்போது அது வேறு ஒரு பொருளில் உண்மையாகிறது. அதாவது 'காங்கிரஸுக்கு ஆதரவு தருகிறவர்களுக்கு மட்டும்தான் அதன் சலுகை கிடைத்து நன்மை ஏற்படும்; மற்றவர்கள் அதன் சர்வாதிகாரத்தால் கொடுமைக்கு ஆளாவார்கள்' என்பதே அந்தப் பொருள். அப்படியிருந்தும் காங்கிரஸ் கொடுங்கோன்மையில் மக்களுக்கிருந்த பயம் மறைந்துவிட்டது. பிரதமர் நேருஜியிடம் அவர்களுக்கிருந்த மோகமும் தகர்ந்து விட்டது. கடந்த பதினைந்தாண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சியில் ஏறிவந்த வரிச்சுமையும், அதிகரித்துவந்த நிர்வாக ஊழலும், தங்கக் கட்டுப்பாடு, சேமிப்பு டிபாஸிட் இவற்றைப் போன்ற கொடுமைகளும் மடமைகளும், தோற்றுக் கொண்டேவந்த அந்நியக் கொள்கையும் சகிக்க முடியாத நிலைமை அடைந்து மக்களைத் தட்டி எழுப்பி விட்டன. இனியும் இந்த ஆட்சியையும், ஆட்சித் தலைவரையும் கண்மூடிக் கொண்டு ஆதரிக்கலாகாது என அவர்கள் உறுதிகொண்டு விட்டனர்.

எதிர்க் கட்சித் தலைவர்கள் எவ்வளவு கணிசமான வாக்கு வித்தியாசம் பெற்றிருக்கிறார்கள் என்பது மக்களுக்குக் காங்கிரஸ் ஆட்சியிடம் எவ்வளவு வெறுப்பு ஏற்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாகும். காங்கிரஸ் பிரமுகர் ஸ்ரீ தேபர் வெற்றி பெற்ற அதே தொகுதியில், அத்தேர்தல் நடைபெற்ற ஒரே ஆண்டுக்குள் இன்று ஸ்ரீ மஸானி காங்கிரஸ் அபேட்சகரைவிட 14,000 வோட்டு அதிகம் பெற்றிருக்கிறார். இதற்குக்

காங்கிரஸின் தேர்தல்தலையாரிகள் காட்டக்கூடிய எந்தக் காரணமும் சரியாகாது.

மக்களிடம் இத்தகைய மனமாறுதல் ஏற்பட்டதற்காக ராஜாஜி மக்களை மட்டும் வாழ்த்தவில்லை; ஆண்டவனுக்கும் நன்றி செலுத்துகிறார். இதைக் காண நம்முடைய நெஞ்சு உருகுகிறது. அரசியல் கூட்டம் என்று பெயரிடாமல் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தியே மக்களின் அரசியலை ஆன்மீகத்தில் பிணைத்த காந்தியடிகள் வாழ்ந்த இந்நாட்டில் தற்போது ஆட்சி நடத்துகிறவர்கள் ஆண்டவன் பெயரைச் சொன்னாலே வாய் வெந்துவிடும்போல அஞ்சுகிறார்கள். இவர்களுக்கிடையே ராஜாஜி மட்டும் இறைவனிடம் அயராத நம்பிக்கை வைத்துத் தம் பணியைச் செய்து வருகிறார். சோதனைகள் பல செய்த இறைவன் இப்போது தனது அருளைக் காட்டத் தொடங்கிவிட்டான் என்று அவர் நம்புகிறார். 'தமக்குத் தாமே உதவி புரிந்து கொள்வோருக்குத் தெய்வமும் உதவும்' என்ற ஆங்கில முதுமொழிப்படி இச்சமயத்தில் நாம் எல்லோரும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் மக்கள்சுதந்திரத்துக்காகப் பணி புரிந்தால் தர்மமும், சத்தியமும் இப்புண்ணிய பூமியில் அரியாசனமேறும். முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.



இது அல்ல வழி

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களின் அகில உலக யாத்திரையைப் பற்றிப் பத்திரிகைத் தலைப்புக்கள் என்ன தான் கூறினாலும், மேல் நாடுகள் நம்முடைய ராணுவத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆர்வம் காட்டவில்லை என்பது வெளிப்படை.

சீன ஆபத்து இந்தியாவுக்குத் தற்சமயம் ஒன்றும் கிடையாது என்று மேலை நாட்டினர் கூறி நாம் கேட்கும் தளவாடங்களைக் கொடுக்க மறுத்து வருகின்றனர். தினம் பத்திரிகைகளில் 'சீனு இந்தியாவின் எல்லையில் துருப்புக்களைக் குவித்து வருகிறது. பூடானில் மக்கள் பீதியடைந்து, வீடு வாசலைத் துறந்து வெளியேறி வருகிறார்கள்' என்று செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இருப்பினும் மேல் நாட்டினர் தயங்கி வருகின்றதைக் கவனிக்க வேண்டும்.

தளவாட வியாபாரத்தின் மூலம் நிரந்தரமான சீன அபாயத்தைத் தவிர்க்க எண்ணுவது வடிகட்டின மடமையாகும். அது நாட்டைத் திவாலாக்குகிற காரியம்தான். உண்மையில் நம்மைக் காத்துக் கொள்ளும் வழி மேல்நாடுகளுடன் நட்பு உடன்படிக்கை செய்துகொண்டு அந்த நட்பென்னும் பெரிய பலத்தைப் பெறுவதுதான். இவ்விஷயத்தில் இந்தியாதான் தற்போது முனைந்து செயலாற்ற வேண்டும்.

இந்தியாவுடன் எப்படியேனும் நிரந்தரமான நட்பு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என மேல் நாடுகள் துடித்த காலம் மலையேறிவிட்டது. ராணுவரீதியில் உலக யுத்தம் மூளுகிற ஏதுக்கள் தற்போது குறைந்துவிட்டதே இதற்குக் காரணம். ராணுவ பலத்தினாலன்றி அரசியல் சித்தாந்தத்தின் மீதும், பொருளாதாரக் கொள்கைகளின் மீதும் மட்டுமே வல்லரசுகள் தத்தம் க்ஷேமத்தைப் பார்த்துக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ராணுவ அடிப்படையில் எந்த நாட்டுடனும் உடன்படிக்கை செய்துகொள்வதில் இப்போது வல்லரசுகள் ஆர்வமாக இல்லை. ஆனபடியால் நாம்தான் இப்போது மேல் நாடுகளை நிரந்தரமான சிநேக ஒப்பந்தத்துக்கு இழுக்கவேண்டும்.

மேல் நாட்டினரின் ராணுவ உதவி கோரி வருகையிலேயே அதே மாதிரியான ராணுவ உதவி கோரி டி.டி.கே. அவர்கள் மாஸ்கோவுக்கும் செல்வார் என்று செய்தி வருகிறது. இதை அறியும் மேலை நாட்டினர் நமக்கு எப்படி உதவ முன் வருவார்கள்? சீன அபாயம் நமக்கு மட்டும் நேர்ந்த அபாயமல்ல; உலக முழுவதற்கும் நேரிட்டுள்ள அபாயமாகும் என்பதனை வலியுறுத்தி மேல் நாட்டு வல்லரசுகளை நமக்கு ஆதரவாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால் மட்கிப் போன கொள்கைகளுக்கும், வறட்டுக் கௌரவத்துக்கும் பெயரெடுத்துவிட்ட ஆட்சியாளர்களிடம் இப்படி ஒரு மாறுதலை எதிர்பார்ப்பதற்கு இடமில்லை.

என்ன சேதி?

இடுக்கி வாயில்...


ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் எவ்வளவுதான் தேனாக இனிக்கப் பேசி ஹிந்தி பேசாத மக்களை தூங்கச் செய்தாலும் ஹிந்தி ஏகாதிபத்தியத்தின் பூர்வாங்கக் காரியங்கள் மட்டும் நாளுக்கு நாள் கடுமையாகிக்கொண்டே தான் வருகின்றன. ஆணைப்பட்ட பிரதமரின் வாக்குறுதியே இருந்த இடம் தெரியாமல் போய்விட்டபோது மந்திரி லால்பகதூரின் வாக்குறுதி எம்மாத்திரம்? ரயில்வே இலாக்காவில் 75 சத விதம் ஊழியர்கள் ஹிந்தி தெரிந்தவர்களாக இருந்தால் ஆபீஸில் எழுதப்படும் குறிப்புகள் ஹிந்தி மொழியிலேயே இருக்க வேண்டும் என்று சமீபத்தில் ஓர் உத்தரவு போடப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து இப்போது மற்றொரு உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு காரியாலயத்தில் 55 அல்லது 60 சத விதத்தினர் ஹிந்தி மொழி தெரிந்தவர்களாக இருந்தால் போதும். அந்த மொழியில் குறிப்புக்கள் எழுதப்படலாமாம்.

ஹிந்தி மொழியைப் பரவலாக நிர்வாகத்தில் கொண்டு வரும் வேலையை எந்தக் கட்டத்திலாவது தொடங்கித்தானே ஆக வேண்டும்? அரசியல் நிர்ணயச் சட்டப்படி ஹிந்திக்கு அந்தஸ்து அளித்து இந்த வேலையைத் தொடங்கிவிட்டார்கள். இந்த மேல் மட்டத் 'தாக்குத'லுக்கு ஆதரவாகவே கீழ் மட்டத்தில் காரியாலயங்களிலும் 'ஹிந்தி' திணிப்பு தொடங்கி விட்டது. இடுக்கியின் இரண்டு பிடிகளாக இந்தக் கீழ் மட்ட — மேல் மட்டத் திணிப்பு வேலை ஹிந்தி அறியாதாரை நெருக்குகிறது. சிறுபான்மையினர் விரும்பினால் மட்டுமே ஹிந்தி மேற்கொள்ளப்படும் என்று நேருஜீ முன்னொரு காலத்தில் கூறியது காற்றில் பறக்க விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆபீசிலும் 'பெரும்பான்மையினர்' என்ற பெயரைக் காட்டி, காப்பு அளிக்க வேண்டியவர்களை ஹிம்சிக்கத் தொடங்கி விட்டார்கள். கைதிகளைவிடப் போலீஸ்காரர்கள் அதிகம் இருப்பார்களானால் அக் கைதிகளைச் சித்திரவதை செய்வது நியாயம் என்று சொல்வதைப் போன்றதுதான் இந்தப் பெரும்பான்மை வாதம். இது தர்மமுமல்ல; விவேகமுமல்ல. இந்தப் 'பெரும் பான்மை'யும் உண்மையாக இராது. அரைகுறையாக ஹிந்தி படித்தவர்களுக்கும் இலாகாப் பரீட்சைகளில் 'பாஸ்' போட்டு 75 சத விகிதத்தினருக்கு ஹிந்தி ஞானம் உண்டு என்பார்கள். ஹிந்தி பேசாதார் உத்யோகத்துடன் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது.

கட்டாய சேமிப்பு

கட்டாய சேமிப்புத் திட்டம் ஜூலை மாதத்திலிருந்து அமுலுக்கு வருகிறது. இதிலுள்ள குறைபாடுகளில் சிலவற்றை இங்கே கவனிப்போம். முதலாவது, தபாலாபீசு சேமிப்புப் பாங்கியில் பத்து அல்லது பதினைந்து வருஷ சேமிப்புத் திட்டத்தின்படி ஏற்கனவே சேமிப்புச் செய்து வருபவர்களுக்கு இத்திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மாதச் சம்பளம் பெற்று வாழ்பவர்கள் தபாலாபீசு

துள்ளின மாடு பொதி சுமக்கும்!



சேமிப்பு பாங்கைத் தவிர, இதர பாங்கிகளிலும், சீட்டுப் பண்டுகளிலும் சேமிப்புச் செய்து வரக்கூடும். இத்தகைய சேமிப்புக்களை விலக்கிவிட்டுத் தபாலாபீசு சேமிப்புப் பாங்கி ஒன்றை மட்டும் அங்கீகரிப்பது ஒருதலைப்பட்சமாகும்.

1500 ரூபாய்க்குள் வருமானம் உள்ளவர்களுக்குக் கட்டாய சேமிப்புத் திட்டத்திலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. எனவே கட்டாய சேமிப்பு செய்ய வேண்டிய நிர்பந்தத்துக்கு உட்பட்டவர்களுக்கு அவர்களுடைய மொத்த வருமானத்திலிருந்து முதல் 1500 ரூபாய்க்கு விலக்கு அளித்துவிட்டு, அதற்கு மேல் உள்ள தொகையின்மீது மூன்று சதம் கணக்கிட்டுச் 'சேமிக்க' வைப்பதுதான் நியாயமாக இருக்கும்.

கட்டாயமாகச் செய்யப்படும் எந்தக் காரியமுமே வரவேற்கத்தக்கது அல்ல. காரியத்தை அடியோடு கைவிடக் காங்கிரஸின் முரட்டு வீம்பு இடமளிக்காதெனினும் இதனால் விளையக்கூடிய கஷ்டங்களையேனும் குறைக்க முற்பட வேண்டும்.

லோஹியா உணருவாரா?

தம்மை ஒரு 'ஹிந்தி வெறியர்' என்று குறிப்பிடுவது தமக்குப் பிடிக்கவில்லை என்று டாக்டர் லோஹியா வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார். ஹிந்தி எக்கேடு கெட்டுப் போனாலும் தமக்கு அக்கறையில்லை என்று வேறு கூறியிருக்கிறார். ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதுதான் தமக்குப் பிடிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்.

ஆங்கிலேயர் இந்த நாட்டில் தற்போது அதிகாரம் செலுத்தவில்லை. ஆனால் ஹிந்தி ஆட்சி மொழியாகியும் ஹிந்தி பேசுவோர் மெஜாரிட்டி கொள்கைப்படி ஆட்சிமொழியாளருமாகி விட்டால் ஹிந்தி பேசுவோர்பேரிலும் ஹிந்தி பேரிலும் மற்றவர்களுக்கு வெறுப்பு கட்டாயம் ஏற்படும் என்பதை லோஹியா அவர்கள் சீக்கிரத்தில் உணர்வார். வெறுப்பு என்பது எவ்வளவு பெரிய விஷம் என்பதையும் தம் வெறுப்பை உணர்ந்தே தெரிந்துகொள்வார்.

மானத்திலே உயர் நாடு

பொற்கொல்லர்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காகத் தமிழகஅரசாங்கம் ஐந்து லக்ஷம் ரூபாய்களை வைத்துக்கொண்டு காத்திருப்பதாகவும், ஆனால் அந்த உதவியைப் பெற பொற்கொல்லர் யாரும் முன்வரவில்லை என்றும் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கடராமன் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாராம். பொற்கொல்லர்கள் உதவி பெறாததற்குக் காரணம் என்ன? தன்மானம்தான். கலை வளம் கொழிக்கும் ஒரு தொழிலைத் தர்மமான முறையில் புரிந்த பெருமக்களின் ஜீவனோபாயத்தைக் குலைத்துள்ள அரசாங்கம் இப்போது யாசகம் அளிக்கிறோம் என்று முன்வந்திருப்பதை ஏற்க அவர்களுடைய கௌரவம் இடம் கொடுக்கவில்லை. பொற்கொல்லர்களின் நிலைக்கு அநுதாபம் கொள்ளும் போதே அவர்களுடைய தன்மானத்தைப் பாராட்டுகிறோம். இப்படிப்பட்ட மானஸ்தர்களை நடுத் தெருவில் நிற்க வைத்துள்ள ஆட்சியாளர்கள் தங்களுடைய அதிக்கிரமத்தின் விளைவைத்தான் உபதேர்தல்களில் அறுவடை செய்திருக்கிறார்கள். எனினும் தங்கள் கொள்கைகளைச் செப்பம் செய்து கொள்ள அவர்கள் முற்படாததுதான் விந்தை.

பாட்டீலின் யோசனை

ஏது வேண்டுமானாலும் அமெரிக்காவுக்குப் போய் யாசகம் கேட்பதே இன்றைய காங்கிரஸ் சர்க்காரின் கொள்கையாகி விட்டது. 'யந்திர சாதனங்கள் வேண்டுமா? ஓடு, அமெரிக்காவுக்கு! டாலர் உதவி வேண்டுமா? ஓடு, அமெரிக்காவுக்கு! ராணுவ உதவி வேண்டுமா? ஓடு, அமெரிக்காவுக்கு! கோதுமை வேண்டுமா? ஓடு, அமெரிக்காவுக்கு! அரிசி வேண்டுமா? ஓடு அமெரிக்காவுக்கு! என்பதே இதுகாறும் இருந்து வந்த நடைமுறை. இப்போது அமெரிக்காவுக்குப் போய் உள்ள உணவு மந்திரி திரு எஸ். கே. பாட்டீல் அவர்கள் அரிசி யாசகம் கேட்கப் போய் ஒரு புது யோசனை கூறியிருக்கிறார். அதாவது சற்று அதிகமாகவே அமெரிக்கர்களை அரிசி உற்பத்தி செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்தியாவில் உணவு உற்பத்தியைப் பெருக்கி, நாட்டிலிருந்து பஞ்சப் பேயை விரட்ட முயலும்படி சொல்வதை விட அமெரிக்கர்களை அரிசி உற்பத்தியைப் பெருக்கும்படி சொல்லுவது எளிதான காரியம் என்று மந்திரி கருதினார் போலும்.

விவசாயத் துறையில் உணவு உற்பத்தியைப் பாதிக்கும்படியான சட்டதிட்டங்களைச் செய்துகொண்டே அதன் காரணமாய் ஏற்படும் உணவுப் பஞ்சத்தைப் போக்க வெளி நாட்டில் உற்பத்தியைப் பெருக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டதைப் போன்று ஒரு நாட்டுக்கு இழிவான செயல் வேறு உண்டா?



சென்னை: வெலிங்டன் · ராக்ஸி
மஹாராணி மற்றும் தென்னாடெங்கும்.
ஜூன் 7ல் முதல்
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
அளிக்கும்
முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
வசனம்:
ஆரூர்தாஸ்
இசை:
R.சுதர்சனம்
டைரக்ஷன்:
A.C.திருலோகசந்தர் M.A.
MB
MURUGAN BROS
இப்படத்தின் பாடல்களை கொலம்பியா ரிகார்டுகளில் கேளுங்கள்







1, 2, 3. சீனாவிலிருந்து நம் நாட்டில் வந்து குடியேறி, தலைமுறை தலைமுறையாக இங்கே வாழ்ந்து வரும் சீனர்களுக்குக் கம்யூனிஸ்டு சீனாவுக்குச் செல்ல வேம்பாகக் கசக்கிறது. அன்பும் பண்பும், மரியாதையும் கிடைக்கும் இந்திய நாட்டிலிருந்து செல்ல அவர்களுக்குப் பிடிக்கவில்லை. 'டியோலிகாம்பி'லுள்ள சீனர்கள் முன்னைப் போல் அத்தனை சுதந்திரமாக இல்லைதான். ஆயினும் அந்தச் சீனக் குடும்பங்கள் ஒரு குறையுமில்லாமல் போதிய வசதிகளோடு வாழ்கின்றன. உணவை மகிழ்ச்சியோடு பெற்றுச் செல்லும் சீனரையும், குதித்துக் கும்மாளமிட்டு விளையாடும் சீனக் குழந்தைகளையும் இங்கே காண்கிறீர்கள். 4. இந்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காவுக்கு ராணுவ உதவி கோரிச் சென்றிருக்கிறார். அங்கே அமெரிக்க ஜனாதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசினார். 5. சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் அறுபத்தியொன்றாவது பிறந்த தினத்தைச் சமீபத்தில் சென்னை, குழந்தைகள் தியேட்டரில் விமரிசையாகக் கொண்டாடினர். முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்கள் வீர மாலை ஜெயப்பிரகாஷுக்கு வழங்கியதோடு அவருக்குப் பொன்னாடை சூட்டியும் மகிழ்கிறார்.





மிகச் சிறந்ததினால் தையுங்கள் உஷாவினால் தையுங்கள்



உஷா தையல் இயந்திரம் வெகுவாக விரும்பப்படுவது அதன் நவீன அமைப்பினாலும் நம்பகமான உழைப்பினாலும். பாகங்கள் எளிதில் கிடைக்கின்றன. இடையே மாற்றிக்கொள்ளக்கூடியவை. மேலும் விற்பனைக்குப் பிறகு உஷாவின் சேவை மிகவும் தலைசிறந்தது. சுமார் ஐம்பது நாடுகளில் உள்ள பெண்மணிகள் உஷாவின் தொல்லையற்ற வேலைத்திறமைக்கும் சேவைக்கும் உத்திரவாதமளிக்கின்றனர்.

இன்றைய நாளில் தைப்பது என்பது மிகவும் வேடிக்கையானது.

எங்கள் வசீகர தவணையில் வாங்கும் முறைகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள உஷா டீலரை அணுகுங்கள்.

உஷா தையல் இயந்திரம்

தி ஜே என்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட்., கல்கத்தா-31



கல்வித்துறை குளறுபடிகள்!

இன்று நாட்டில் கல்வித் துறையில் ஏற்பட்டிருப்பது போன்ற குழப்பம் வேறு எதிலும் ஏற்படவில்லை என்று சொல்ல வேண்டும். இதன் விளைவாகச் சென்ற வாரம் பல பெற்றோர்களுக்கு ஓர் 'இன்பஅதிர்ச்சி' ஏற்பட்டது! தங்களுடைய பிள்ளைகள் இவ்வருஷம் மேல் வகுப்புகளுக்குப் போவார்களா, மாட்டார்களா என்று நினைத்துக் கொண்டிருக்கையில் பிள்ளைகள், 'அப்பா! எனக்கு டபிள் பிரமோஷன் கிடைத்து விட்டது' என்று சொன்னால் அவர்களுக்கு எப்படியிருக்கும்? அந்த இன்ப அதிர்ச்சி சிறிது நேரத்தில் மறைந்து, தங்களுக்குத்தான் மூளை குழம்பி விட்டதா அல்லது பள்ளி ஆசிரியர்களுக்குத்தான் மூளைக் குழப்பம் ஏற்பட்டு விட்டதா, என்ற சந்தேகம் எழுந்துவிட்டது.

சில ஆண்டுகளுக்கு முன் பள்ளிப் படிப்பைப் பத்து ஆண்டுகளாகவும், கல்லூரியிலுள்ள பி. யு. ஸி. படிப்பைப் பள்ளியில் சேர்த்துப் பதினோராண்டுகளாக்குவது என்றும் தீர்மானித்தார்கள். அதற்காக ஐந்தாவது வகுப்புக்குப் பிறகு மூன்றாண்டுகள் படிக்க வேண்டிய படிப்பை இரண்டாண்டுகளுக்குள் சுருக்கிப் பாடத் திட்டத்தை வகுத்து அமுல் நடத்தி வந்தார்கள். இனி என்று சென்ற ஏப்ரலில் பழையபடி மாணவன் கல்லூரிக்குப் போகுமுன் 'பதினொரு ஆண்டு படிப்பு' அளிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்கள். அதன் விளைவாக இந்த ஆண்டு ஒன்பதாவது ஸ்டாண்டர்டு படித்தவன் பதினோராவது ஸ்டாண்டர்டுக்கு மாற்றப்பட்டும், எட்டாவது ஸ்டாண்டர்டு படித்தவன் பத்தாவது ஸ்டாண்டர்டுக்கு மாற்றப்பட்டும், மூன்றாவது படிவம் படித்தவன் ஒன்பதாவது ஸ்டாண்டர்டுக்கு மாற்றப்பட்டும் சாதாரணமாகத் தேறிய மாணவர்களுக்குக்கூட இரட்டை பிரமோஷன் கிடைத்த திருப்தியை யுண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு பகுதி மாணவர்கள் பிரமையிலிருக்க, இன்னொரு பகுதி மாணவர்கள் பெரும் சோகத்தில் இருக்கிறார்கள். அவர்கள்தான் ஏழாவது ஸ்டாண்டர்டில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள். இவர்கள் தேறினால் மூன்று ஆண்டுகளில் சர்க்கார் பரீட்சை எழுத முடியும் என்ற நிலை மாறி இனி நான்கு ஆண்டுகள் படித்தால்தான் பொதுப் பரீட்சை எழுதமுடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல; எட்டாவது ஸ்டாண்டர்டு எனப்படும் வகுப்பில் சேர்ந்து சென்ற ஆண்டு ஏழாவது ஸ்டாண்டர்டில் படித்த பாடங்களையே ஏறத்தாழ மீண்டும் படிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படியொரு குழப்பம் விளைந்த நமது சென்னை அரசாங்கக் கல்வித் துறையைப் பற்றி என்ன சொல்வது?

இப்பொழுதுள்ள கல்வி 'இயக்குனர்' தாம் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதன் பலனாக ஓர் அரசாங்க உத்தரவு ஒவ்வொரு கல்விக்கூடத்துக்கும் போயிருக்கிறது. அதாவது, பள்ளிக்கூடங்களில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது போன்ற நிர்வாக வேலைகளை ஜூன் மாதம் பள்ளிக்கூடம் திறப்பதற்கு முன்னதாகவே முடித்துக்கொண்டு பள்ளிக்கூடம் திறக்கும் அன்றே பாடங்களை நடத்த ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த 'ஜி. ஓ.' கூறுகிறது. இந்த உத்தரவு எவ்வளவு அழகாக இருக்கிறது என்று யாருமே நினைக்கத்தான் செய்வார்கள். ஆனால் ஆசிரியர்களைக் கேட்டால் 'எந்த வகுப்பில் என்ன பாடம் நடத்துவது என்று பாடத்திட்டமே வரவில்லையே, எப்படிப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பிப்பது?' என்கிறார்கள்.



புதிய பாடங்களும் புதிய முறைகளும் கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். 'சமூகப்பாடம்' என்ற பெயரில் இது வரை நடந்து வந்த அவியலை எடுத்துவிட்டு, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்து

வந்தபடியே சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் முதலிய பாடங்களைத் தனித்தனியாகக் கற்பிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதற்குப் பழைய 'ஸிலபஸ்'ஸையே கூச்சம் இன்றி எடுத்து வெளியிட்டிருந்தால் எவ்வளவோ சுலபமாகக் காரியம் முடிந்திருக்கும். அதற்கும் வழியின்றித் தாங்கள் ஏதோ நீண்ட காலம் சிந்தித்துப் புது மாதிரியாகச் செய்யப் போவதாகப் பாவனை செய்ய விரும்புகிறார்கள். அதன் பயனாகப் பழையபடி 'சமூக பாடம்' என்ற அவியலை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடத்தப் போகிறார்களாம். ஆகக் கூடி உபயோகமில்லாத கல்வி முறையை இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்திவருவார்கள் என்று தெரிகிறது.

புதுக் கல்வித் திட்டத்தில், உயர் நிலைப் பள்ளி மாணவன் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளைப் படிக்கவேண்டியிருக்கிறது. ஹிந்திக்கு என்ன அந்தஸ்து கொடுப்பது என்று தயங்கித் தயங்கி இப்பொழுது பரீட்சை எழுதித் தேற வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். புதுக் கல்வித் திட்டத்தின் காரணமாகத் தமிழில் இரண்டு வினாத் தாள், ஆங்கிலத்தில் இரண்டு வினாத் தாள், ஹிந்தியில் ஒரு வினாத் தாள், கணிதம், சரித்திரம், விஞ்ஞானம், இஷ்டபாடங்கள் இரண்டு ஆக இவை ஒவ்வொன்றிலும் ஒரு வினாத் தாள் ஆக, மொத்தம் பத்து அல்லது பதினொரு வினாத் தாள்கள் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளித் தேர்வுக் கட்டத்தில் எழுத வேண்டியதாகும். கல்வித் துறையில் ஈடுபட்டவர்கள் 'இது மாணவர்களால் தாங்க முடியாது' என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

பாரத தேசம் சுதந்திரம் அடைந்ததிலிருந்து, நமது பழம் பெரும் மொழியான சம்ஸ்கிருதத்துக்கு ஆக்கம் அளிக்க வேண்டும் என்று பேரறிஞர்கள் முயன்று வருகிறார்கள். பாரதப் பண்பாட்டைக் காப்பாற்றி வரும் மொழி அது. இந்தப் புதுக் கல்வித் திட்டத்தில் ஹிந்திக்கு முக்கியத்துவம் அளிக்க நேர்வதால் சம்ஸ்கிருதத்துக்கு இடமில்லாமல் போகிறது. வேண்டுமானால் இஷ்ட பாடமாக எடுத்துக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. இந்த விஞ்ஞான யுகத்தில் அதற்கு வேண்டிய கல்வி கற்க ஆர்வம் தான் மாணவர்களிடையே இருக்கும். ஆகவே அதனை இஷ்டபாடமாக யாருக்குமே எடுத்துக் கொள்ள விருப்பம் இராது. ஆகவே இன்று கல்வித் துறையினர் செய்யவிருக்கும் முடிவில், சம்ஸ்கிருதத்துக்கு இடமில்லை. அதுவும் தமிழகம் சம்ஸ்கிருத மொழியைப் பேணிக் காப்பாற்றி வந்த தேசம் என்ற பெரும் புகழ் வடக்கே யெல்லாம் பரவியிருக்கிறது. அந்தப் புகழ் அழிந்து போகும் வண்ணம் புதுக் கல்வித் திட்டம் அமையும் போலிருக்கிறது. இந்த விபரீத நிலை ஏற்படு முன் கல்வி இலாகாவுக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறோம். ஆறும் படிவம் முதல் எட்டாம் படிவம் வரை பிள்ளைகளுக்கு எளிய சம்ஸ்கிருத பாடங்கள் போதிக்க ஏற்பாடு செய்யலாம். மூன்றாண்டுகளில் ஓரளவு சமஸ்கிருத வியாகரணமும், ஓரளவு வடமொழிச் சொற்களில் பயிற்சியும் ஏற்

ஆயுட்கால ஜனாதிபதி

சென்ற மாதம் இந்தோநேஷியாவில் கலவரங்கள் நடந்தவண்ண மிருந்தன. பாண்டுங்கில் ஒரே நாளில் நூற்றுக் கடைகள் பாழாக்கப்பட்டன. அத்தனையும் சீனர்களின் கடைகள். நாட்டின் ஜனத்தொகையில் சீனர்கள் மூன்று சத விகிதத்தினர்தான் என்றாலும் கடுமையான உழைப்பாலும் புத்திகூர்மையாலும் பல வருஷங்களாகவே இந்தோநேஷியாவின் பொருளாதாரத்தை இவர்கள் தங்கள் கைப்பிடியில் சிக்க வைத்திருக்கின்றனர். இதனால் சீனர்கள்மீது இந்தோநேஷியர்களுக்கு உண்டான வெறுப்பு நாட்டில் நிலவும் பணவீக்கத்தாலும், பஞ்சத்தாலும் அதிகரித்திருக்கிறது. எனினும் கேவலம் பொருளாதாரம், பஞ்சப் பிரச்னைகளால் சற்றேனும் பாதிக்கப்படாத ஜனாதிபதி சுகர்னோ அரசியல் சட்டத்தை அலட்சியம் செய்து ஆயுட்கால ஜனாதிபதியாகத் தம்மை நியமிக்கச் செய்தார். அடுத்தாற்போல் நீண்ட நாள் ஓய்வுக்காக டோக்கியோ, பெல்கிரேட், வியன்னா, ரோம், பாரிஸ் ஆகிய நகரங்களுக்குத் தமது உல்லாசப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார்.





பட்டால், ஒன்பதாவது படிவம் முதல் பதினோராவது படிவம் வரை ஹிந்தி படிக்கும் போது மாணவர்களுக்கு லிபியையும் மொழியையும் கற்கும் கஷ்டம் இராது. முதல் மூன்றாண்டு சமஸ்கிருதத்தில் கொடுக்கும் மேற்போக்கான பயிற்சி, உயர்நிலைப் பள்ளியில் ஹிந்திப் படிப்புக்கு உதவும்படியாகவும் இருக்கும்.


உயர்நிலை வகுப்புக்களில் சரித்திரம், விஞ்ஞானம், இஷ்ட பாடங்கள் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய மாணவனுக்குப் பரிச்சயமற்ற லிபியில் அதிக கவனம் செலுத்தும்படி வைக்கலாகாது.

மற்றொரு விஷயம். பள்ளிக்கூட வேலை நாட்களை 180லிருந்து 200 ஆக்கி, இப்பொழுது 220 ஆக உயர்த்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். வேலை நாட்களை அதிகமாக்குவதனால் மட்டும், மாணவனுக்குப் பாட-போதனை அதிகமாகிவிடாது. களைத்துப் போய்ப் பாடம் போதிக்க முடியாத ஆசிரியரின் வகுப்பில் சும்மா உட்கார்ந்திருப்பதே மாணவனைக் களைத்துப் போகச் செய்து விடும். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் போதிய ஓய்வு அவசியம். அத்துடன் ஓய்வுநேரத்தை நல்லபடி பயன்படுத்தக் கல்வித் துறை யோசனை கூற வேண்டும்: கல்வி இலாக்கா, ஆசிரியர்களை ஓய்வு நேரமெல்லாம் மதிய உணவுத் திட்டத்துக்காகவும் சீருடைத் திட்டத்துக்காகவும் ஊர் முழுதும் பிச்சையெடுக்க ஏவி விட்டால், பள்ளிக்கூட நேரத்தில் அவர்களால் எப்படிப் பாடம் நடத்த முடியும்? 'முப்பது மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்' என்று திட்டம் வகுத்துக் கொடுத்தால், ஆசிரியர்கள் சிறப்பாகப் பணியாற்றியும் மாணவர்கள் ஆசிரியரின் மொழிகளைக் கூர்ந்து கேட்கவும் வாய்ப்பிருக்கும். இவற்றின் விளைவாகக் கல்வியின் தரமும் உயரும்.

கல்வி இலாக்கா, பல தவறுகள் இழைத்து, பழைய கல்வி முறையே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்துள்ளது.

இனியேனும் குளறுபடிகளுக்கு முடிவு கட்ட வேண்டும். அடிக்கடி கல்வித் திட்டத்தை மாற்றி மாணவர்களையும் உபாத்தியாயர்களையும் குழப்பத்துக்கு உள்ளாக்குவதைத் தவிர்த்துச் சீரான நிலையான நல்ல திட்டத்தை அமைத்து அமுல் நடத்த வேண்டும்.

ஊர் வம்பு






போகிற போக்கில்

ராஜ்கோட் முடிவுக்குப் பிறகு யூனியன் சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறதாம் — அதாவது இனிமேல் எந்த காங்கிரஸ் எம். பி.யையும் உத்தியோகத்தில் நியமிப்பதில்லை என்று. திரு தேபரை ரூ. 4,000 சம்பளத்தில் கதர் கமிஷன் தலைவராகப் போட்டார்கள். அதனால் ராஜ்கோட் தேர்தல் வந்தது; ஸ்ரீ மஸானி ஜெயித்தார். காங்கிரஸ் தோற்றது. இதே மாதிரிதான் திரு அனந்தசயனமய்யங்காரை கவர்னராகப் போட்டார்கள். சித்தூர் தேர்தல் வந்தது. ஆசாரிய ரங்கா ஜெயித்தார். எனவே, காங்கிரஸ் எம். பி.க்களுக்கு உப — தேர்தல் வருமாறு பதவி உயர்வோ, உத்தியோகமோ தரமாட்டார்களாம்!

ஃ ஃ ஃ

''இந்திய ஜனநாயகத்துக்கு கம்யூனிஸ்டுகளால் ஆபத்தே இல்லை. வலதுசாரி பிற்போக்காளர்கள்தான் இந்திய ஜனநாயகத்துக்கே உலை வைக்கிறார்கள்'' என்று காங்கிரஸ் அக்கிராசனர் திரு சஞ்சீவய்யா கூறுகிறார்.



ஜனநாயகத்துக்கு கம்யூனிஸ்டுகளால் ஆபத்தில்லை என்று கூறுகிற பிரமுகர் உலகிலேயே இவர் ஒருவராகத்தான் இருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

சென்ற வாரம் மேற்கு வங்கத்தில் திடீரெனப் பல கம்யூனிஸ்டுகள் கைதானார்கள். இவர்களைக் கைது செய்த காங்கிரஸ் அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்தது. ஒரு பெரிய சதிக் கூட்டம், அதாவது கம்யூனிஸ்டுகளைக் கொண்ட கூட்டம், ஜனநாயக வாழ்வுக்கு உலைவைக்கச் சதி செய்ததாகவும், இது தக்க நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டதால், வந்த ஆபத்து போய் விட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

திரு சஞ்சீவய்யா இந்த அறிக்கையையாவது பார்த்திருக்கவேண்டும். அப்படி அவர் பாராதது காங்கிரஸின் துரதிருஷ்டம்தான்! அந்த ஸ்தாபனத்துக்கு எத்தனை துரதிருஷ்டங்கள் பருக்காபாத்தில் தொடங்கி ராஜ்கோட் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கு போகப் போகிறதோ?

ஃ ஃ ஃ

டாக்டர் சுகர்னோவைப் போல் பாகிஸ்தான் பிரஸிடெண்டான அயூப்கானை 'ஆயுட் காலம்' வரை பதவி வகிக்கச் சட்டம் செய்ய வேண்டுமென ஒரு முயற்சி நடக்கிறதாம். இதைப் பாகிஸ்தான் சட்ட மந்திரி திரு குர்ஷித் அகமது கண்டித்திருக்கிறார்.

இந்தக் கண்டனத்துக்குப் பிறகு இப்போது ஒரு புதுப் பிரச்னை அங்கு எழுந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. அதாவது அயூப்பின் பதவியை ஆயுட்காலப் பதவியாக ஆக்கக்கூடாதெனக் கூறும் திரு குர்ஷித் தொடர்ந்து பதவியிலிருப்பாரா அல்லது போவாரா என்பதுதான் பிரச்னையாம். ஏனெனில் சர்வாதிகாரி அயூப்பைக் குறைகூறுவது போலிருந்ததாம் இவரது கண்டனம்.

இச் செய்தியைப் பார்க்கிற இதர மந்திரிகள் இனி அபிப்பிராயம் கூறமாட்டார்கள் என்பது உறுதி.

ஃ ஃ ஃ

அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு திரு டி. டி. கே. லண்டன் வந்திருக்கிறார். இந்தியாவுக்குச் சீன அபாயம் இருப்பதாகவும், இதற்காக நிறைய உதவிகள் தேவையெனவும் ஒரு கூட்டம் விடாது பேசி வருகிறார். அவரது நியூயார்க் பேச்சைப் பிரசுரித்திருக்கும் ஒரு பத்திரிகை கீழ் வருமாறு கூறுகிறது:

''கம்யூனிஸ்ட் சீனாவினால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள அபாயம் உண்மையானதென்றும், தம் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக இந்தியா காட்டும் பூச்சாண்டி அல்லவென்றும் திரு கிருஷ்ணமாச்சாரி கூறினார்....,'

இந்தப் பேச்சு பிரசுரமான அன்றே இன்னொரு செய்தி டில்லியில் பிரசுரமாகியிருக்கிறது. அதாவது ''இந்தியாவுக்குச் சீனாவின் ஆபத்து உடனடியாக இல்லை'' என்று நேருஜீ திரு எச். வி. காமத்திடம் திருவாய் மலர்ந்தருளினாராம்! இவ்விரு செய்திகளில் எதை நம்புவது?



9

வான் ஆகித் தீயாய்
மறிகடலாய் மாருதமாய்
தேன் ஆகிப் பாலாம்
திருமாலே—

[வான் ஆகி — ஆகாசமும் நீயே. தீயாய்— அக்னியும் நீயே. மறிகடலாய்—அலை வீசுகிற கடலும் நீயே. மாருதமாய்—காற்றும் நீயே. தேனாகிப் பாலாம் திருமாலே — தேனைப் போலும் பாலைப் போலும் சுவை மிகுந்த எம்பெருமானே.]

பஞ்ச பூதங்களும் சர்வேசுவரனே என்று சொல்லிப் பின் அவனுடைய கலியாண குணங்களை நினைத்துத் தேனே பாலே என்கிறார். அடுத்தபடி அவனுடைய சௌலப்பியத்தை எடுத்துக் காட்ட இடைச்சேரி நிகழ்ச்சியைச் சொல்லுகிறார்.

—ஆன் ஆய்ச்சி
வெண்ணெய் விழுங்க
நிறையுமே முன்னொருநாள்
மண்ணை உமிழ்ந்த
வயிறு.

[ஆன் ஆய்ச்சி — இடைக் குலத்துத் தாயாகிய யசோதை. அவனுடைய வெண்ணெய் விழுங்க — அந்த வெண்ணெயைச் சாப்பிட்டு: நிறையுமே — நிறைந்து விடுமோ. முன்னொரு நாள் — ஊழிக்காலத்தில். மண்ணை—பூமியை. உமிழ்ந்த — பிரளயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வயிற்றிலே அடக்கிக் கொண்டு, பிறகு வெளிப்படுத்திய.]

உலகமே உனது வயிற்றுக்குள் சென்றது என்றால், உனது பசி எவ்வளவு பெரிதாக இருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவனுக்கு ஆய்ச்சியின் வெண்ணெய் எவ்வளவுக்குப் போதும் என்று கவிநயத்தோடு பாடுகிறார்.

இந்தப் பாசுரத்தின் கருத்து என்னவென்றால், வானாகவும், தீயாகவும், கடலாகவும், காற்றாகவும் இருந்த போதிலும் பக்தர்களுக்குத் தேன் போலும் பால் போலும் சுவை நிரம்பிய இன்பொருளாக இருக்கிறான் இறைவன் கண்ணன் வெண்ணெயைத் தேடிச் சென்றதுபோல், பகவான் பக்தர்கள் தரும் பக்தியை நாடுகிறான். அந்தப் பக்தியில்தான் பகவானுக்கு ஆசை. பஞ்ச பூதங்களையும் விட்டு மனிதர்களுடைய பக்தியைப் பெரிதாகக் கருதுகிறான். தேனும் பாலும் அவனுடைய குணங்களின் சுவையையும், வெண்ணெய் உண்டது அவனுடைய சௌலப்பியத்தையும் குறிக்கும்.

வானாகித் தீயாய்
மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாம்
திருமாலே — ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க
நிறையுமே முன்னொருநாள்
மண்ணை உமிழ்ந்த
வயிறு!

எழுத்தும் தொழிலும்

"இந்தாப்பா! ஒரு தந்தி மணியார்டர் வந்திருக்கிறது. வீட்டு விலாசம். ஆசாமி ஆபீஸ் கிளம்புவதற்கு முன்னால் போய்ப் பட்டுவாடா செய்து விட்டு வா!" என்று என் சிப்பந்திக்கு அறிவித்துக் கொண்டே சிவப்புத் தந்தி பாரத்தில் வந்திருந்த விவரங்களைச் சாதாரண வெள்ளை மணியார்டர் பாரத்தில் எழுதி வெளியே அனுப்புவதற்குத் தயார் பண்ணிக் கொண்டிருந்தேன்.

விலாசதார் எனக்குத் தெரிந்த நபர்தான். அந்த வருடத்திய தலை தீபாவளி மாப்பிள்ளைப்பையன். மனைவியை இன்னும் அழைத்து வராத நிலையில், தலை தீபாவளியைச் சாக்கிட்டு மாமனூர் வீட்டுக்குக் கிளம்பத் தயாராக இருப்பவன். மணியார்டர் கூட மாமனூர் வீட்டிலிருந்துதான் வந்தது போலிருந்தது.





தந்தி மணியார்டர் தொகை, விலாசம், செய்தி முதலியவற்றை மேலெழுந்தவாரியாக ஒரு தடவை சரி பார்த்து விட்டு ஜன்னல் பக்கம் திரும்பி என் அஷ்டாவதானத்தில் ஈடுபட்டேன்.

சிறிய ஊர், சிறிய தபாலாபீஸ். ஆகையால், கைகாட்டி இறக்கி, டிக்கெட் கொடுத்து, கொடி காட்டி ரயில் வண்டியை வரவேற்று உபசரித்து வழியனுப்பும் ஏக சக்ராதிபதியான ஸ்டேஷன் மாஸ்டர் போல நான் பணியாற்ற வேண்டியிருந்தது. ஸ்டாம்பு வேண்டி. இரண்டு அரை டிக்கெட்டுகள். மணியார்டர் அனுப்ப ஒரு முதியவர். மூன்று நாட்களுக்கு முன்னால் தம் பேரனுக்கு எழுதிப் போட்ட கார்டு எந்தவித விக்கினமுமில்லாமல் போய்ச் சேர்ந்திருக்குமோ என்று கேட்டுத் தெரிந்து கொள்ளக் காத்திருக்கும் பாட்டியம்மாள், முப்பத்தி ஏழு ரிஜிஸ்தர் தபால்களை ஏககாலத்தில் கொண்டு வந்திருக்கும் கோ ஆப் ரேடிவ் பாங்கு சிப்பந்தி - எல்லோரும் என் கவனத்தைக் கவர ஜன்னலுக்கு வெளியே காத்திருந்த வேளை அது.

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு - தீபாவளிக்கு மறு நாள் என்று நினைக்கிறேன் - என் தலை தீபாவளி சிநேகிதனை அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். "என்னப்பா! தலை தீபாவளிக்கு மாமனூர் வீட்டுக்குப் போகவில்லையா? மணியார்டர் கூட வந்திருந்ததே!" என்றேன்.

அந்த ஆசாமியின் முகம் எங்கள் இலாகாத் தபால் பெட்டியாக — புதிதாகப் பெயின்டு அடிக்கப்பட்ட தபால் பெட்டியாகச் சிவந்தது. "மாமனாரு மாச்சு! வாழைநாருமாச்சு! கந்த அப்பன்! அவன் என்னைத் தீபாவளிக்கு அழைத்தானு என்ன? இருபத்தைந்து ரூபாய் காசை அனுப்பித் தீபாவளியை



நடத்திக்கொள் என்று சொன்னான்! இனி அவன் முகத்தில் விழிப்பேனா என்ன? அந்த இருபத்தி ஐந்து ரூபாயை, கூப்பனில் உள்ள சமாசாரத்தைப் படித்துப் பார்க்குமுன் கையெழுத்துப் போட்டு வாங்கி விட்டேன். இல்லாத போனால் அப்போதே மணியார்டரை 'ரெப்யூஸ்' பண்ணி விருப்பேன். அந்த ரூபாயை நாளையே திருப்பி அனுப்பி ஒரு தோட்டன் விடப் போகிறேன். அந்த மாமனாரும் அவன் பெண்ணும் இந்தச் சங்கரகப்பன் காலிலே வந்து சரணாகதி அடையணும்." அமெச்சூர் நாடகங்களில் வரும்





சிக்கன சிரோமணி

கோமதி சுவாமிநாதன்

தபால் இலாகாவில் உத்தியோகம் பார்க்கும் கோமதி ஸ்வாமிநாதன் பல நாடகங்களும், சிறு கதைகளும் எழுதிப் பிரசித்தி பெற்றவர். தாம் போஸ்ட் மாஸ்டராகப் பணி புரிந்த போது ஏற்பட்ட சுவையான அனுபவங்களை நகைச்சுவை ததும்பத் தருகிறார். தாடிக் காரனிடம் அவர் பட்டபாடு நம்மைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்துகிறது. சிக்கன சிரோமணியையும் நீங்கள் சந்தித்துவிட வேண்டியதுதான்.........!

அட்டவணை விவரங்கள் பாஷையில் அந்த ஆசாமி உறுமினான்.

''ரயில் செலவுக்குத்தானேயப்பா இருபத்தைந்து ரூபாய் அனுப்பி யிருந்தார் உன் மாமனார். ஜரிகை வேட்டி அங்கவஸ்திரத்துக்கு அனுப்ப வில்லையே? இதோ நூறு மைல் இருக்கும் ஊர் தானே?'' என்றேன் நான்.

''யார் சொன்னார்கள்? 'ப்பார் தீபாவளி' (For Deepavali) என்றுதானே ஐயா செய்தி அனுப்பியிருக்கிறார். கூப்பனைப் பாருமே !'' என்று சொல்லிப் பின்னும் நிகழ இருந்த குடும்ப யுத்தத்துக்குத் தளவாடமாக வைத்திருந்த கூப்பனைத் தன் மணிபர்ஸிலிருந்து எடுத்துக் காட்டினான். என் கையால் எழுதப் பட்டிருந்த இரண்டு வார்த்தைகளும் என்னைப் பார்த்து விழித்தன.

என் உள்ளத்திலே ஏதோ பிசிறு தட்டியது. நேராக ஆபீசுக்குப் போய், ஒரு வாரத்துக்கு முந்திய ரிக்கார்டுகளைப் புரட்டிப் பிரஸ்தாப தந்தி மணியார்டர் 'அட்வைஸை'ப் பார்த்தேன். திகைத்தேன்; திடுக்கிட்டேன்!

'கம் பார் தீபாவளி' (Come for Deepavali) என்ற மூன்று வார்த்தைச் செய்தி என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியது. 'கம்' என்ற முக்கியமான வார்த்தை மேல் வரிசையில் உள்ள விலாசத்தின் கோடியில் போய்ச் சேர்ந்து நின்றது. ஜன்னலுக்கு வெளியே காத்திருந்தவர்களின் தேவையைச் சீக்கிரம் பூர்த்தி பண்ணி அனுப்ப வேண்டும் என்ற அவசரத்தில் அந்த அதி முக்கியமான வார்த்தையை விட்டு விட்டேன்.

அந்த அவசரத் தவறு இப்போது எத்தகைய குடும்பப் பூசலில் கொண்டுபோய் விட்டிருக்கிறது என்று நினைத்த போது நான் நடுங்கிப் போனேன். கையோடு சங்கரசுப்பனைக் காரியாலயத்துக்கு வரவழைத்துச் சம்பந்தப்பட்ட 'அட்வைஸை'க் காண்பித்து ''அப்பா சங்கரசுப்பு! உன் தலைதீபாவளி இன்பத்தை அனுபவிக்க விடாமல் செய்த பொறுப்பு என்னைத்தான் சேருமே தவிர உன் மாமனாரையல்ல! தயவு செய்து எனக்காக இன்றே நீ ஊருக்குப் போய் வா!'' என்று வேண்டிக் கொண்டேன். சங்கரசுப்பனுக்கு என் மேல் கோபம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவனுக்கு அவன் மாமனார் மேலிருந்த கோபம் மறைந்து விட்டது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு எனக்கு என்றைக்குத் தந்தி மணியார்டர் எழுதினாலும் நடுக்கம்தான். 'அட்வைஸில்' ஏதாவது கறுப்புப் புள்ளி இருந்தால்கூட நானும் அந்த மாதிரி ஒரு புள்ளியைப் பாரத்தில் வைத்து ஈயடித்தான் காப்பி பண்ணி வருகிறேன்.

ஆயிரத்தில் ஓர் ஆசாமியைச் சங்கரசுப்பன் போல் சமாதானப்படுத்தலாம்! மற்றவர்களை என்ன செய்வது? கம்ப்ளெயிண்டு எழுதினால் என்ன 'எக்ஸ்பிளனேஷன்' கொடுப்பது?

அந்த ஆசாமி ஊருக்குப் புதியவர். முப்பது அல்லது முப்பத்தி ஐந்து வயது இருக்கும். சில்க் ஜிப்பா. சில்க் வேஷ்டி. எல்லாம் தூய வெள்ளை. இதற்குக் கன பொருத்தமாக அலை அலையான கறுப்புத் தாடி. ஆங்கில பாஷை அருவியாகக் கொட்டியது அவரிடமிருந்து!

'போஸ்ட் மாஸ்டர் மேல் பார்த்து' (Care of Postmaster) என்று வரும் கடிதங்கள் தமக்கு ஏதாவது இருக்கிறதா என்று தம் பெயரைச் சொல்லிக் கேட்டார் அந்தத் தாடி ஆசாமி. அன்றுதான் முதல் தடவையாக அவரைப் பார்த்தேன்.

நான் பரிசீலனை செய்து விட்டு, இல்லை என்று தலையை ஆட்டினேன். அவர் போய் விட்டார். கடைத் தெருவில் உள்ள ஒரு மாடி அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அவர் தங்கி யிருப்பதாகவும், எப்போது பார்த்தாலும் வேர்க்கடலையாகவே வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் தபால்காரர் எனக்கு அவரைப் பற்றிய செய்தி கொண்டு வந்தார். ஏதாவது யோகியாக இருக்கலாம், அல்லது சித்தவைத்தியராக இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

அப்புறம் அவர் தொடர்ந்து தினசரி தமக்குத் தபால் இருக்கிறதா என்று விசாரித்துப் போனார். நானும் இல்லை என்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டினேன். மாலை வேளைகளில் என்னைத் தெருவில் பார்க்கும்போது பேச ஆரம்பித்தார். அவருடைய பேச்சில் ராமாயண மேற்கோள்கள் நிறைந்திருந்தன.

நாட்கள் ஓட ஓட ஆசாமியின் சுரத்துக் குறைந்து வந்தது போல் தோன்றியது. ஆனால்

மெலிந்து காணப்பட்டார். பேச்சில் படபடப்பு அதிகமாக இருந்தது.

ஒரு நாள் மாலை. வழக்கம் போல் நான் ஊரின் சந்தடி குறைந்த ரஸ்தாவில் உலவக் கிளம்பினேன். திடீரென்று பின்னாலிருந்து ஏதோ இரைச்சல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அந்தத் தாடி ஆசாமி கையில் ஒரு விறகுக் கட்டையுடன் ஏதோ சொல்லிக் கொண்டு என் பின்னால் ஓடி வந்தார். அருகில் வந்த பிறகுதான் அவர் வார்த்தைகள் தெளிவாகக் காதில் விழுந்தன.

"டேய், ராவணா! என் சீதையை ஒளித்தா வைத்துக் கொண்டிருக்கிறாய்! உன்னையும் உன் லங்கையையும் என்ன பாடுபடுத்துகிறேன்! ஒரே போடு! ஒழி! ஒழி!" (வார்த்தைகள் எல்லாம் தூய ஆங்கிலத்தில்தான்!) என்று அந்த விறகுக் கட்டை வீரர் என்னை வேகத்துடன் நெருங்கினார்.

தாடிக்காரர் என் தலைக்குக் குறி பார்த்து விட்டார். நல்ல வேளை! எதிர் வீட்டுக்காரர் ஓடி வந்து தாடிக்காரர் கைகளைப் பின்னால் இழுத்துக் கட்டி விறகுக் கட்டையையும் அப்புறப்படுத்தி விட்டார். கூட்டம் கூடி விட்டது. தாடிக்காரர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஆங்கிலத்தில் பொழிந்து தள்ளினார்.

இரண்டு முரட்டு ஆசாமிகளிடம் அவரை ஒப்படைத்து அவருடைய அறைக்குக்கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்தேன். ஆசாமிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று நிதர்சனமாகத் தெரிந்தது.

அப்புறம், விசாரித்ததில் அந்தத் தாடிக்காரர் இலங்கையில் வசித்தவர் என்றும், ஏதோ காதல் விவகாரத்தில் சிக்கி முதுகைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து இங்கு ஓடி வந்தவர் என்றும், தன் காதலியிடமிருந்து கடிதம் வரும் என்று நம்பி, சாப்பாட்டுக்குக் கூட வசதியில்லாத நிலையில் வெறும் வேர்க்கடலையை நம்பி வாழ்ந்தவர் என்றும், காதல் வேகமும் பசி வேகமும் பைத்தியத்தில் முடிந்தனவென்றும் தெரிய வந்தன. இரண்டு நாட்களில் யாரோ தெரிந்தவர்களுக்குத் தகவல் எட்டி அவர்கள் வந்து அழைத்துப் போனார்களாம்.

திருவாளர் பென்ஷன்தார் பிற்பகல் குட்டித் தூக்கம் போட்டுக் காப்பி சாப்பிட்டு விட்டு மூன்றே கால் மணிக்குக் கையில் ஒன்று இரண்டு சிறு பார்சல்களை எடுத்துக் கொண்டு வருகிறார். இது அவருடைய தினசரி அலுவல்களில் ஒன்று. பக்கத்திலிருக்கும் காலி நாற்காலியில் வந்து அமருகிறார்.

அவருடைய பிள்ளைகள் பேரன்கள் எல்லாரும் உலகத்தின் பல பாகங்களில் பரவி வசிக்கிறார்கள். மாப்பிள்ளை ஒருவன் அர்ஜன்டைனாவிலும், மற்றொருவன் மடகாஸ்கரிலும் இருக்கிறார்கள். பிள்ளை ஒருவன் பாஸ்டனிலும் பெண் வயிற்றுப் பேரன் ஒருவன் பிஜியிலும் இருக்கிறார்கள்.

"போஸ்ட் மாஸ்டர்! இந்தப் பார்சல் நியூயார்க் போகணும். இது நியூஜிலாந்துக்குப் போகணும். அதிலே தட்டையும் முறுக்கும் இருக்கு. இதிலே எள்ளுருண்டை இருக்கு. இரண்டுமே ஏர் பார்சலாகப் போகட்டும்! என் மருமான்கள் இரண்டு பேர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுப் பட்சணம் என்றால் உயிர்" என்று ஆரம்பிக்கிறார். அப்போதுதான் என் உயிர் போக ஆரம்பிக்கிறது.

ஆனாலும் சோகக் கடியிலேயே அவதிப்பட்டவர்களுக்கு ஒரு நாள் சோக கடிக்கா விட்டால் தூக்கம் வராது என்பார்களே, அதுபோல் பென்ஷன்தார் ஒருநாள் பார்சல் கொண்டு வராவிட்டாலும் எனக்கே வெறிச் சோடிப் போய்விடும். ஒரு சமயம் திடீரென்று சேர்ந்தாற்போல் அவர் நாலைந்து நாட்கள் என் பக்கம் எட்டியே பார்க்கவில்லை.

"அவர் போயிட்டாருங்களே!" என்றான் அந்த ஆசாமி.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "தேவா! தேவா! மனுஷன் ஜாம்பவான் மாதிரி இருந்தாரே! ஹூம்!" என்று அனுதாபம் கலந்த பெருமூச்சு விட்டேன்.

"என்ன சொல்றீங்க? அவர் கனடாக்கா போயிட்டாரு! வர இரண்டு மாசம் ஆகும்" என்றான் அந்த ஆசாமி!

அப்புறம் 'போயிட்டார்' என்று யாரைப் பற்றி யார் சொன்னாலும் 'எங்கே?' என்று நான் கேட்கிறேனே தவிர அவசரப்பட்டு அனுதாபப் பெருமூச்சு விடுவதில்லை.

ஒரு சுவாரஸ்யமான சம்பவம்.

அந்த மனிதர் எனக்குத் தெரிந்தவர்தான். அறுபது வயதை எட்டிப் பிடித்தவர். ஆனால் அறுநூறு வயதுக்கான சிக்கன வித்தை தெரிந்த ஒரு சிக்கன சிரோமணி. வெளியூரில் படித்துக் கொண்டிருந்த தன் பையனுக்கு மாதா மாதம் மணியார்டர் அனுப்பும் போது ஒரு மாத கால குடும்ப சமாசாரத்தையும் சாதாரணமாக மற்றவர்கள் இரண்டு புல்ஸ்காப் பேப்பரில் எழுதும் அளவுக்கு அந்த ஒன்றரை அங்குல அகல மணியார்டர் கூப்பனில் இரண்டரை மணி நேர அவகாசம் எடுத்து எழுதுவார்.

ஒரு நாள் அவர் ஒரு கார்டை வாங்கிக் கொண்டு போய்ச் சுமார் அரை மணி நேரம் அதில் எழுதினார். அவர் மனத்தில் குவித்துக் கொண்டு வந்த அத்தனை சமாசாரத்தையும் அந்த ஒரு கார்டில் திணிக்க இயலவில்லை. இரண்டாவது கார்டு வாங்கித் தொடர்ச்சியாக மீண்டும் அதில் முழுதும் எழுதிவிட்டு இரண்டு கார்டுகளிலும் ஒரே விலாசமிட்டு (அவருடைய பையன் விலாசம்தான்) தபாலில் சேர்த்தார்.

அந்த நிகழ்ச்சி சற்று வேடிக்கையாகவே என் மனத்தில் நின்றது. எதிர்பாராத விதமாக அந்த இரண்டு கார்டுகளும் வெவ்வேறு தபால் பைகளில் புகுந்து இரண்டாவது கார்டு முதல் பட்டுவாடாவிலும் முதல் கார்டு அடுத்த பட்டுவாடாவிலும் விலாசதாருக்குக் கிடைத்து, முதல் கடிதத்தில் உள்ள உத்தரவுக்கு இரண்டாவது கடிதத்தில் மாற்று உத்தரவு இருந்து, பிந்தியதை அவசரப்பட்டு அந்த விலாசதார் நிறைவேற்றி இருக்கும்போது முதல் கார்டு வந்து சேர்ந்தால் எத்தனை குழப்பம் ஏற்படும் என்று கற்பனை செய்து பார்த்தேன்.

அந்தக் கணத்திலேயே அந்தச் சிக்கனச் சிரோமணியை ஒரு கதாநாயகராகச் சிக்கெனப் பிடித்துப் போட்டேன்!

இதைப்போன்ற புள்ளிகளை நீங்கள் சுவர்களில் கவனித்ததுண்டா?



மிகவும் கவனமாக அவைகளைப் பாருங்கள்—அவைகள் மூட்டைப்பூச்சிகளின் அடையாளங்கள் அதாவது உறக்கமற்ற இரவுகளின் அறிகுறிகள். நீங்கள் அறிந்திருப்பதைக்காட்டிலும் மூட்டைப் பூச்சிகள் மிகமிக வேகமாகப் பெருகுகின்றன. அவைகளை அலட்சியப்படுத்தாதீர்கள். அவைகளை இப்பொழுதே 'டால்பை'க் கொண்டு அழித்தொழியுங்கள். கொஞ்சம் டால்பைத் தெளியுங்கள்.... நீங்கள் அறியுமுன்பே மூட்டைப் பூச்சிகள் செத்துப்போயிருக்கும்.

டால்பின் ஒரே ஒரு தெளிப்பு அல்லது அதன் ஸ்பரிசம் பட்டாலே போதும். டால்ப் மூட்டைப் பூச்சிகளை உடனடியாகக் கொல்வதுடன் நீடித்த வன்மையுடையது. எல்லாவற்றையும்விட டால்ப் மிகவும் சிக்கனமானது—ஒவ்வொரு பாட்டிலிருந்தும் ... ஸ்ப்ரே டப்பியையோ அல்லது சிகிரெட் டின்களையோ இதன் கரைசலால் நிரப்பலாம்



பேயர் ஆக்ரோகெம் லிமிடெட்

டால்ஃப்

... PRODUCT

BAYER

மூட்டைப்பூச்சிகளுக்கு சாவு மணியடிக்கிறது

அறிவுக்கு அணை

இலங்கைக் கடிதம்

கொழும்பு, மே 25.

இலங்கையின் முதுபெரும் தமிழ்த் தலைவரும் தமிழறிஞருமான செனட்டர் க. நடேசபிள்ளை இவ்வாரம் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகாவைச் சந்தித்து மொழிப் பிணக்கைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பது பற்றிச் சம்பாஷணைகள் நடத்தினார். கடந்த சில ஆண்டுகளுக்கிடையில் மொழி வெறியர்களின் நடவடிக்கைகளினால் குரங்குப் புண்ணாக்கப்பட்டிருக்கும் மொழிப் பிணக்கு ஒருசில மணி நேர சம்பாஷணையினால் தீர்க்கப்பட்டுவிடுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லையென்றாலும் செனட்டர் நடேசப் பிள்ளை செய்துவரும் ஆரம்ப முயற்சிகள் பொதுவாக வரவேற்கப்படுகிறது. அவர் பிரதம மந்திரியோடு பேசியதுடன் நில்லாமல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் சந்தித்துப் பேசியிருப்பது ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. மொழிப் பிணக்கில் தம்முடைய சொந்தக் கருத்துக்கள் எப்படி இருப்பினும் பல தமிழ்த் தலைவர்களையும் கலந்து கொண்டு எல்லோருடைய அபிப்பிராயங்களையும் தழுவிய முறையிலேயே ஒரு சமரச உடன்பாடு செய்ய அவர் விரும்புகிறாரென்பதை இது குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. செனட்டர் நடேசப் பிள்ளை தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் சுயேச்சைத் தமிழ் எம். பி.க்களையும் அடுத்தபடியாகச் சந்தித்துப் பேசலாமென்றும் இதன் பின்னர் எல்லாத் தமிழ்த் தலைவர்களும் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேச ஒழுங்கு செய்யப்படலாமென்றும் நம்பப்படுகிறது.

இலங்கை அரசாங்க சேவையில் உள்ள சிங்கள குமாஸ்தாக்களுக்கு சமஸ்த லங்கா லிபிகார சங்கமய என்ற பெயருடன் ஒரு சங்கம் உண்டு. அதில் கிட்டத்தட்ட எல்லாச் சிங்களக் குமாஸ்தாக்களும் அங்கத்தினர்கள். தனிச் சிங்கள சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்த அரசாங்கம் தயங்குகிறதென்று இச் சங்கம் கருதுகிறது. அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக இவ்வாரம் முதல் ஒரு புதிய இயக்கத்தை இவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். சிங்கள மொழியில்லாமல் ஆங்கிலத்தில் வரும் கடிதங்களைக் கவனிப்பதில்லையென்றும், மேலதிகாரிகள் ஆங்கிலத்தில் உத்தரவு பிறப்பித்தால் அவ்வுத்தரவுகளை நிறைவேற்றுவதில்லையென்றும் இவர்கள் தீர்மானித்து அத் தீர்மானத்தைச் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து எழுதும் சகல கடிதங்களையும் சிங்களத்தைத் தவிர வேறு எந்த மொழியிலும் எழுதுவதில்லையென்றும் இவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதன்படி இவ்வாரம் நிதி இலாகாவில் வழக்கமாக ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும் சம்பளப் பட்டியல் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி இலாகாவின் சரித்திரத்திலேயே முதல்முறையாகச் செக்குகளும் இவ்வாரம் சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் ஜனத்தொகையில் சுமார் நான்கில் ஒரு பங்கினர் தமிழர்கள். இம்மாதிரியான நிலை உருவாகுமென்று எதிர்பார்த்தே தனிச் சிங்கள சட்டத்தைத் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். சிறுபான்மை மக்களின் மொழியான தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை முற்றிலும் நியாயமானதென்பதைச் சிங்களக் குமாஸ்தாக்கள் இப்பொழுது ஆரம்பித்திருக்கும் சிங்கள இயக்கம் நிரூபித்துவிட்டது.


பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியரான கி. நேசையா இலங்கைத் தமிழர்களின் எதிர்நோக்கியுள்ள 'கல்விப் பிரச்னை' என்ற தலைப்புடன் ஒரு முக்கியமான உரை நிகழ்த்திய பொழுது தமிழ்க் குழந்தைகளின் அறிவுக்கு அரசாங்கம் எப்படி அணை போட்டுத் தடுத்து வருகிறதென்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார். இலங்கையில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களில் இரண்டு சிங்களப் பல்கலைக் கழகங்கள். ஆகையால் அவற்றில் தமிழ் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கில்லை. மூன்றாவதான பேராதனை பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களுக்கு இடம் கொடுத்த பிறகுதான் தமிழர்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது. அங்கும் சிங்களத்திலேயே பாடபோதனை நடத்த வேண்டும் என்ற ஒரு கிளர்ச்சி இருந்து வருகிறது. அங்கு சிங்களச் சூழலே மிகுந்திருக்கிறது. இந்த நிலைமையில் தமிழ் மாணவர்கள் அங்கு இடம் பெறுவது பிரம்மப் பிரயத்தனமாக இருந்து வருகிறது. முன்பெல்லாம் தமிழ் மாணவர்கள் இந்திய பல்கலைக் கழகங்களுக்குச் சென்று உயர்தரக் கல்வி பெற்று வந்தார்கள். இப்பொழுது வெளிதேசச் செலாவணியை மிச்சப்படுத்துவதாகச் சொல்லித் தமிழ் மாணவர்கள் இந்தியப் பல்கலைக் கழகங்களில் சேர ஆயிரம் தடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உயர்தரக் கல்வியின் நிலைதான் இப்படியென்றால் ஆரம்பக் கல்வியின் நிலை இன்னும் படுமோசமாக இருக்கிறது. 100க்கு 80 சதவிகிதத் தமிழர்கள் வாழும் பகுதியிலுள்ள தமிழ்க் கல்வி ஸ்தாபனங்களையும் சிங்களமயமாக்கித் தமிழ் மாணவர்களுக்கு இடமில்லாதபடி செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. தோட்டப் பகுதிகளிலுள்ள குழந்தைகளை நாடற்றவர்களென்று சொல்லி அவர்களுக்கு அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் இடமளிக்க மறுக்கிறார்கள்.


—ரஜனி




Tata's
EAU DE
COLOGNE
Toilet Soap



பர்மாப் போர் முனையில்....
டாக்டர், ஆம்புலன்ஸில் புதிதாக ஒரு பேஷண்டைக் கொண்டு வந்திருக் கிறார்கள். அந்த ரத்தப் போக்கிலும் அவருக்கு நினைவு தப்பவில்லை.
நினைவோடு இருந்தால் இங்கு ஏன் வருகிறான்? ஜப்பானியனின் நெஞ்சைக் குறி பார்த்துக் கொண்டு 'ஹாயி'யாக இருப்பான்!
சந்திரனே சாட்சி
25
கதை: கௌசிகன்
சித்திரம்: விநு
நீ சொன்ன அந்த மனிதர் இவர் தானா?
ஆமாம் டாக்டர். தொடையில் குண்டு துளைத்துக் கொண்டு போயிருக்கிறது. முகத்தில் கூட....
செய்தி இலாகாவைச் சேர்ந்த போட்டோ கிராஃபர் ரிப் போர்ட்டர் போலிருக்கிறது-ம். எல்லாம் தயாராயிருக்கிறதல்லவா?
எஸ், டாக்டர்.


நர்ஸ்.
அந்த நோயாளிக்கு கவனமாகக் கொடுக்க வேண்டும். அவருக்கு நினைவு வந்ததும் என்னிடம் வந்து சொல்.
ஆகட்டும், டாக்டர்...
சில மணி நேரங்களுக்குப் பிறகு..
டாக்டர் அந்தப் பேஷண்ட் கண்ணைத் திறந்து பார்த்து முனகினார்.
இதோ வருகிறேன்.
டாக்டர் இனி மேல் நான் பிழைக்கமாட்டேன்.
அந்த முறையைச் சொல்லும் உரிமை எல்லோருக்கும் கிடைக்காதே அப்பா! வீணாக உணர்ச்சி வசப் படாதே. அமைதியாகத் தூங்கு.
என் மனைவி... அவளுக்கு நான் துரோகம் செய்துவிட்டேன்...
இது விடட்டும் போகட்டும். உங்களைக் கைவிடாது நான் கொண்டிருக்கிறேன்.
டாக்டர் உங்களைப் பார்த்தால் தமிழ் நாட்டைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. என் ஊரும் சிதம்பரம்!
ஆமாம்.
எனக்கு ஒரு உதவி செய்வீர்களா டாக்டர்?
சொல்லுங்கள் முடியுமானால் மறுக்க மாட்டேன்.
என் மனைவியை நான் வெறுக்கும்படி என் மனதைக் கலைத்துச் சூழ்ச்சி செய்து விட்டார்கள் என் சகோதரர்கள். நானும் அதிலிருந்து அவளை நம்பி அவளுக்கு அநீதி இழைத்து விட்டேன் டாக்டர்...
இருக்கட்டும்...! இந்த நிலையில் நீ அதிகம் பேசக் கூடாது.
இனி எந்த நிலையும் என்னை மீட்க முடியாது டாக்டர். நான் சொல்லுவதை எழுதிக் கொள்ளுங்கள். எனக்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் என் மனைவி மக்களைச் சேர வேண்டும். இதற்கான பத்திரத்தை அவளிடம் ஒப்படைக்க வேண்டும்.



நான், அவளை அப்படியே தாங்கிக் கொள்.
என் மனைவியிடம் மறைக்காமல் சொல்லுங்கள்... நான் கடைசிவரை அவள் நினைவாகவே....
டாக்டர்.
அன்று மாலையே...
டாக்டர், இன்னும் சில மணிகளில் இந்த மையைக் காலி செய்து விட்டுக் கிளம்பி ஆக வேண்டும்
ம்... இல்லை.. அந்த
வேண்டுமோ...?

தொடரும்


எஸ்ட்ரெலா
உங்கள் டார்ச்சில் இருந்தால்
இரவும் பகலாகிறது
112
ESTRELA
YOUR GUIDE
IN DARKNESS
BOMBAY 19
113
ESTRELA
LONG LIFE
எஸ்ட்ரெலா
பிளாஷ்லைட் செல்கள் பாட்டரிகள்
டார்ச்கள் மற்றும் பல்புகள்

18 அறிவுக் கனலே, அருட்புனலே!

சாஸ்திரங்களையும், ஆசார அநுஷ்டானங்களையும் மீறி அன்பு மயமாக வழிபடும் ராகாத்மிக பக்தியில் அம்பிகையை ஆராதித்து வந்தார் கதாதரர். சாஸ்திரங்களும் ஆசார அநுஷ்டானங்களும் தவறு என்ற நினைவில் அவர் அவ்வாறு செய்யவில்லை. மீறிக்கொண்டு வரும் அன்புப் பிரவாகத்தை எந்த விதி முறைகளாலும் கட்டுப்படுத்த இயலாத காரணத்தாலேயே அவர் சம்பிரதாயமான சடங்குகளை நீத்தார். கதாதரரைப் போல உளமார்ந்த பகவத் - பிரேமை கொள்ளாத நாம் அவரை முன்னோடியாகக் கொண்டு சாஸ்திர சம்பிரதாயங்களை விலக்கிப் பூஜை செய்ய அருகதை பெற்றவர்களல்ல. காய் தோன்றத் தொடங்கியவுடன் தானகப் பூவிதழ்கள் சுருங்கி, கருகி விழுவது போல கதாதரருடைய யத்தனமும் சங்கல்பமும் இன்றியே பூஜா கல்ப விதி-நிஷேதங்கள் அவரிடமிருந்து நழுவின.

இதயம் மலர மலர வெடிக்கும் அட்டகாச ஆனந்தச் சிரிப்பும், அதே இதயம் விண்டு பிளக்கப் புறப்படும் தீனமான கேவலும் தக்ஷிணேசுவர ஆலயத்தை மாற்றி மாற்றி நிரப்பின. அம்பிகையைக் கண்டால் மட்டும் தோன்றக் கூடிய ஆனந்தச் சிரிப்பு அது. அப்படிப்பட்ட ஆனந்தத்தை அளிக்கும் அம்பிகை மறைந்தால் மட்டுமே தோன்றக் கூடிய சோகக் கேவல் அது.

அரைக் கணம் கூட முறிவு படாது அம்பாளைக் கண்டு கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்பிய கதாதரருக்கு நாள் கணக்காகத் தரிசனம் தராமல் அம்பிகை நைய வைத்ததுமுண்டு.

குலையில் அம்புண்ட கர்ப்பிணி மான் போல அந்தி வேளைகளில் கதாதரர் விம்ம முடியாமல் விம்மி, துடிக்க முடியாமல் துடித்து, பேச முடியாமல் பேசி முறையிட்டுச் சோக சிந்துவில் கரைவார்.

''சர்வேசுவரி! உன்னைக் காணாமலே என்னுடைய ஆயுளில் மேலும் ஒரு நாள் தேய்ந்து விட்டது. நான் என்ன செய்வேன் தாயே? வள்ளிசாக ஒரு முழுதினம் உன்னுடைய தரிசனம் இல்லாமல் கழிந்து விட்டதே'' என்று துக்கத்தில் திக்கித் திணறுவார்.

தெய்வத்தைப் பற்றிப் 'பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' என்றார் தமிழ் ஞானி. தெய்வத்துடன் பேசாத நாள், தெய்வத்தைக் காணாத நாளெல்லாம் பிறவா நாளே என்று ஏங்கினார் தக்ஷிணேசுவரத்துத் தவ முனிவர்.

திருவிழாக் கூட்டத்தில் அன்னையின் கைவிரலைப் பிடித்துச் செல்கிற குழந்தை போல நானா வித உணர்வுக் கூட்டத்துக்கிடையே அம்பிகையின் விரலைப் பிடித்துக்கொண்டு சென்றார் குழந்தை கதாதரர். குழந்தையின் கைபட்டு வேர்வை கசிகிற போதுகளில் தாயார் தன் விரலைச் சற்றே நீக்கிக் கொள்வாள் அல்லவா? அதே போல அம்பிகைக்குக் கூட வேர்த்துவிடும்போல இருக்கிறது. அவள் கையை உதறிய அந்தச் சமயங்களில் கதாதரர் திக்குத் திகந்தம் தெரியாமல் திண்டாடினார்.

''என் கையை விட்டு விடாதே! பிடித்துக்கொள்! நீ பிடித்துக்கொள்ளா விட்டாலும் நான் பிடித்துக்கொள்வதையேனும் உதறாதே'' என்றெல்லாம் வாய் விட்டு அலறுவார் கதாதரர்.

இந்தப் பொருமலையும் அதன் மறைவில் பிறக்கும் ஆனந்த கோஷத்தையும் கேட்டுக் கேட்டுத் தக்ஷிணேசுவர ஆலயத்தினர் நாளுக்கு நாள் அதிக அச்சம் கொள்ளலாயினர். பைத்தியம் முற்றிக்கொண்டே வருகிறது என்பது தான் அவர்களுடைய தீர்மானமான முடிவு.

பட்டாசாரியரின் 'பைத்தியக்காரச் செயல்'களைப் பற்றி அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னவுடன் மதுரா நாதரின் மனசிலுமே சந்தேக மேகங்கள் மெல்ல மெல்லப் பரவலாயின. 'இவ்வளவு பேரும் சொல்வது தவறாக இருக்குமா? அவர் பக்தி நிரம்பப் பெற்றவர் தான். தெய்வ தரிசனம் பெற்றிருக்கக் கூடியவர் தான். என்றாலும், பக்தர் ஒருவருக்குப் பைத்தியம் பிடிக்கக் கூடாது என்று உண்டா என்ன?' என்று எண்ணலானார் மதுராநாதர்.

கதாதரரை அடிக்கடி வந்து காணலானார். அவருடன் உரையாடினார். அப்போதெல்லாம் கதாதரர் மிகவும் புத்திகூர்மையுடனும் உணர்ச்சிகள் சமநிலை பிறழாமலும் இருந்ததைக் கண்டு அதிசயித்தார். ஆங்கில மனோதத்துவ நூல்களில் சிறிது அறிவு பெற்றிருந்த மதுர் பாபு, கதாதரருக்கு ஏதோ மனோதத்துவக் கோளாறுதான் ஏற்பட்டுள்ளது என்று நினைக்கலானார்.

கதாதரரின் ஈசுவர பக்தியை எப்படியேனும் குறைத்தால்தான் அவரது



சித்தம் சரியாகும் என்று எண்ணினார் மதுராநாதர்.

எனவே அம்பிகை சர்வ சக்தி பொருந்தியவள் அல்ல என்பதுபோல அவர் ஒரு நாள் கதாதரரிடம் பேச்சு எடுத்தார்.

"அம்பிகையும் விதிகளுக்குக் கட்டுப் பட்டவள்தான். சிவப்புப் புஷ்பம் பூக்கிற செடியில் சிவப்புப் புஷ்பம்தான் பூக்கும். அம்பிகையால் அதில் வெள்ளை மலரைப் பூக்க வைக்க முடியாது" என்று தொடங்கினார் மதுராநாதர்.

கதாதரர் சிரித்தார்.

அம்பிகையால் முடியாதது உண்டா? உலகம் ஒரு ரீதியில் இயங்குவதற்காக, உலகம் ஓர் ஒழுங்கில் வாழ்வதற்காக அல்லவா அவள் இயற்கை என்ற பெயரில் கட்டுத் திட்டங்கள் செய்திருக்கிறாள்? இதனில் இதைக் காண லாம்; இதைச் செய்தால் இது நிகழும் என்ற காரண காரியத் தொடர்பு இல்லாவிட்டால் மக்கள் எல்லோரும் வாழ்க்கையில் எப்படி ஊன்றி நிற்க முடியும்? காற்றில் கிழித்துப்போட்ட காகிதத் துண்டுகள் போல் அவர்கள் நிலையில்லாமல் அம்பிகையின் மாயா வீச்சில் தத்தளிக்க வேண்டி நேரிடும் அல்லவா? உலகமே மாயைதான். ஆனால் அந்த மாயையும் ஓர் ஒழுங்கில், ஓர் அழகில், ஒழுங்கு செய்யப்பட்ட அழகில்தான் விரிந்திருக்கிறது. கரையில்லாத கடல் தன்னிச்சையாகக் கட்டுப்பட்டிருப்பது போல் தனது சக்திக்கு வரம்பு இல்லா விடினும் தானாக அதைக் கட்டுப் படுத்திக்கொண்டு அந்தக் கட்டுப் பாட்டிலேயே தனது சுதந்திரத்தை அலையெறிந்து விளையாடிவருகிறாள் அம் பிகை. வரையறை இல்லாவிட்டால் அழகு ஏது? ஆனால் அது புறத்தே இருந்து திணித்த வரையறை யல்ல. அகத்தே பிறந்த தர்மத்தின் வரை யறையாகும். ஆரோஹண அவ ரோஹணங்கள் வரையறை செய்யப் பட்டவை நமது ராகங்கள். ஒரு ஸ்வரம் பிசகானாலும் தமது ஸ்வரூபமே குலைந்து போகும் இயல்பு படைத்தவை நமது ராகங்கள். அப்படி வரையறைக்கு அடங்கி யிருந்த போதிலும் அவற்றில் இசைக் கலைஞர் தமது கற்பனைச் சுதந்திரத்தைப் பூரணமாகக் காட்ட

முடியவில்லையா? சுதந்திரம் வேண்டும் என்பதற்காக ஸ்வரங்களையே வரை யறை செய்யாவிட்டால் சங்கீதம் ஏது? அகில பிரபஞ்சமும் அம்பிகையின் சங்கீதம். விதி முறைகளுக்கு அடங் கியே சுதந்திர இனிமை கசியும் சங்கீதம் அது. எனினும் அன்ய ஸ்வரங்களைச் சில ராகங்களில் மூர்ச்சை காட்டி அவற்றுக்குத் தனி அழகு கூட்டுவது போல விதி முறைகளில் எப்போ தேனும் மாறுபாடு காட்டியும் அவள் அற்புதம் நிகழ்த்துவாள். இந்த அற் புதங்களுக்கெல்லாம் மேலான அற் புதம் இவ்வளவு அபரிமிதமான ஆற் றல் படைத்த பராசக்தி அற்புதங் களைச் செய்யாமல் அழகுக்கு அடங்கி நடப்பதுதான்.

எளிமையின் உருவான கதாதரர் இந்தச் சிக்கலான எண்ணங்களையெல் லாம் எண்ணி யிருப்பாரோ மாட் டாரோ ? எண்ணி யிருந்தா லும் அவர் அதை மதுராநாதரிடம் விவரித்துக் கூறவில்லை.

வெறுமே சிரித்தார்.

மறுநாள் மதுராநாதரை ஆலயத் தோப்புக்குள் மௌனமாக அழைத் துச் சென்றார் கதாதரர்.

காட்டுச் செடியொன்றை அவருக்கு மௌனமாகச் சுட்டிக் காட்டினார்.

மதுராநாதரின் கண்கள் வியப்பில் விரிந்தன.

ஒரே செடியின் இரு வேறு கிளை களில் ஒன்றில் செக்கச் சிவந்த மலரும் இன்னொன்றில் தூய வெண் மலரும் பூத்திருக்கக் கண்டார். செம்மை செழித்த ராஜேசுவரியும், வெண்மை விம்மும் ஈசுவரனும் போல அவை பட்டாகத் திகழ்ந்தன.

அன்ய ஸ்வரத்தின் இனிமையை இசைத்துவிட்டாள் தேவி!

அதன் பின் அம்பிகையின் சர்வ வல்லமையைப் பற்றி மதுராநாதர் தாழ்த்திப் பேச முடியுமா?

இருந்தபோதிலும் கதாதரருடைய மனசைத் 'தெளிவிக்க' ஏதேனும் உபா யம் உண்டா என அவர் சிந்தித்த படியே இருந்தார்.

''பாபு, இன்றைக்குப் பட்டாசாரியர் தாமே பூஜா பீடத்தில் உட்கார்ந்து கொண்டார். தமக்கே அபிஷேகம் செய்துகொண்டார். அர்ச்சனையையும் தமக்கே செய்து கொண்டார். தமக்குத் தாமே நிவேதித்துக் கொண்டு நைவேத் தியங்களை உண்டார்.''

''பாபுஜி, பட்டாசாரியர் படுத் தும்பாடு தாளவில்லை. நேற்று இரவு மூன்று மணிகள் விடாமல் மணி யடித்து ஆரத்தி செய்தார். கோயிலில் யாருக்கும் தூக்கமே இல்லை.''

''பட்டாசாரியர் செய்வதை யெல் லாம் பார்த்தால் எங்களுக்கே பைத் தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது. பாபு! எங்களால் அமைதியாக வாழவே முடியவில்லை.''

—கோயில் சிப்பந்திகள் இவ்வாறு மதுராநாதரிடம் ஓயாமல் ஒழியாமல் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். மதுராநாதரும், ராஸமணியும் இது பற்றி ஆலோசனை செய்தார்கள்.

பயங்கரமான ஒரு முடிவுக்கு வந் தார்கள்.

பரமபாவனமான கதாதரரைப் புல னின்பத்துக்கு ஆளாக்கினால்தான் அவ ருடைய உணர்ச்சிப் பெருக்குக்கு ஒரு வடிகால் ஏற்படும்; அதன் பின் அவர் அடங்குவார் - என்ற தூய்மையற்ற யோசனையை இருவரும் செயலாக்க நினைத்தார்கள்.

பெண் ஆசை என்ற எண்ணமே எழாத நிர்மலரிடம் லக்ஷ்மிபாய் என்ற புகழ் பெற்ற நாட்டிய மாதையும் அவளது தோழிகளையும் அனுப்பி வைத்தார்கள்.

அவர்களைக் கண்டவுடன் கதாதர ரின் இதயம் குதூகலித்தெழுந்தது.

'ஆகா, ஒரே ஓர் அம்பிகையின் தரி சனத்துக்காக நான் துடிக்கிறேன். இதோ ஒன்றில்லை, இரண்டில்லை, பத்து பன்னிரண்டு அம்பிகைகளல்லவா என் னைத் தேடி வந்திருக்கிறார்கள் ?'

''தாயே ஜகதீசுவரி! தாயே சர்வேசு வரி!'' என்று தொண்டையில் சிக்கிய வார்த்தைகளுடன் அவர்களை வர வேற்ற கதாதரர், பலப் பல அம் பிகைகள் தம்மைச் சூழ்கிற ஆனந்த அமுதத்தைத் தாங்க வொண்ணாமல் சுய நினைவு இழந்தார்.

லக்ஷ்மி பாய் விதிர் விதிர்த்துப் போனாள்.


உடன் வந்தவர்கள் விக்கித்துப் போனார்கள்.

அவருடைய பரிசுத்த எண்ணத்தின் அடர்த்தியில் க்ஷண காலத்துக்கு உண் மையாகவே அவரைத் தங்கள் குழந் தையாக எண்ணினார்கள்.

மறு கணமே அவருக்குக் குழந்தைக ளானார்கள்.

''புனிதம் வாய்ந்த தந்தையே! எங்கள் அபசாரத்தைப் பொறுத்து மன்னித்தருளுங்கள்'' என்று அவர் பாதத்தில் விழுந்து பணிந்து புறப் பட்டார்கள்.

காமத் தீயால் பக்திக் கடலைப் பற்ற வைக்க முடியுமா என்ன? கடலில் விழுந்த திவர்த்திகளாகத் தங்கள்



ஒரு கிளாஸ்

கிஸான் ஸ்க்வாஷ்

அருந்தி இளைப்பாறுங்கள்




சுவைமிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.

திடீரென்று வரும் விருந்தாளிகளுக்கென்றே தனியாக ஒரு பாட்டில் கிஸான் வைத்திருங்கள்.

ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது கிஸான் ஸ்க்வாஷ். மற்ற எல்லா ஸ்க்வாஷ்களையும்விட கிஸான் ஸ்க்வாஷ்தான் இந்தியாவில் அதிகமாக விற்பனையாகிறது.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்



பிச்சைக்காரன்: ஐயா! சாமீ!... நேத்து ராத்திரி உங்க வீட்டுக்கார அம்மாதான் அடை கொடுத்தாங்க. சாப்பிட்டேன். இப்ப ஒரு புட்டி வயித்து நோவு மருந்து கொடுத்திங்கன்னு ரொம்பப் புண்ணியமாயிருக்குமுங்க.

வெறி அவிந்து திரும்பினார்கள் அந்தக் கணிகையர்.

பஞ்சவடிக்கு அருகேயிருந்த குட்டையொன்றைத் தோண்டி ஆழப்படுத்தும் வேலை தொடங்கியது. மண்ணை வாரிக் கொட்டி நிலத்தைச் சமன் செய்யும் போது, கதாதரர் நள்ளிரவில் தியானம் புரியும் நெல்லி மரத்தை வெட்டி விட்டார்கள். பஞ்சவடி போய் விட்டது. அதன்பின் கதாதரர் தமது திருக்கரத்தாலேயே அவ்விடத்துக்கு மேற்கே ஓர் அத்திச் செடியை நட்டார். ஸ்காந்த புராணம் கூறும் முறையில் அத்துடன் ஆல், அசோகம், வில்வம், நெல்லி ஆகிய செடிகளையும் ஹிருதயரைக் கொண்டு நடச் செய்தார். இந்த ஐந்து செடிகள் வளர்ந்தே பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தர்களுக்குப் புனிதமான புது பஞ்சவடியாயிற்று. பர்த்தாவரி என்ற தோட்டக்காரனுடன் சேர்ந்து துளசிக் கன்றுகளையும், அபராஜிதக் கொடிகளையும் தாமே நீருற்றி வளர்த்தார் கதாதரர். அந்தத் தங்கக் கையின் விசேஷம் அவை கிளுகிளு என்று வளர்ந்தன. சிறிது காலத்திலேயே அந்த நெரிசலான லதா மண்டபத்தில் யாரும் காணாதபடி கதாதரர் தியானம் புரியலானார்.

ராஸமணியும் மதுராநாதரும் பட்டாசாரியரின் பெருமையை உணரத்தான் செய்தார்கள்.

என்றாலும் பவதாரிணிக்கு முறைப்படி பூஜை நடக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். கதாதரருக்கு அவள் பிரத்தியக்ஷமானாலும்கூட, மற்ற மக்கள் அவளை வழிபட வேண்டுமானால் எல்லா ஆலயங்களிலும் போல் தக்ஷிணேசுவரத்திலும் ஆராதனை நடக்க வேண்டியது அவசியம் என்று எண்ணினர்.

கதாதரரால் முறைப்படி பூஜை செய்ய முடியவில்லையே என்று மதுரா நாதர் விசனித்த சமயத்தில் கதாதரரே அதனை உணரத் தொடங்கினார். ''இனி ஹிருதயர் பூஜை செய்யட்டுமே' என்று அவராகவே மதுரா நாதரிடம் கூறினார். பூஜை செய்யாமலே அம்பிகையை ஆராதிக்க முடியும் என்ற நிலையை அவர் அடைந்து விட்டார் போலும்! எனவே, தாமாக அந்தத் திருப்பணியை விட்டுக் கொடுத்தார். எனினும் அவர் தக்ஷிணேசுவரத்திலேயே தங்கி யிருந்தார். ராஸமணி குடும்பத்தினர் அவரை அன்புடன் பேணி வந்தனர்.

மதுராநாதரின் விருப்பத்துக்கிணங்க கங்கா பிரஸாத் ஸென் என்ற ஆயுர்வேத வைத்தியரிடம் தமது 'வியாதி'க்கு மருந்து சாப்பிடலானார் கதாதரர். 'அருமருந்தொரு திருமருந்து' என்று கோபால கிருஷ்ண பாரதியார் பாடிய ஔஷதம் ஒன்றே அல்லவா இவருக்கு வேண்டியிருந்தது?

தாற்காலிகமாக ஹிருதயர் பூஜை செய்து வந்தார். அதன்பின் கதாதரரின் உறவினரான ராமதாரக் சட்டோபாத்தியாயர் பூஜகராக நியமிக்கப் பெற்றார். ராமதாரகரை கதாதரர் ஹலதாரி என்றே சொல்வது வழக்கம். நாமும் அவரை அப்படியே அழைக்கலாம்.

ஹலதாரியின் போக்கே விசித்திரமானது. வைஷ்ணவ பக்தி அதிகம் உள்ள அவர் சிறிது காலமே பவதாரிணிக்கு மனமொப்பிப் பூஜை செய்ய முடிந்தது. பிறகு அவர் ராதா கோவிந்தனைப் பூஜிக்கத் தொடங்கினார். ஹிருதயர் அம்பாளின் வழிபாட்டை நடத்தினார்.

காமார்புகூரில் சந்திரா தேவி தனது வயோதிக தசையில் கதாதரரின் 'பைத்தியத்'தைப் பற்றிக் கேள்விப்பட்டு வேதனையில் வாடினாள். தனது அருமை மகனை — அவனைக் குறித்து அவளும் அவளது கணவரும் தங்களது கனவிலும் நனவிலும் எத்தகைய அற்புதங்களை அறிந்திருந்தார்கள்? — காமார்புகூருக்கு வரவழைத்து உடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தாய்ப்பாசம் தூண்டியது.

ஹலதாரி ராதா கோவிந்தனின்பூஜையையும் ஹிருதயர் பவதாரிணியின்பூஜை

மையையும் ஏற்று நடத்தி வந்த படியால் கதாதரருக்கும் தக்ஷிணேசுவரத்தில் இருந்துதானாக வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை.

ஆனபடியால் அவர் 1858ம் ஆண்டு முடிவில் தாம் பிறந்து வளர்ந்த மண்ணாகிய கமார்புகூருக்கு வந்து சேர்ந்தார். தங்கள் கதாயி இப்படி மாறிப் போனதைக் கண்டு ஊரே அதிசயமும் வேதனையும் கொண்டது. வைத்தியத்தோடு மாந்திரீகமும் செய்தனர் வீட்டினர். இந்த 'வியாதி'யும், 'பிசாசு'ம் அதற்கெல்லாம் மசிந்து கொடுக்குமா?

கதாதரர் சந்திராவாகிய அம்மாவை விட வேறான இன்னொர் அம்மாவை நினைத்துக் கதறிக் கொண்டே இருந்தார். கமார்புகூரின் கிழண்டைப் புறத்திலும் மேலண்டைப் புறத்திலும் உள்ள மயானங்களுக்கு அடிக்கடி சென்று போதைக் கழித்தார்.

அப்போதெல்லாம் அவர் அற்புதமான தெய்விக அநுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும்! அம்பிகை தம்மை எப்போதும் காப்பாள் என்ற திடமான நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும். இது காரணமாக அவருடைய கொந்தளித்த உள்ளம் சாந்தி பெற்றதால் அவருடைய மெலிந்த உடல் சற்றே தேறத் தொடங்கியது. 'வெறி'யும் சமனமாகி வந்தது.

தங்கள் அருமை கதாயி ஊர் உலகத்தாரைப் போல ஆகி வருவதைக் கண்டு மகிழ்ந்த உறவினர், ஊர் உலகத்தினரைப் போல அவருக்கும் ஒரு கால்கட்டுப் போட்டுவிட வேண்டும் என்று எண்ணினர். முன்பு ராஸமணியும், மதுராநாதரும் எண்ணியது போலவே, பிரம்மசரியம் அவரது உடல் நிலையைப் பாதிக்கும் என்ற விசித்திரமான எண்ணம்கொண்ட அவர்கள் கதாதரருக்குக் கலியாணம் செய்து பார்க்க எண்ணினார்கள். அவருக்கும் அப்போது இருபத்து மூன்று வயசாகி விட்டது.

வரதட்சிணை—அல்லது வதூ தட்சிணை கொடுக்க வசதியில்லாததால்தான் இத்தனை நாளாக அவரது திருமணத்தைப் பற்றி அன்னை சந்திராவும், அண்ணன் ராமேசுவரரும் நினைக்க வில்லை. இப்போது அவர்கள் பெண் தேட முனைந்தார்கள்.

விந்தையிலும் விந்தையாக கதாதரர் இந்த உத்தேசத்தை எதிர்க்கவே இல்லை. இதன் காரணத்தைப் பின்னரும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெரிவிக்க வில்லை. ஆனால் நாம் ஒருவாறு அதனை ஊகிக்கலாம்.

எல்லா விஷயங்களிலும் அம்பிகையைக் கலந்தாலோசித்த கதாதரர் தமது கலியாண விஷயமாகவும் அவளைக் கேட்டுத்தான் இருப்பார். ஆஹா! 'அம்பிகையைக் கலந்தாலோசிப்பது' என்று எழுதும் போதே எத்தகைய புனித உறவு நெஞ்சில் நிறைகிறது! நாம் ஏதேனும் ஒரு பிரச்னை யென்றால் நம் அன்னையிடம் அதனைக் கூறி யோசனை





தந்தை: அழாதேடா! எதற்காக அழறே! இந்தாடா காசு. சாக்லேட் வாங்கித் தின்னு. அழாதே!

பையன்: (காசை வாங்கிக்கொண்டு) ஆனாலும் அப்பா, என்னால் அழாமல் இருக்க முடியாது— எங்கள் பள்ளிக்கூடத்து நாடகத்தில் அழுகைக் காட்சிக்காக நான் ஒத்திகை செய்தாக வேண்டுமே!

கேட்பது போலவே கதாதரர் சர்வசகஜமாக எந்த ஒரு சிக்கலையும் உலக அன்னையிடம் எடுத்துச் சென்றார். அவருடைய நம்பிக்கையானது அந்த அன்னையை— நம் அன்னை நம்மிடம் பேசுவது போல்— அவருடன் சகஜமாகப் பேச வைத்தது.

அம்பிகை நீண்ட நாட்களாக உலகுக்கு அறிவிக்க எண்ணிய ஓர் ஒப்புயர்வற்ற பரிசுத்த வாழ்வை இவர் மூலம் நிகழ்த்திப் பார்க்க வேண்டும் என்று திருவுளம் கொண்டிருக்க வேண்டும். 'கலியாணம் செய்து கொண்டு, மனைவியைப் பக்கலில் வைத்துக் கொண்டே மனிதனால் இயற்கை வேகத்தை வென்று வாழ முடியும்; மனிதன் மிருக தர்மத்தை வென்று தெய்வத்தின் தூய்மையுடன் வாழ முடியும்' என்பதை கதாதரர் மூலம் இந்தக் கேளிக்கை உலகுக்கு நிரூபிக்க வேண்டும் என்று அவள் சித்தம் கொண்டிருக்க வேண்டும். அதனை அவருக்குத் தெரிவித்திருக்க வேண்டும்.

இதனால்தான் புலனின்பத்தைப் பற்றிக் கனவிலும் நினையாத கதாதரர், பெண்களையெல்லாம் அம்பிகையின் பல உருவங்களாக அன்றி வேறு விதத்தில் காண இயலாத கதாதரர், விவாகம் புரிந்து கொள்ள எடுத்த எடுப்பிலேயே இணக்கம் தெரிவித்தார்.

அதோடு மட்டுமின்றி, பெண்ணுக்காகத் தேடிக் கொண்டிருந்தவர்களிடம் ''ஏன், எங்கெல்லாமோ தேடி அலைகிறீர்கள்? ஜயராமவடியில் ராமச்சந்திர முகோபாத்யாயர் வீட்டில்தான் எனக்கான பெண் தலையில் வைக்கோல் துரும்புடன் காத்துக் கொண்டிருக்கிறாள்'' என்றார்.

வங்காளத்தில் வெள்ளரி, கக்கரி முதலியவற்றில் செழுமையாக வளரும் காய்களைக் கனிந்தபின் ஆண்டவனுக்கு நிவேதிப்பதாக வேண்டுதல் செய்து கொள்வது வழக்கம். ஆண்டவனுக்கெனக் குறிப்பிட்ட காயை வேறு காரியத்துக்காகப் பறித்து விடாமல் இருப்பதற்காகக் கொடியிலேயே அதனை வைக்கோலால் சுற்றி அடையாளம் செய்வார்கள். இதே போலத் தமக்கென்றே ஒரு பெண் பிறந்திருப்பதைத்தான் கதாதரர் 'தலையில் வைக்கோலுடன்' என்று கூறினார்.

அந்தப் பெண்ணின் பெயர் சாரதாமணி. கதாதரருக்கு இருபத்து மூன்று பிராயம் நிறைந்திருந்த அப்போது அவள் அஞ்சு வயசுப் பிஞ்சுதான். புஷ்பங்களின் நிர்மலத்தைப் பார்த்துப் பார்த்து 'நானும் இப்படி ஒரு புஷ்பமாக இருக்கக் கூடாதா?' என்று ஏங்கும் தூய குழந்தையாக அவள் வளர்ந்து வந்தாள். ஏழைக் குடும்பத்தில் பிறந்ததால் ஊழியமே உருவமாக வளர்ந்து வந்தாள். தனது கழுத்தளவு நிற்கும் நீரில் இறங்கிக் கோரைப்புற்களை அறுத்து மாடுகளுக்குப் போட்டும், நிலத்தில் வேலை செய்வோருக்குப் பகல் உணவு எடுத்துச் சென்றும் பொழுதைப் போக்கி வந்தது குழந்தை சாரதை. ஓய்ந்த போதில், முன்பு கதாதரர் செய்தது போலவே தெய்வங்களின் பொம்மைகளைப் பூஜித்து வந்தது.

இந்தக் குழந்தையின் தூய்மையும், சேவை மனப்பான்மையும், பக்தியும் மேலும் மேலும் வளரவே கதாதரருக்காக அம்பிகை அவளைத் தேர்ந்தெடுத்து அவர் வாயிலாகவே தெரிவித்தாள்.

நிச்சயதார்த்தமாயிற்று. ராமச்சந்திரருக்கு ராமேசுவரர் முந்நூறு ரூபாய் வரதட்சிணை கொடுக்க இசைந்தார்.

கமார்புகூருக்கு நாலு மைல் மேற்கேயுள்ள ஜயராம்வடிக்கு அண்ணனும் தம்பியும் சென்றார்கள்.

உலகத்தின் தாம்பத்திய வாழ்விலேயே ஓர் ஒப்புவமையற்ற அற்புதமாக விளங்கப் போகிற சரித்திரமானது, உலகம் அறியாத ஏழை வீட்டுக் கலியாணமாக நடந்தேறியது.

1859ம் ஆண்டு மே மாதம் குழந்தை சாரதாமணி கதாதர சட்டர்ஜியின் பத்தினியானாள்.

நெய் விளக்கு தெய்வ சந்நிதிக்கு வந்து சேர்ந்தது. (தொடரும்)

சிகரெட்டிற்கு
சிகரெட்
சிகரெட்டிற்கு
சிகரெட்





அவைகள் நல்லவை—
அவைகளே

வில்ஸ்*

நேர்த்தியான சர்வதேசடிஸைன்
கொண்ட பாக்கெட்டில்

* ஒவ்வொரு வில்ஸ் பாக்கெட்டிலுமுள்ள நட்சத்திர சின்னம் W.D. & H.O. வில்ஸின் புகழ்பெற்ற தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.

20 சிகரெட்டுகள் ரூ. 1.20 ந.பை.
10 சிகரெட்டுகள் 60 ந.பை.
1 சிகரெட்டு 6 ந.பை.
உள்ளூர் வரிகளுக்கு உட்பட்டது

JWTW 350

கண்ணீர் வடிக்கும் மரத்தின் கதை!

வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்தது. உபாத்தியாயர் உலகில் முத்தொழில்களை நடத்தும் கடவுள் தன்மையைப் பற்றிப் போதித்துக் கொண்டிருந்தார். ரமணி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அதைக் கண்ட அவர், ''யார் யார் எந்த எந்தத் தொழில்களைச் செய்கிறார்கள், ரமணி நீ சொல் பார்க்கலாம்'' என்றார். விஞ்ஞான உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த ரமணி திடுக்கிட்டு எழுந்து நின்றான். உடனே அவனையறியாமல், ''ஆக்கல் தொழிலைச் செய்வது காகிதப் பென்சில், 'காத்தல்' தொழிலைக் காகிதம் செய்கிறது. 'அழித்தல்' தொழிலை ரப்பர் கவனித்துக் கொள்கிறது'' என்றது அவன் வாய். ரமணியின் பதில் குயுக்தியாக இருந்தாலும் அதை ரசித்த உபாத்தியாயர் சிரித்து விட்டார்.





ரமணி சொன்னதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது? அழிக்கும் காரியத்தை (பென்சிலால் எழுதியதை) ரப்பர் செய்தாலும் அது இல்லாத இன்றைய உலகத்தை நம்மால் நினைத்துப் பார்க்கவும் முடியுமா? ரப்பர் இல்லாவிடில் மோட்டார்களும் சைக்கிள்களும் இப்படி ஓட முடியுமா?

சுருங்கி விரியக் கூடியதும், தண்ணீரால் பழுதாக்க முடியாததும், உறுதியானதுமான ரப்பர் என்ற பொருள் எதிலிருந்து செய்யப்படுகிறதென்று உங்களுக்கெல்லாம் தெரியும். முதன் முதலில் ரப்பரின் உபயோகத்தைத் தென் அமெரிக்கர்கள்தான் அறிந்திருந்தார்கள். 450 வருஷங்களுக்கு முன்புதான் இதைப் பற்றி உலகின் மற்றப் பாகத்தினருக்குத் தெரியலாயிற்று. இருந்தாலும் கடந்த நூறாண்டுகளாகத்தான் ரப்பரைப் பூரணமாக மனிதன் பயன்படுத்தி வருகிறான்.

தங்கம் வெள்ளியைத் தேடி அலைந்த ஸ்பானிஷ்காரர்கள் தென் அமெரிக்காவின் கிராமங்களைக் கொள்ளை அடிக்கச் சென்றபோது அங்கு சில குழந்தைகள் உருண்டையான பந்து போன்ற பொருள்களை வைத்துக் கொண்டு விளையாடுவதைக் கண்டார்கள். 'அந்தப் பொருள் பூமியில் பட்டதும் எம்பிக் குதித்து மறுபடியும் எறிந்தவரின் கைக்கே போவதைக் கண்டு வியந்தனர். அந்த விந்தைப் பந்து மிருதுவான ஒரு பொருளால் ஆனதையும், அந்தப் பொருள் ஒரு மரத்தின் பாலிலிருந்து கிடைக்கிறது என்பதையும் அறிந்து கொண்டார்கள். ஒரு சுதேசிப் பையன் ரப்பர் மரத்தின் பட்டையைக் கீறிப் பால் வடிவதைக் காண்பித்தான். அந்தப் பாலிலிருந்துதான் குதிக்கும் அந்தப் பந்து உருவாக்கப்பட்டிருப்பதை அறிந்தார்கள் அவர்கள். தென் அமெரிக்க சுதேசிகள் இந்த மரத்தைக் கண்ணீர் வடிக்கும் மரங்கள் என்றழைத்தார்கள்.





கொஞ்சம் கொஞ்சமாக இந்த அற்புதப் பொருள் ரப்பரின் அதிசயமான உபயோகங்களை அறிந்த மேலை நாட்டினர் இதை அதிகமாக விரும்பலாயினர். ஆனால் தென் அமெரிக்கர்களோ இதைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கிக்கொள்ள நினைத்து ரப்பர் மரம் உலகின் வேறு எந்தப் பகுதியிலும் வளரக் கூடாது என்று திட்டமிட்டனர்.

ஆனால் அவர்கள் இட்டப்படி விட்டிருந்தால் இன்றைய வளர்ச்சியை ரப்பர் அடைந்திருக்க முடியுமா? 1870ல் ஹென்றி விக்ஹாம் என்பவர் மிகுந்த சிரமத்தின் பேரில் பிரேஸில் நாட்டிலிருந்து ரப்பர் மரத்தின் 70,000 விதைகளைத் திருடிக் கொண்டு வந்தார். இந்த விதைகள் இங்கிலாந்தில் கதகதப்பான சீதோஷ்ண நிலைக்குச் சீராக்கி அமைக்கப்பட்ட செயற்கைத் தோட்டங்களில் பயிரிடப்பட்டது. இதிலிருந்து 2000 செழிப்பான ரப்பர் மரக் கன்றுகள் உருவாயின. இவைகளைத் தென் அமெரிக்காவின் சீதோஷ்ணத்தை ஒத்த இலங்கைக்குக் கொண்டு வந்து வளர்த்தார்கள். இக்காரியம் மிகவும் ரகசியமாக நடந்தது. பின்னர் அங்கிருந்து ரப்பர் மரக் கன்றுகளை மலேயாவுக்குக் கொண்டு சென்று வளர்க்கலானார்கள். இன்று உலக ரப்பரின் பெரும் பாகத்தை மலேயாதான் விநியோகம் செய்கிறது.

ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு 30 டன் ரப்பர்தான் உற்பத்தி செய்யப்பட்டது. அது பிரேஸில் நாட்டில் உள்ள அமேஸான் காடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட ரப்பர்ப் பாலிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால் இன்றோ ஆண்டு ஒன்றுக்கு 2,000,000 டன்கள் இயற்கை ரப்பரும் 1,000,000 டன்கள் செயற்கை ரப்பரும் தயாராகின்றன. ரப்பர் மரத்திலிருந்து எப்படிப் பால் சேகரிக்கப்படுகிறது என்பதுதான் உங்களுக்கெல்லாம் தெரியும். மரத்திலிருந்து வடியும் இந்த வெள்ளை நிறப் பாலுக்கு 'லாடெக்ஸ்' என்று பெயர். மரத்தைக் கீறி வாய்க்கால்களை உண்டாக்குவதற்குத் திறமை வேண்டும். இத்தகைய திறமைசாலிகள் ஒரு நாளைக்கு

200 மரங்களைக் கீறுவார்கள். சிறிய கிண்ணத்தில் சேரும் ரப்பர் பாலைப் பெரிய பாத்திரங்களில் சேகரித்துக் கொண்டு போவார்கள். இந்த லாடெக்ஸ் பலவிதமான ரசாயன மாற்றங்களுக்குப் பிறகு நீங்கள் காணும் ரப்பர் பொருள்களாகிறது.

ரப்பர் உருகிய நிலையில் அத்துடன் கந்தகத்தைச் சேர்த்தால் அது எந்த சீதோஷ்ண நிலையிலும் ஒரே மாதிரியாகவும் இன்னும் உறுதியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதை 'சார்லஸ் குட் இயர்' என்பவர் கண்டுபிடித்தார். இதன் பிறகுதான் ரப்பரின் உபயோகங்கள் பன்மடங்காகப் பெருகலாயின.

ரப்பர் மரங்கள் ஏழாவது வருஷத்திலிருந்து பலன் தர ஆரம்பிக்கும். முப்பது வயது வரை இதிலிருந்து ரப்பர் பாலைச் சேகரிக்கலாம். ஒரு வருஷத்தில் ஒரு மரத்தில் சுமார் 150 வெட்டுவாய்களை உண்டாக்கலாம். அடி மரத்தில் மேலும் கீழும் சுமார் 12லிருந்து 15 அங்குலத்துக்கு விட்டு விட்டு மற்றப் பகுதிகளில் இந்தக் கீறல்களைச் செய்வார்கள். ஏழிலிருந்து பத்து வருஷங்களுக்குள் மறுபடியும் இந்த மரத்தின் பட்டைகள் புதிதாக வளர்ந்துவிடும்.


உலக ரப்பர் உற்பத்தியில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் நாடு இந்தோனேஷியா. அடுத்தபடியாக மலேயாவும் பர்மாவும். கடைசியாக இருப்பது எந்த நாடு தெரியுமா? எந்த நாடு உலகத்துக்கு ரப்பரை அறிமுகப்படுத்தியதோ அந்த நாடான லாட்டின் அமெரிக்காதான்!

விஞ்ஞான ஆராய்ச்சிகள் ரப்பரை எத்தனையோ விதங்களில் பயனுள்ளபொருளாக்கி வருகின்றன. உலகத்தின் தேவையை இயற்கை ரப்பர் ஈடுசெய்ய முடியாததால் செயற்கை ரப்பர் உற்பத்தியை மனிதன் காண வேண்டியதாயிற்று. இருந்தாலும் இயற்கை ரப்பருக்குள்ள மவுசு இதனால் குறைந்து விடவில்லை.


ரிக்ஷா பிறந்த விதம்

நல்லது எதையும் தன்னுடையதாக்கிக் கொண்டு அதை இன்னும் நல்லவிதமாக மலிவாகச் செய்து குவிப்பதில் — அதாவது காப்பி அடிக்கும் கலையில் — வல்லவர்கள் ஜப்பானியர்கள்.


மோட்டார், காமிரா, கடிகாரம் என்று இப்படிப் பல பொருள்களையும் காப்பி அடித்து அதுவும் பிற நாட்டை விட மலிவான விலையில் உற்பத்தி செய்யும் ஆற்றல் படைத்தவர்கள் ஜப்பானியர்.



ரிக்ஷாக்கள் ஜப்பானில் மிக அதிகம். ஆனால் இந்த வாகனத்தைக் கண்டுபிடித்தது ஜப்பானியர் இல்லை. 1869ல் ரெவரண்ட் ஜோனதன் கிராபின் என்ற வெள்ளைக்காரர் டோக்கியோவுக்குச் சென்றார்—மத போதகராக. இவருடன் இவரது மனைவியும் சென்றாள். அவள் உடல் நலமில்லாதவள். ஆகவே அவளை ஊர் சுற்றிக் காட்ட அழைத்துச் செல்ல கிராபின் ஓர் ஏற்பாடு செய்தார். ஓர் அமெரிக்கப் பத்திரிகையில் குழந்தைகளை வைத்துத் தள்ளும் 'பெராம்புலேட்டர்' ஒன்றின் படம் வெளியாகியிருந்தது. அதை மனத்தில் கொண்டு அதே போன்று பெரிய அளவில் ஒரு வாகனத்தைத் தயாரித்தார் அந்தப் பாதிரியார். வெயில் படாதிருக்க மூடியெல்லாம் வைத்து அமைத்த ரிக்ஷா அது. அதை இழுக்க ஜப்பானிய வாலிபன் ஒருவனை அமர்த்திக்கொண்டார். முதல் ரிக்ஷா இப்படித்தான் பிறந்தது. இதன் பிறகு ஜப்பானில் ஏராளமான ரிக்ஷாக்கள் தோன்றிவிட்டதோடல்ல; ரிக்ஷா வாகனத்தையே தங்களுடைய ஏகபோக உரிமையாக்கிக் கொண்டுவிட்டனர் ஜப்பானியர்.



ஏன், கீழை நாடுகளுக்கே, மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் இந்த ரிக்ஷாவை ஜப்பானியர்தான் பழக்கப்படுத்திவிட்டனர் என்றுகூடச் சொல்லலாம்.



உங்கள் ஆல்பத்துக்கு

ஒரு காலத்தில் "அபிசீனியா"வாக இருந்து இப்போது எதியோபியாவாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ள நாட்டைச் சேர்ந்த பழங்குடி மக்களான டாஸுவில், காலா ஆகிய இனத்தைச் சேர்ந்த இருவர் உங்கள் ஆல்பத்துக்காக இங்கு வந்து இப்படி நிற்கிறார்கள்!

இவற்றில் சரியான ஹமாம் சித்திரம் எது?

1



2



3



4



5



6



சுலபமான இந்த **ஹமாம்** போட்டி மாபெரும் ரொக்கப் பரிசுகளாக அளிக்கப்போகும் தொகை,

ரூ. 25,000

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவ்வளவே!

மேலே இலக்கமிடப்பட்ட ஹமாம் படங்கள் உள்ளன. யாவுமே ஒன்றுபோல் தோன்றலாம். ஆனால் இவற்றுள் ஒன்றுதான் சரியானது. வெள்ளைத் தாள் ஒன்றில் முத்து முத்தான எழுத்துக்களில் நீங்கள் எழுதவேண்டியவை:

(அ) சரியான ஹமாம் படத்தின் எண்.

(ஆ) 10 வார்த்தைகளுக்குள் அடங்கும்படியாக ஒரு விளம்பர வாக்கியம் (ஸ்லோகன்) கீழேயுள்ள மொழிகள் ஏதேனும் ஒன்றில் உங்கள் வாக்கியம் அமையலாம்:
ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

(இ) உங்கள் பெயரும் முழு விலாசமும்.

ஒவ்வொரு மொழிக்குமான பரிசுகள்:

ஒவ்வொரு மொழிக்கும் 3 முக்கிய பரிசுகளும், 20 பரிவுப் பரிசுகளும் உண்டு.

முதல் பரிசு ரூ. 2000/-   இரண்டாவது பரிசு ரூ. 1000/-
மூன்றாவது பரிசு ரூ. 500/- மற்றும் ஒவ்வொன்றும் ரூ. 50/- பெறும் 20 பரிவுப் பரிசுகள்.

(பெரிய சைஸ்) ஹமாம் மேலுறைகள் இரண்டுடன் உங்கள் கூப்பன்களை அனுப்பவேண்டிய விலாசம்: ஹமாம் கன்டெஸ்ட் C/o டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், ஆர்மி & நேவி பில்டிங், மகாத்மா காந்தி ரோட், பம்பாய்-1. ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு கூப்பனுடனும் (பெரிய சைஸ்) ஹமாம் மேலுறைகள் இரண்டு அனுப்பியாகவேண்டும். சரியான ஹமாம் படத் தேர்வு, மற்றும் தனித்தனியே ஒவ்வொரு மொழியிலும் வரும் விளம்பர வாக்கியங்களின் சுயத் தன்மை ஆகியவற்றைக்கொண்டே போட்டிக்கூப்பன்கள் பரிசீலிக்கப்படும்.


போட்டியின் முடிவு தேதி: 15, ஜுலை, 1963.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், பரிசுத் தொகை சமமாகப் பங்கிடப்படும். நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது. தீர்ப்பு சம்பந்தமாக கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

பரிசு பெற்றவர்களின் பெயர்கள் 15, செப்டம்பர், 1963 பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

கவனிக்க: டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, அதன் வினியோகஸ்தர்கள் அல்லது விளம்பர ஏஜெண்டுகளான போமாஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஊழியர்களுக்கோ அவர்களின் உறவினர்களுக்கோ இப்போட்டியில் கலந்துகொள்ள உரிமை கிடையாது.

மறவாதீர் — ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியே பரிசுகள் உண்டு!



பெருமாளும் திருநாளும்

"சுவாமி! எந்தப் பக்கத்திலிருந்து வருகிறீர்கள்?"

"ஏன் என்ன விஷயம்?"

"இல்லே, சின்னக் காஞ்சிபுரத்திலிருந்தான்னு கேக்கத்தான். பெருமாள் ஏள்ட்டாரோ? (எழுந்தருளி விட்டாரோ?)"

"பிம்மாலேயே! (விடியற்காலையிலேயே) ஏள்ட்டாரே! மூணாந் திருவிழாவாச்சே, சுவாமி!"

"அதான் கேட்டேன். மூங்கில் மண்டபத்தின்கிட்டே போனால் சேவிக்கலாமோ?... இல்லே......"

"கருட சேவையாச்சே! இன்னைக்கும் பிள்ளையார் பாளையம் பக்கமா ஏளப்பண்ணிட்டு அல்லவா வருவா! நீங்க பேசாம ராஜ வீதியிலே கச்சபேசுவரர் கோயில் பக்கமா நில்லுங்கோ. திவ்வியமா சேவிக்கலாம்."

ஃ ஃ ஃ

"உம்! இதெல்லாம் என்ன கூட்டம்?"

"என்ன அப்படிச் சொல்லிப்புட்டேள்."


"டென் இயர்ஸ்' முன்னே பார்க்கணும்! எவாகுவேஷன் டைம்! பட்டணம் முழுக்கே இங்கேதான்னு! ஜப்பான்காரனுக்குப் பயந்து எல்லாம் இங்கே வந்து புகுந்து விட்டார்கள்! வீடு வாடகை என்னமா விஷம் மாதிரி ஏறிப் போயிடுத்து என்கிறேன்...."


"அட, என்ன சாமி! நீ ஒண்ணு! நடுவிலே நின்னுகிட்டுக் கதை பேசறே! நா! போறவங்களுக்கு வழியை வுட்டுட்டுக் கதை பேசிக்கினு இரேன், ஐயா! உன்னே யார் என்னன்னுங்க....? கம்மர்கட்! முட்டாயி! கடலை உருண்டை....."


"இழவு பேசறதைப் பார்த்தியா ஓய்!"

"எல்லாம் இன்னிக்குத்தானே நாலு காசு சம்பாதிக்க முடியும்! என்ன இருந்தாலும் நான் சொன்ன மாதிரி இப்ப கூட்டம் குறைஞ்சுதான் போச்சு! முன்னெல்லாம் ராஜ வீதி ரெண்டு பக்கமும் வரிசையாக் கடை விழுமே! இதோ இந்தக் கச்சபேசுவரர் கோயில் பக்கம் — பாவிடேக்னிக் வந்திருக்கே இப்போ — அங்கே ஒண்ணுக்கு ரெண்டா









இல்லே, குடை ராட்டினம் கொண்டு வந்து 'டோண் டோண்' என்று அடிச்சிண்டு இருப்பான்!''

''ஆமாங்க! ஐயா சொல்றது மெய்தாங்க. இப்ப கும்பலு அதிகமா இல்லீங்க! ஆமாம், நம்பளுக்கு எந்த ஊருங்க?''


'''நாங்க பட்டணத்திலிருந்து வரோம்! நீங்க இந்த ஊருதானு?''

''ஆமாங்க!''

''ஆமாம். ஏன் இப்ப கூட்டம் குறைந்து போயிடுச்சி?''

''இப்ப, வருஷத்திலே ரெண்டு திருவிழா ஆயிப் போயிடுச்சுங்களே! முன்னே வர்தர் திருவிழா நாள் பெரிசு! இப்ப, ஏகாம்பரேசுவரர் பங்குனி உத்திரமும் பலே ஜோரா ஆயிப் போயிடுச்சுங்களே! வெள்ளி ரதம், வெள்ளி மாவடி சேவை, வெள்ளி ராவணன்—இப்படி யெல்லாம் பெரிய உர்சவமாயிடுச்சுங்களே! கூட்டம் எங்கே தேங்கும்?''

ஃ ஃ ஃ



இனிமையும் எழிலும் நிறைந்த் தமது வண்ண வண்ணத் தமிழ்ப் பாடல்களினுலே ஆழ்வார்கள் புனிதம் விளைத்துப் பக்தியைப் பெருக்கி மங்களா சாஸனம் செய்த தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டில் திருக்கச்சி என்னும் அத்திகிரி முதன்மையானது. பெருமாளின் திருநாமம் வரதராஜப் பெருமாள். தாயார்: பெருந்தேவித் தாயார். மேற்கே திருமுக மண்டலத்தோடு நின்ற திருக்கோலம்; பிருகு மகரிஷிக்கும், நாரதருக்கும், திருவநந்தாழ்வானுக்கும், கஜேந்திராழ்வானுக்கும், பிரம்மாவுக்கும் பிரத்தியட்சம் என்று இந்தத் 'திவ்விய தேசத்தின் பிரபாவம்' பேசும்.




படைப்புக் கடவுள் பிரமன் தமது மனம் தூய்மை பெறுவதற்காகக் கங்கைக் கரையோரம் கடும் தவம் மேற்கொள்கிருர். மனம் தூய்மை பெறுவதற்கு அவர் ஆயிரம் வேள்விகள் புரிய வேண்டும் என்று அசரீரி ஒன்று கூறுகிறது. ஆம்! ஒன்றல்ல, இரண்டல்ல! ஓர் ஆயிரம்! மலைத்த நான்முகனுக்கு அசரீரியே உபாயமும் சொல்கிறது! பூவுலகில் சத்திய விரத க்ஷேத்திரமாம் காஞ்சிக்குச் சென்று ஒரு வேள்வி செய்தால் ஆயிரம் வேள்விகள் செய்த பலன் கிட்டும் என்ற அசரீரியின் கட்டளையைத் தமது நான்கு சிரங்களின் மேற்கொண்டு பிரமன் புறப்படுகிருர் !

அவருடைய மனைவி சரஸ்வதிக்கு என்னவோ மனத்தாங்கல்! கணவரின் வேள்வியைக் கலைக்கும் நோக்கத்துடன் வேகவதி என்னும் ஆருய் உருவெடுத்துக் கடுகி வருகிருள் ! படைப்புக்

புகைப்படங்கள் கட்டுரை ஆசிரியர் எடுத்தவை





கடவுள் கையைப் பிசைகிறார்! பதறுகிறார்! தனியாய்த் தவிக்கிறார்! திருமாலே சரண் என்று மகாவிஷ்ணுவை வேண்ட அவர் யதோத்தகாரியாய் வந்து வெள்ளத்தின் குறுக்கே சரஸ்வதி நாணமடையும் கோலத்தில் படுத்துக் கொள்கிறார்! விரைந்து வந்த வேக வதியாம் சரஸ்வதி வெட்கிப் பின்னடைகிறாள்!

பிரமனின் வேள்வி பழுதறப் பூர்த்தி யடைகிறது. பல்லாயிரம் பரிதி ஒளிபெற்ற தற்கொப்ப யாக குண்டலத்திலிருந்து வரத ராஜர் தோன்றுகிறார்! பிரமனின் வேண்டு கோளுக்கிணங்க அவர் அங்கேயே தங்கி இன் றும் ஆயிரமாயிரம் அடியவர்களைத் தம் முடைய பெருங்கருணையிலே காத்து நிற்கிறார்! இதுவே வரதராஜப் பெருமாள் தோன்றியது பற்றிய தல வரலாறு.

ஃ ஃ ஃ

அருட் தமிழை வளர்த்த ஆழ்வார்களின் பக்தி வெள்ளம் தொண்டை நாட்டிலும் பாய்ந்து பரவுகிறது. கச்சிக்கும் பூதத்தாழ் வார், பேயாழ்வார், பொய்கையாழ்வார், திருமழிசை, திருமங்கை ஆழ்வார்கள் முதலி யோர் வந்து சேவித்து அத்திகிரி உள்ளிட்ட தலங்களைத் தம் அமுதூறும் தீந்தமிழ்ப் பாடல்களினால் மங்களாசாஸனம் செய் கின்றார்கள்!

வைணவ விசிஷ்டாத்வைத தத்துவத்தை ஸ்தாபனம் செய்த உடையவர் ஸ்ரீ இராமா நுஜருக்குத் திருக்கச்சி நம்பிகள் மூலமாகப் பெருமாள் ஆறு வார்த்தைகளை அருளிச் செய் கிறார். அருளாளரான தூப்புல் வேதாந்த தேசிகன் இந்தச் சந்நிதியில் மெய்ம்மறந்து நின்று உளங்கனிந்து பாடுகிறார்!

ஆண்டுகள் பலவற்றுக்கு முன்னால் ஒரு வைகாசிப் பௌர்ணமியன்று காஞ்சிக்கு வந்த கவி காளமேகம் வரதராஜரின் கருட சேவை யைக் கண்டு அவர் மேல் புகழாப் புகழ்ச்சி யாக,

''பெருமாளும் நல்ல பெருமாள்; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் - பெருமாள்
இருந்த இடத்தில் இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துச் செல்கிறதே பார்!''

என்று உரிமையோடு நிண்டல் செய்கிறார்!

அருளாளப் பெருமாளாம் வரதராஜர் கருட வாகனத்தின் மீது ஆரோகணித்து வரும் எழில் பவனி இன்னும் பலரையும் வசீ கரிக்கிறது. கர்நாடக சங்கீதத்தில் தலை சிறந்த வாக்கேயகாரர்களும், நாதோபாசகர் களும் ஆன ஸ்ரீ தியாகராஜரும், ஸ்ரீ தீட்சித ரும் தமது பக்திச் சுவை நனி சொட்டும் தீந்தமிழ்க் கீர்த்தனங்களில் பெருமாளின் பவனியை இசைத்து மகிழ்கிறார்கள்.

தென்னகத்தில் தெய்வமாக் கலை வளர்த்து எழில் சேர்த்த விஜயநகர மன்னர்களின் ரசானுபவம் நிறை — நெஞ்சங்களைக் காஞ்சி ஈர்க்கிறது! விஜயநகர அரசர் ஒருவர் வரத ராஜப் பெருமாள் ஆலயத்துக்குக் கல்லிலே காவியம் ஒன்று செய்வித்து அணி சேர்க்கிறார்! அற்புதம் அற்புதமான சிற்ப அழகுகளோடு விளங்கும் நூற்றுக்கால் மண்டபம்தான் அது.

காலம் மாறுகிறது! மன்னர்கள் மாறு கிறார்கள்! சரித்திரம் மாறுகிறது. மாறு தல்கள் அனைத்துக்கும் மௌன சாட்சியாக இருந்து தான் மட்டும் மாறாமல் காலத்தை வென்ற கம்பீரத்துடன் நிற்கும் ஆலயமும் சில சரித்திர நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களன் ஆகிறது !

கர்நாடக, மைசூர் யுத்தங்களின் போது வரதராஜப் பெருமாள் ஆலயம் படைத்தள மாகப் பயன்படுகிறது. ஹைதர் அலியின் படையெடுப்பு! புரக்கும் கடவுளுக்கே பாது காப்புத் தேட விழைகின்றன ஆஸ்திக நெஞ் சங்கள்! கோயில் விக்கிரகங்களைப் பத்திர மாகத் திருச்சி மாவட்டத்தின் உடையார் பாளையத்துக்குக் கொண்டு சேர்க்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் அந்தமான ஆண்டின் போது மீண்டும் விக்கிரகங்கள் காஞ்சிக்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டு விசேஷ விழாவில் பிரதிஷ்டை செய்யப்படு கின்றன. 'உடையார்பாளையத் திருவிழா' என்றே ஆண்டுதோறும் ஒரு திருவிழா இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் கொண் டாடப் பெறுகிறது!

இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு அடிக்கல் நாட்டிய கிளைவ் பிறகு கலியுகவரத னுக்கு அஞ்சலி செய்கிறார்! மகரகண்டி என்ற ஒப்பற்ற அணி ஒன்றைக் காணிக்கையாகப் பெருமாளுக்கு வழங்கி மகிழ்கிறார். மதுராந் தகம் ஏரி உடைப்பின்போது இராம லட்சு மணர்களை நேரில் காணும் பேறு பெற்ற லயனல் பிளேஸ் (செங்கற்பட்டு மாவட்டத் தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கலெக்டர்) தமது பங்குக்குத் தாமும் சில விலையுயர்ந்த அணிகளை வழங்கு கிறார் ! (இவற்றின் புகைப்படங்களை முதல் பக்கத்தில் காணலாம்.)

பெருமாளின் கருணை வெள்ளம் யாண்டும் குறைவின்றி வற்றாது பெருக்கெடுத்துக் கொண்டே வருகிறது....

ஃ ஃ ஃ

''நகருங்க, நகருங்க. வழியை விட்டு ஓரமா நில்லுங்க. உம், மேலே ஏறய்யா.''

''உம், அதோ பாத்தியா, யானே?''

''யானைக்குமா நாமம் போடுவா அம்மா?''

''ஏன்! மனுஷாளுக்கே நாமம் போடறுளே இந்தக் காலத்திலே....!''

''சும்மா இருங்கோன்னு! குழந்தை தெரிஞ் சுக்கணும்னு கேட்டால் இப்பத்தானே உங்க நிண்டல் எல்லாம்.''

''உனக்குத் தெரியுமாடி! ஒரு காலத்திலே இந்த யானைக்கு என்ன நாமம் போடறது— வடகலையா, தென்கலையா — என்று ஏகத் தகராறு நடந்து ஐகோர்ட் வரைக்கும் போய் விட்டதாம் !''

''ஆமாம், அதுவும் எஸ். வி. வி. கூட ஹாஸ்யமா எழுதியிருக்கிறார் போல் இருக் கிறதே. அதைப் பற்றி!''

''அப்பா! அப்பா! பதுான் அப்பா!''

''உம்! பேசாமல் இரு. முதல்லே பெரு மாளைச் சேவி நன்னு! அப்புறமாப் பார்த்துக்க லாம் மற்றதை யெல்லாம்.''

''வரதா!''

''மகாப் பிரபோ!''


''கலியுக வரதா!''


''கண்கண்ட கடவுளே!''


நங்கையர் மேனி
நலம் பெற்று மிளிர...
'கோகுல்'
ஸான்டால்
டாய்லெட் பவுடர்
'கோகுல்'
ஸான்டல்வுட்
டாய்லெட் பவுடர்
'கோகுல்'
டர்மரால்
சோப்
SAINTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
Gokul
Turmerol
Soap
டி. எஸ். ஆர் & கோ.,
மதராஸ் & கும்பகோணம்


எதிலும் ஒரு புதுமை

எழில் • பயன் • திறமை









இது போட்டி யுகம்! திறமையோடு விளம்பரப்படுத்திக்கொள்பவனே பயனடைகிறான். எஃகு ஆட்சி செய்யும் நவயுகம் இது.
தொழிற்சாலைகளின் மூட்டுத் தேவைகளுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த எஃகு, நவீன வாழ்வையும், வாழ்க்கை முறையையும் எழில்மயமாக்கும் வல்லமையுள்ள உலோகமாகப் பரிணமித்துள்ளது.
அளவோடு, அழகாய் அமைந்த மேஜை, நாற்காலி முதலியவை, பைல்கள் வைக்கும் கச்சிதமான காபினெட்டுகள், இழுப்பறைகள் உள்ள மேஜைகள்-யாவுமே சத்தமின்றி மூடித் திறக்க வசதியாயும், ரசித்துப் போற்றும் விதத்தில் கம்பீரமாயும் உள்ளன. எஃகுச் சாமான்களில் போடப்படும் மூலதனம் நெடுங்காலத்துக்குத் தக்க பலனளிப்பதோடு, அலுவலகத்துத் திறமையையும், ஒழுங்கையும் பெருக்குகிறது; எஃகு யுகத்தின் சிறப்பே சிறப்பு. ஸ்டீலேஜ் அலுவலகத் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு அதில் கணிசமான பங்குண்டு.

பாதுகாப்பின் சின்னம் :
எழில்மிக்க எஃகு

ஸ்டீலேஜ்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸும் தொழிற்சாலையும்: தபால் நிலையத்திற்கு எதிரில், மஜ்காவ், பம்பாய்-10. போன் : 41014, தந்தி: "STEELAGE" பம்பாய், மஜ்காவ்.

காட்சியறை: ரேடியோ மான்ஷன், வீர நரிமன் ரோட், ஃபோர்ட், பம்பாய்-1, போன்: 253426

கிளை ஆபீஸ்: 71, [illegible], கல்கத்தா-13. போன்: 24-1121. தந்தி: 'SYMBOLIC' கல்கத்தா.

SA-15-TAM

தென்னிந்தியாவின் ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட், 153, மவுண்ட் ரோட், சென்னை—2.
உப விநியோகஸ்தர்கள்:
மைசூர் ராஜ்யம்: மெஸர்ஸ் ஸ்பென்ஸர் & கம்பெனி லிட். 7, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர்
தஞ்சாவூர் ஜில்லா: மெஸர்ஸ் ஏ. எஸ். எம். சலீம & ஸன்ஸ், பட்ட மங்கலத் தெரு, மாயூரம்.
கோவை ஜில்லா: (மலபார் நீங்கலாக) மெஸர்ஸ் வி.எஸ். கார்த்திக்கம். பழைய தபால் ஆபீஸ் ரோட், கோவை.
எர்ணாகுளம் திருச்சூர் மற்றும் கோட்டயம்: மெஸர்ஸ். ஏ. எம். மஹமத் உஸ்மான் & ப்ரதர், ப்ராட்வே, எர்ணாகுளம்.

''ஹைய்ய்! உம். நல்லாப் பிடி! உம், விடு சொல்றேன்....''

''ஏன், அப்பா, இப்படிக் கத்தறுனே, இந்தச் சாமி தூக்கறவா?''

''பின்னே என்ன லேசாவா இருக்கு அந்தத் தண்டு? அடே, அப்பா என்ன கனம்?''

''ஆமாம். அதுதான் அவ்வளவு கனமா இருக்கே. பின்னே ஏன் குலுக்கறு அதை!''

''அது தெரியாதா உனக்கு! அதுதானே வரதர் உற்சவத்திலேயே தனி அழகு!''

''இன்னிக்குப் பூரா பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கு....''

''ஊம்பு. அப்புறம் பஸ் கிடைக்காது.''

''பட்டணத்துக்குப் பஸ் அஞ்சு நிமிஷத்துக்கு ஒண்ணு இருக்குங்க இப்போ!''

''பஸ்தான் அஞ்சு நிமிஷத்துக்கு ஒண்ணு இருக்காமே, இவர்தான் சொல்றுரே! அப்படியே நான் பார்த்து வைச்சிருக்கிற எவர் சில்வர் பாத்திரங்களையும் வாங்கிண்டு...''

''என்னது! எவர்சில்வரா! உம், அதுக்கெல்லாம் டைம் இல்லே! அதெல்லாம் பட்டணத்திலே கிடைக்காததா?''

''அப்பா பலூன்!''

''போற வழியிலே வாங்கிக்கலாம்!''

க் க் க்

பிரபந்தப் பாடல்களின் இன்னோசையைச் செவிமடுத்து ரசித்துக் கொண்டே பெருமாள் குலுக்கலுடனும், குதூகலத்துடனும் அவற்றின் பின்னே போகிறார். பெருமாளுக்குப் பின்னால் வேத பாராயணம் தொடர்கிறது.... மக்கள் திரள் கலைந்து முட்டி மோதிப் பல கிளைகளிலும் பிரிந்து மெல்லக் கரைகிறது.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் நகரசபை தண்ணீர் லாரி பெருமாள் பவனி வரும் வீதிகளில் நீர் தெளித்து அவற்றைத் தூய்மையாக்குகிறது. வழக்கமான வாகனங்களில் வரதர் சின்னக் காஞ்சீபுரத்தை விட்டுக் கிளம்பி நீள் வழி கடந்து, காந்தி ரோடு என்ற ஆடிசன்பேட்டை தாண்டி, இரட்டை மண்டபம் வந்து, சக்தி பீடமான காமாட்சி அம்மன் கோயிலை வலம் வருவதே போன்று நான்கு இராஜ வீதிகளிலும் உலாப் போந்து மீளவும் வந்த வழியே திரும்பி ஆலயம் சேர்கிறார். முக்கியமான உற்சவங்களின்போது இரவில் இராஜ வீதியில் கச்சபேசுவரர் கோயிலுக்கு அருகில் கூடுதலாக நடைபெறும் வாண வேடிக்கைகள் விழாவுக்கு மேலும் வண்ணம் சேர்க்கின்றன.

ஏழாம் திருவிழா இரதோற்சவத்தின் போது மீண்டும் திரளான மக்கள் கூட்டத்தைக் காணலாம். பிரும்மாண்டமான தேர் இப்பொழுது அளவில் சற்றுக் குறைக்கப்பட்டு விட்டதாம். சக்கரமே சுமார் ஒன்றரை ஆள் உயரத்துக்கு மேலே இருக்கிறது!

முன்பு நிலையை விட்டுக் கிளம்பினால் திரும்பிப் போய்ச் சேர வாரக் கணக்கில் ஆகியிருக்கிறதாம். சமீப ஆண்டுகளில் சாலைகளில் தார் போடப்பட்ட பிறகு ஒன்றிரண்டு நாட்களிலேயே தேர்த் திருவிழா முடிந்து விடுகிறது.

க் க் க்

''ஏம்பா! இது பட்டணம் போற பஸ் தானே? எந்த ரூட்?''

''எதுவா இருந்தா என்னங்க? எல்லாம் இரண்டரை மணி நேரம்தான்....!''

''நானும் பதினஞ்சு இருபது வருஷமா இந்தக் கருட சேவைக்கு எங்கே இருந்தாலும் தவறாமல் ஆஜராயிடுவேனுங்க! என்னமோ வரதர் படி அளக்கிறாரு. வாழ்க்கையும் இப்படியே போயிக்கிட்டிருக்குதுங்க....''

''ஏன், சார்! இந்த 'பெஸ்டிவல்' சமயத்திலே வந்து சேருகிற 'பிக் கிரவுட்ஸ்' எல்லாமே பக்தியினாலேதான்னு சொல்ல முடியுமோ? எனக்கென்னமோ அப்படித் தோன்றவில்லை சார்! எல்லாம் ஒரு 'ஹாபிசுவல்' செய்கை! தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிற காரியம் சார்!''

''நோ நோ! ஜெனரலா அப்படியே சொல்லிவிட முடியுமா? இப்ப என்னையே எடுத்துக்குங்கோ! நான் ஒண்ணும் 'ஆஹா ஹாஹா'ன்னு பக்தி பண்றவன் இல்லே. பட், இருந்தாலும் ஏதோ ஒண்ணு 'சம்திங்'—ஐ கால் இட் 'நோஸ்டால்ஜிக்' — மனத்துக்கு 'பீஸ்' — நிம்மதி — கொடுக்கத்தான் கொடுக்கிறது. அந்த அளவுக்கு மனத்துக்குத் தெம்பு கிடைப்பது பெரிய லாபம்தானே....

'' 'டிக்கெட், டிக்கெட்' எல்லாரும் டிக்கெட்டுக்குப் பணம் எடுத்து வச்சுக்குங்க சார்!.... போப்பா, ரைட்! இப்படியே ரைட்லே ஓடிச்சுக்க.... பொன்னேரிக் கரைக்கா.... ரைட்!''



கச்ச தேவயானி

மறக்க முடியாத திரைப்படங்கள்

முத்து. பவளம் போன்ற விலை மதிக்கவொண்ணாத எத்தனையோ பொருள்களைத் தன் அகத்தே கொண்டு விளங்குவதால் கடலுக்குத் தனி மதிப்பு. கருத்துக் கருவூலங்களாக மதிக்கத் தகுந்த எத்தனையோ கதைகளைத் தன்னிடத்தில் கொண்டு விளங்குவதால் இதிகாசங்களுக்குள்ளே மகாபாரதத்துக்குத் தனி மதிப்பு. மகாபாரதக் கதைகளில் ''கச்ச தேவயானி'' மிகவும் சுவையான கதை.

அசுர குருவான சுக்கிராச்சாரியாரிடம், தேவகுருவான பிருகஸ்பதியின் குமாரன் கச்சன் அமிர்த சஞ்சீவி மந்திரத்தை உபதேசம் பெற்றுக் கொள்ள இந்திரனின் ஆணைப்படி சீடனாக அமர்கிறான். சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானிக்கும், கச்சனுக்கும் காதல் ஏற்படுகிறது. இந்திரனுக்குக் கொடுத்த வாக்கை மீறிக் காதலில் ஈடுபட முடியாமல் கச்சன் தவிக்கிறான். கச்சனின் நோக்கத்தை அறிந்த அசுர ராஜா விருஷபர்வா அவனைப் பலவிதத்திலும் கொடுமைப்படுத்துகிறான்; அவற்றிலிருந்தெல்லாம் தப்பி, கச்சன் வெற்றி பெறுகிறான். ஆனால் கச்ச-தேவயானியின் காதல் தோல்வியடைகிறது. இதிகாச காலத்து அருமையான காதல் கதை.



யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன் தயாரிப்பான 'கச்ச தேவயானி'யில் டி. ஆர். ராஜகுமாரிதான் கதாநாயகி. ராஜகுமாரிக்காகவே அந்தப் படத்தை எத்தனையோ பேர்கள் எத்தனையோ தடவை பார்த்தனர். இடுப்பில் தண்ணீர்க் குடமும், உதட்டில் புன்னகையும், விழிகளில் நாணமும், எடுப்பான எழிலும் கொண்டு வனப்பு மிக்க வன தேவதையாக ஆற்றங் கரையில் கச்சனுக்குக் காட்சியளித்த தேவயானியின் தோற்றம் இன்னும் மனக் கண்ணில் நிற்கிறது. ஒவ்வொரு காட்சியிலும் ஒரு தோற்றம்; ஒவ்வொரு தோற்றத்திலும் ஒரு பொலிவு. கானகத்து ஆசிரமத்தில் வசிக்கும் பெண்ணானதால் தேவயானிக்கு விதம் விதமான ஆடை ஆபரணங்களுடன் தோன்றுவதற்கு வாய்ப்பில்லைதான். ஆனால் ஆசிரம உடையே அவளுக்குத் தனிக் கவர்ச்சியைத் தந்துவிட்டதே! கச்சனோடு காதல் மொழிகள் பேசியபோதும் சரி, அவனைப் பிரியும் தருணத்தில் கண்களில் கண்ணீரைத் தேக்கி, உள்ளத்தை அவனுக்கே உடைமையாக்கி உருகி நின்றபோதும் சரி, கடைசியில் அவன் அவளை உதறிவிட்டுப் புறப்பட்ட தருணத்தில், ''என் காதல் பலிக்காமற் போனது போலவே நீ கற்ற வித்தையும் பலிக்காமற்போகட்டும்!'' என்று வீராவேசத்துடன் சபித்த போதும் சரி, ராஜகுமாரியின் நடிப்புத் திறமையை மறக்கவே முடியாது. தேவயானி தன் தகப்பனாரிடம் கச்சனைச் சீடனாக ஏற்கும்படி கெஞ்சிக் கொஞ்சிக் கேட்டுக் கொண்டது மிகவும் அழகாக இருந்தது.

'கச்ச தேவயானி' படத்தின் உதவி டைரக்டரும் அதில் மதனாகரன் என்னும் வில்லனாக நடித்தவருமான கொத்தமங்கலம் சுப்புவைப் பார்த்து, 'கச்ச தேவயானி' படம் சம்பந்தமாகப் பேசலாம் என்று அவர் வீட்டுக்குச் சென்றேன். அவர் உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார்.

''டைரக்டர் கே. சுப்பிரமணியத்தின் வெற்றிப் படம் ''கச்ச தேவயானி''. படப் பிடிப்பின் போது நடந்த சில சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கொண்டு சொல்கிறேன். ராஜகுமாரி அருமையாக நடித்தார். படப்பிடிப்பின் போது கச்சனை விட்டுப் பிரிய நேர்ந்த கடைசி நேரத்தில் ராஜ

குமாரியின் தொண்டை கட்டிக்கொண்டுவிட்டது. என்ன செய்தும் சரி செய்ய முடியவில்லை. நடிகையின் சாதுரியத்தினால் அந்தக் காட்சி பிரமாதமாகிவிட்டது. கச்சனைப் பார்த்து, 'நேற்றிரவெல்லாம் உன்னை நினைத்து அழுதேன். ஓரேயடியாகத் தொண்டை கட்டிவிட்டது' என்று கம்மிய குரலில் சமயோசிதமாகப் பேசியது ரொம்பப் பொருத்தமாக இருந்தது. டைரக்டருக்கு ரொம்பவும் சந்தோஷம்!''



''படத்தில் கானகம், குன்றுகள், ஆசிரமம் ஆகியவைகளெல்லாம் தத்ரூபமாக இருந்தனவே. உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய ஊர்களுக்குப் போய்ப் படம் எடுத்தீர்களோ?'' என்று கேட்டேன்.

சுப்பு சிரித்தார். ''உதகமண்டலமும் இல்லை; இன்னொன்றும் இல்லை. எல்லாம் சென்னையிலேயே எடுத்ததுதான். குன்றுகளெல்லாம் அட்டையினாலான ஸ்டுடியோ செட்டுகள்தான். படப் பிடிப்பின் போது ஒரு முறை மதனாகரனாகிய நான் ஒரு குன்றின் மேல் அமர்ந்து, ''தேவயானி, தேவயானி'' என்று வாய் விட்டு ஜபித்துக் கொண்டிருக்கிறேன். அப்பொழுது தேவயானியே நேரில் வந்துவிடுகிறாள். அவளைக் கண்டதும் குன்றிலிருந்து தாவிக்குதித்து அவளிடம் ஓடுகிறேன். அப்பொழுது என் கால் குன்றுக்குள் சிக்கிக் கொண்டுவிட்டது. குன்று பாயினால் செய்யப்பட்டதுதானே! கால் சுளுக்கிக்கொண்டு வீங்கி விடவே ரொம்பவும் சிரமப்பட்டேன். 'எக்ஸ்ரே' எடுத்து என்னென்னவோ சிகிச்சை செய்தும் பயனின்றிக் கடைசியில் புளிப் பற்றுப் போட்ட பிறகுதான் குணமாயிற்று!''

அந்த நாளில் காந்திநகர், கஸ்தூரிபா நகர் எல்லாம் வனப் பிரதேசங்கள் மாதிரிதான் இருந்தனவாம். டைரக்டர் கே. சுப்பிரமணியம் படப் பிடிப்புக்குத் தகுந்த இடங்களைத் தீர்மானம் செய்வதற்காக அந்த இடங்களிலெல்லாம் சுற்றியலைவாராம். அப்படிச் சுற்றியலைந்த போது தழைத்து வளர்ந்திருந்த ஓர் ஆலமரத்தின் விழுதுகள் அவர் கவனத்தைக் கவர்ந்தனவாம். மறுநாளே அந்த ஆலம் விழுதுகளில் ஒரு பலகையைக் கட்டி ஊஞ்சலாக்கி ராஜகுமாரியை அதில் ஆட வைத்து அற்புதமாகப் படமாக்கினாராம்.

இதைத் திரு சுப்பு கூறுகையில் அக்காட்சியில் ராஜகுமாரி பாடிய பாடல் எனக்கு நினைவு வரவே, ''படத்தில் மொத்தம் எத்தனை பாடல்கள்?'' என்று கேட்டேன்.

''சுமார் முப்பது பாடல்கள் இருக்கும். பாபநாசம் சிவனும், அவர் சகோதரர் பி. ஆர். ராஜகோபாலய்யர் இருவருமாகப் பாடல்கள் இயற்றினதோடு எல்லாருக்கும் இசைப் பயிற்சியும் அளித்தனர். அதனால்தான் பாடல்கள் மிகவும் நன்றாக அமைந்தன.''

''வசனங்களை எழுதியது யார்?''

''டைரக்டர் கே. சுப்பிரமணியம்தான். இதிகாசக் கதையைச் சினிமாவுக்கு ஏற்ற மாறுதல்களுடன் எழுதி வசனங்களையும் எழுதினார்.''

''நீங்கள் பாடிய பாடல்கள் எவ்வளவு இருக்கும்? ஏதேனும் நினைவிருக்கா?''

''மூன்று பாடல்கள் பாடியிருக்கிறேன். 'மனமோகனமானே, மதனாகரன் நானே' என்ற பாட்டு ரொம்பவும் பிரசித்தமானது.''

''முக்கியமான தகவல் இன்னும் ஏதாவது சொல்ல முடியுமா?'' என்றேன்.

''ஆகா! ஒரு முக்கியமான தகவல் இருக்கிறது. ராஜகுமாரி இந்தப் படத்தில்தான் முதன் முதலில் யானை மேல் சவாரி செய்கிறார். யானை மீது அமர்ந்து அவர் 'ஹட்டோ, ஹட்டோ' என்று குரல் கொடுத்தது இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! யானைமீது ஒரு பெண் பயப்படாமல் அமர்ந்து காட்டு மார்க்கங்களில் சுற்றிவருவதைப் படமெடுப்பது எவ்வளவு சிரமமான காரியம் தெரியுமா? டைரக்டர் கே. சுப்பிரமணியமும் நானும் ரொம்பக் கவலையோடு அந்தக் காட்சியைப் படமாக்குவதில் அக்கறை காட்டினோம். யானை 'மக்கர்' பண்ணாமல் சரியாக நடிக்க வேண்டுமே என்ற கவலை ஒருபுறம்; ராஜகுமாரிக்கு ஏதும் ஊறு நேராமல் நல்லபடியாக அந்தக் காட்சி முடியவேண்டுமே என்னும் கவலை மறுபுறம்! இறைவன் அருளால் அந்தக் காட்சி இயற்கை எழிலோடு ராஜகுமாரியின் ஒயிலும், 'ஹட்டோ ஹட்டோ' என்ற குரலும் சேர்ந்து அதியற்புதமாக அமைந்து படத்துக்கே தனிச் சிறப்பைத் தந்துவிட்டது!'' என்றார் சுப்பு.

கொத்தமங்கலம் சீனுதான் கச்சன். வேஷப் பொருத்தம் சரியாயிருந்தது. தேவகுமாரனாகவே தோன்றினார். நிறையப் பாடல்களும் பாடி எல்லோரையும் கவர்ந்து விட்டார். 'அருள் சுரக்கும் மெய்க்குருவென நானே — திருவடியடைந்தேன் கற்பகவானே'' என்ற பேகடா ராகப் பாட்டு அருமையாக அமைந்து விட்டது.

அசுர ராஜா விருஷபர்வாவாக வந்து எஸ். ராமச்சந்திரய்யர் ஆர்ப்பாட்டம் செய்து நல்ல பெயரைத் தட்டிக்கொண்டு விட்டார்.

இந்தப் படத்தில் வித்துவான் சீனிவாசன் சுக்கிராசாரியார், குளத்தில் ஸ்நானம் செய்யும்போது ஸ்வரப்ரஸ்தாரங்களுடன் ஒரு பாட்டுப் பாடிச் சுக்கிராச்சாரியார் எல்லோருடைய பாராட்டையும் பெற்றார்!

மறக்க முடியாத திரைப் படங்களுள் ஒன்றான 'கச்ச தேவயானி' இதிகாசக் கதையானாலும் திரை உலகுக்குப் புதுமையான கதை. எப்படியெனில் காதலனும் காதலியும் தங்கள் காதல் நிறைவேறாமல் பிரிந்து விட்டாலும் வழக்கத்துக்கு மாறாக, ஒருவரும் இறந்து விடவில்லை! படத்தின் புகழும் இன்றும் இறந்துவிடவில்லை!

— விஜயம்



பவுன் : சூரியன்
மார்க்புகையிலை
காரைக்குடி

BS.



உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.



பெப்ஸ்


தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

வி. இ. புல்போர்ட (இந்தியா) பிரைவேட் லிட்.

சோல் ஏஜண்டுகள் :
தாதா & கோ., 88, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-1

நெடுங் கதை



புரட்சி

கி. ராஜேந்திரன்

வைரத்தீவில் மாதிரிக்குக்கூட ஒரு வைரம் கிடையாது! சீட்டாட்டப் பித்தனான ஒரு போர்த்துக்கீசியக் கடல் கொள்ளைக்காரன் தன் கப்பலுக்கு 'டயமண்டு குயின்' என்று பெயர் வைத்தான். அடுத்தவனையும் விளாவரையும் விட டைமண்ட் சீட்டே அவனுக்கு ஆட்டத்தில் வெற்றியைத் தேடித் தந்ததாம். டயமண்டு ராணி அதிர்ஷ்டத் தேவதையாகவே விளங்கினாளாம். வைரத் தீவில் முதன் முதலாக அடியெடுத்து வைத்த மனிதன் அந்தப் போர்த்துக்கீசியக் கடல் கொள்ளைக்காரன்தான். அவன் அத்தீவுக்கு இதைவிடப் பொருத்தமாக வேறு என்ன பெயர் வைத்துவிட முடியும்?

இதன் பிறகு நான்கு நூற்றாண்டுகளில், அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலுள்ள எண்ணற்ற சிறு தீவுகளில் ஒன்றான அந்த வைரத் தீவுக்குப் பல தேசத்து மக்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வந்து சேர்ந்தார்கள். சிலர் தங்கினார்கள்; பலர் திரும்பிப் போய் விட்டார்கள். ஆகவே, அந்தத் தீவில் இன்ன தேசத்தவர் வந்து குடியேறினார்கள் என்று கூறுவதற்கில்லை. எட்டுத் திசைகளிலிருந்தும் வந்த மனிதர்களும், அவர்களுடன் வந்த நாகரிகங்களும் ஒன்று கலந்து விட, வைரத் தீவில் வைரத் தீவினராய் மக்கள் வாழ்ந்தார்கள்.

வைரத் தீவின் வடக்குப் பகுதி மலைப்பாங்கான பிரதேசம். அங்கே அடர்ந்த காடுகளும், விநோதமான மிருகங்களும் இருந்தன. கரடு முரடான பாறைகள் நிறைந்த கடற்கரையை விட்டுச் சற்று உள்ளே தள்ளி வந்தால் பயங்கரமான புதைச் சேற்றுக் குழிகள் நிறைந்த பூமி.

தெற்கே சமவெளி. விவசாயத்துக்கு ஏற்ற வளமான நிலம். ஆகவே, இயல்பாகத் தெற்கே ஜனநெரிசல் மிகுந்தது: பட்டினங்கள் தோன்றின. நாகரிகம் வளர்ந்தது. எனினும் வடக்கேயும் மலைப் பகுதிகளில் நாடோடிகளாகச் சில ஆயிரம் பேர்கள் வாழ்ந்தார்கள்.

ஆதிகாலத்திலேயே வைரத் தீவில் குடியேறியவர்கள் தங்களுள் ஒருவன் அரசனாகத் திகழ வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்கள். தன்னிடத்தில்தான் 'அரச குல இரத்தம் ஓடுகிறதென்று கூறித் தன்னைத் தானே மன்னனாக ஒருவன் பிரகடனப்படுத்திக்கொண்டபோது மற்றவர்கள் மறுப்புச் சொல்லாமல் அவனை ஏற்றுக் கொண்டார்கள். மௌனமாக அவனுக்குக் கீழ்ப்படிந்து வந்தார்கள். இவன் மொராக்கோவிலிருந்து வந்தவனென்றும் ஸ்பானிஷ் பெண்மணி ஒருத்தியை மணந்து கொண்டான் என்றும் சரித்திரம் கூறுகிறது. பத்துத் தலைமுறைகளில் இவனுடைய சந்ததியினரே எந்த விதமான இடையூறுமின்றி வைரத் தீவை ஆண்டு வந்திருக்கின்றனர். இன்றைய அரசன் அலெண்டோவைத்தான் முதன் முதலாக ஆபத்து அணுகுவதாகத் தோன்றியது.

ஃ ஃ ஃ

அரண்மனை அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. இங்குமங்குமாகச் சிப்பந்திகள் உத்தரவுகளை நிறைவேற்ற விரைந்து கொண்டிருந்தார்கள். அரசன் அலெண்டோவின் காரியாலய அறைக் கதவு அடிக்கடி திறக்கப்பட்டது. யாரேனும் உள்ளே வந்து ஏதேனும் தகவல் தெரிவித்தார்கள். புதிய உத்தரவுகளைப் பெற்றுச் சென்றார்கள். நிலை கொள்ளாமல் அறைக்குள்ளேயே குறுக்கேயும் நெடுக்கேயும் அலைந்து கொண்டிருந்த அலெண்டோவா மேஜை அருகே நின்றார். டெலிபோனில் ரகசியப் போலீஸை அழைத்தார். "என்ன? புதிதாக ஏதேனும் விவரம் தெரிந்ததா?" என்று அதட்டினார். பதில் திருப்திகரமாக இல்லை என்பது சிலிவரை அவர் அறைவது போல் வைத்ததிலிருந்து தெளிவாயிற்று.

இளவரசன் அமெர் ஜன்னல் ஓரத்தில் சுவரில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான்.

"அப்பா! நீங்கள் இப்படிக் கலங்கக் கூடாது. நிதானமிழக்கவும் கூடாது. நான் தான் சொல்கிறேனே தங்கை அரண்மனையை விட்டு வெளியே போவது முதல் முறையாக அல்ல. உங்களுக்குத் தெரியாமல் இதற்கு முன்பும் பல தடவைகளில் அவள் சாதாரண உடையில் வெளியே சென்று வந்திருக்கிறாள். இந்த வைரத் தீவின் மூலை முடுக்குகளெல்லாம் அவளுக்கு அத்துபடி. ஆகவே அவளுக்கு ஒரு தீங்கும் நேராது. திக்கு திசை தெரியாமல் தவிக்கப் போவதில்லை அவள். உங்களுக்குக் கவலையே வேண்டாம். பத்திரமாகத் திரும்பி வருவாள் அவள்!"

இது மன்னனுக்கு ஆறுதலை அளிப்பதற்குப் பதில் கோபத்தையே அதிகரிக்கச் செய்தது. "அரசிளங்குமரி வேலைக்காரியைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு தெருத் தெருவாய் அலைவதா?"

"உங்களுக்குப் பிடிக்காது என்று எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை, அப்பா! மக்களுடைய தேவைகளைப் புரிந்து கொள்வது மன்னனுடைய கடமையாகுமாம். அதற்கு இதைவிட நல்ல மார்க்கம் இல்லையாம்! உங்களுக்கு உதவத்தான் அவள் அந்தக் கோலத்தில் ஊர் சுற்றித் திரிகிறாளாம். இன்று அவள் ரகசியம் உங்களுக்குத் தெரிந்து போய்விட்டது."

"வரட்டும் வரட்டும்" என்று கறுவினார் மன்னர்.

"வந்துவிட்டாள் அப்பா" என்றான் அமெர் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தவாறே. இளவரசி நிறை தன் செக்கச் சிவந்த 'ஸ்போர்ட்ஸ் மாடல்' காரை அரண்மனை வெளி வாசலைத் தாண்டித் தோட்டப் பாதையில் வேகமாய்ச் செலுத்தியபடி வந்து கொண்டிருந்தாள்.

"அப்பா! தங்கையிடம் தவறாமல் அன்பு செலுத்துங்கள்: நிச்சயம் அவள் உங்கள் மனத்துக்கிசைய நடந்துகொள்வாள்" என்று நிறைவுக்காகப் பரிந்து பேசினான் அமெர்.

வண்டியை விட்டு இறங்கியதுமே விஷயம் இன்னதென்று விளங்கி விட்டது நிறைவுக்கு. அரசன் கோபமாயிருப்பதைத் தெரிவித்து எச்சரிக்க அரண்மனையில் ஆட்களுக்கா பஞ்சம்?

சற்றும் கலங்காமல் கம்பீரமாகத் தந்தையின் அறையை நோக்கி நடந்தாள் நிறை.

''அழைத்தீர்களா அப்பா?'' என்று கேட்டாள் கணீரென்ற குரலில்.

''பெண்ணே! உன் நடத்தைக்குச் சரியான காரணம் ஏதும் இருக்க முடியாதென்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் விசாரணை ஏதுமின்றி தண்டிப்பது அரசனுக்கு அழகல்ல. உன் போக்குக்குச் சமாதானம் கூற நீ ஆசைப்பட்டால் அதைத் தாராளமாகச் சொல்லலாம்!'' அலின்டோளா கடுகடுத்தார்.

''மன்னன் மகளாகவே வாழாமல் மக்களில் ஒருத்தியாக அடிக்கடி மாறியதால்தான் இந்நாட்டில் நடைபெறவிருக்கும் பெரிய சதிகளைப் பற்றிய விவரங்களை அறிய முடிந்தது'' என்றாள் நிஹா.

''சதியா?'' துள்ளி எழுந்தான் அமெர். மன்னர் ஏளனமாகச் சிரித்தார்.

''அப்பா! சிரிக்கக்கூடிய விஷயமல்ல'' என்றாள் இளவரசி. ''எனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன். விரல் விட்டு எண்ணிக் கொள்ளுங்கள்! ஒன்று — மக்களிடையே முடியாட்சி பற்றிய அதிருப்தி நிலவுகிறதென்று நினைக்க இடமிருப்பதாகப் பல முறை நான் நயமாக எடுத்துச் சொல்லியும் நீங்கள் நம்பவில்லை. நேற்றைய விழாவில் நீங்கள் என்னுடனும் அண்ணனுடனும் திறந்த காரில் வீதி வலம் வருகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் அந்த அதிருப்தியின் பிரதிபலிப்பு; வரப் போகின்ற பேரபாயம் பற்றிய முன்னறிவிப்பு! இரண்டு — மக்களை இவ்வாறான செயல்களில் தூண்டி விடுகிறவன் அலோலோலோ. பொதுக் கூட்டங்களில் வெண்கலக் குரலில் ஆணித்தரமான வாதங்களுடன் அவன் பேச ஆரம்பித்தால் மக்கள் மட்டுமென்ன, நான்கூடத்தான் பல சந்தர்ப்பங்களில் மந்திரத்தில் கட்டுண்டது போல் அசையாமல் நின்று கேட்டிருக்கிறேன். பிரசங்கத்தின் இறுதியில், 'நாம் வேண்டுவது...' என்று முழங்கி அவன் நிதானிக்கையில் ஜனங்களுடன் சேர்ந்து நானும் என்னையறியாமல் 'குடியாட்சி!' என்று கத்திவிட்டுப் பின்னர் நாக்கை அழுத்திக் கடித்துக்கொண்டிருக்கிறேன். மக்களிடம் அவனுக்குள்ள செல்வாக்கை எண்ணுகையில் எனக்குக் கதிகலங்குகிறது அப்பா!''

அலின்டோளா அலட்சியமாய்ச் சூள் கொட்டினார். ''அந்தத் தையல்காரன் மகனால் என்ன என்ன செய்துவிட முடியும்?'' என்று கேட்டார்.

ஜன்னல் வழியாகப் பறந்து வந்து தன் கரத்தில் அமர்ந்த செல்லக் கழுகைத் தடவிக் கொடுத்தபடியே இலேசாகச்சிரித்தான் அமெர்.

''அப்பன் தையல்காரனாக இருந்த போதிலும் மகன் அலோலோலோ ராணுவத்தில் லெப்டினன்டாக இருப்பதையும் அதனால் ஏற்படக் கூடிய விபரீதங்களையும் நீங்கள் இருவருமே சிந்தித்துப் பார்க்க மறுக்கிறீர்கள். சிப்பாய்களை மட்டுமின்றி உயர்தர ராணுவ உத்தியோகஸ்தர்கள் பலரையும் தன் கைக்குள்ளே அலோலோலோ போட்டுக் கொண்டிருப்பதாக வதந்தி'' என்று மகள் கூறுவதைக் கேட்டதும், ''நிஹா! ஒன்றுமில்லாத விஷயத்தை நீ பெரிதுபடுத்துகிறாய்'' என்றார் அரசர் அலின்டோளா.

''மக்களுடைய உணர்ச்சி சாமான்யமான விஷயம் இல்லை அப்பா! மக்களுடைய உணர்ச்சிக்கு நீங்கள் மதிப்புக் கொடுத்திருக்க வேண்டும். உலகப் போக்குக்கு ஏற்ப நாமும் மாறித்தான் இருக்க வேண்டும்; அரசாட்சியில் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் தந்திருக்க வேண்டும்.''

''மக்களுடைய அறிவுக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். அவர்களுடைய உணர்ச்சிக்கு நான் கட்டுப்பட மாட்டேன்'' என்றார் அலின்டோளா. ''உணர்ச்சியால் உந்தப்படுகிறவர்கள் தவறு இழைப்பார்கள். இன்றைய நிலையில் இந்நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கினால் என்ன ஆகும்? தங்கள் சார்பிலே நாட்டை ஆள அவர்கள் அந்தத் தையல்காரன் மகனைத் தான் தேர்ந்தெடுப்பார்கள் என்பதை நீயே ஒப்புக்கொள்வாய். அந்த நிர்மூடனிடத்திலா நான் இந்த அழகான தீவையும் என் அருமை மக்களையும் ஒப்படைப்பேன்? இல்லை, நிஹா! இத்தீவிலுள்ள மக்கள் இன்னும் ஜனநாயகத்துக்கு ஏற்றவர்களாய் மன வளர்ச்சி அடையவில்லை. உணர்ச்சிக்கு அடிமையாகாமல் என்றைக்கு அறிவைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்கிறார்களோ அப்போதுதான் உண்மை ஜனநாயகம் தழைக்க முடியும். அதற்கு முன்னால் முடியாட்சிக்கு முடிவு கட்டினால் அராஜகம்தான் தாண்டவமாடும்!''

''நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான் அப்பா! ஆனால் முடியாட்சிக்கு முடிவு கட்டாமலே ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் உண்மையான ஜனநாயகப் பண்புகள் நாட்டில் மேலோங்க வழி வகுத்திருக்கலாம் அல்லவா நீங்கள்? அந்தக் கடமையில் நீங்கள் தவறிவிட்டதனால்தானே இன்று அலோலோலோ தலையெடுக்க முடிகிறது? மக்களும் அவனைப் போற்றிப் பின்பற்றுகிறார்கள்?''

''பைத்தியக்கார ஜனங்கள்; என்ன குறைந்து போய்விட்டதாம் அவர்களுக்கு இப்போது?''

''தங்களுடைய குறைகளை ஆட்சிப் பொறுப்பில் உள்ளோரிடம் எடுத்துச் சொல்லக்கூடிய பிரதிநிதிகள் இல்லாததுதான் அவர்களுக்குப் பெரிய குறை!''

''உன்னோடு யார் தர்க்கம் செய்வது?'' என்று கேட்டவாறே கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல யத்தனித்தார் அரசர்.

''அப்பா! உங்களுடைய கடைசி பாணத்தை நீங்கள் தொடுத்துவிட்டீர்கள். ஆனால் நான் சொல்ல வேண்டியது இன்னும் பாக்கியிருக்கிறது'' என்றாள் நிஹா.

''நாளைக்குக் கேட்கிறேனே'' என்றார் அலின்டோளா. சோர்வடைந்தவராகக்காணப் பட்டார் அவர்.

''நாளைவரை காத்திருக்கக்கூடிய காரியமில்லை, அப்பா! நான் கூற வந்த மூன்றாவது விஷயம், அலோலோலோவுக்கும் அவன் சகாக்களுக்கும் அயல் தேசத்திலிருந்து ஆயுதங்கள் வந்தவண்ணமிருக்கின்றன, என்பது. பெட்டி பெட்டியாகக் கைத்துப்பாக்கிகளையும், மெஷின் கன்களையும், ரைபிள்களையும் தனது சிறிய கப்பலில் ஏற்றி வருபவன் ஓர் அமெ



ஒரு பெருமூச்சுடன் அரசன் டெலிபோனைக் கையிலெடுத்தார். மூர்பானைத் தம் அறைக்கு வரச்சொல்லி விட்டுத் தம் மகன் பக்கமாய் மீண்டும் அவர் திரும்பியபோது அவர் முகத்தில் முதன் முறையாகக் கவலைக் குறிகள் படர்ந்திருந்தன. "அவோலோலோவை உடனே கைது செய்ய உத்தரவு பிறப்பித்தால் என்ன?" என்று கேட்டார் மன்னர்.

"காலங்கடந்த யோசனை" என்றான் நிஜா. "அந்தக் கட்டளையை நீங்கள் பிறப்பிக்க வேண்டும் என்றுதான் காத்துக்கொண்டிருக்கிறார்கள் கலகக்காரர்கள். அதைக் காரணம் காட்டியே உங்களைக் கவிழ்ப்பார்கள். பெட்ரோல் ஊற்றி வைத்திருக்கும் வைக்கோலில் நெருப்புக் குச்சியைக் கிழித்துப் போட்டதாய் முடியும் உங்கள் உத்தரவு. புரட்சித் தீ நாடெங்கும் பரவும்."

மன்னன் திடுக்கிட்டான்.

தான் ஆசையோடு வளர்த்துவந்த அருமைக் கழுகை மீண்டும் வானில் பறக்க விட்டு விட்டு அமீர் கூறினான்: "அப்பா! எடுத்த எடுப்பிலேயே அந்தக் குள்ளநரி அவோலோலோவுக்கு வலை விரித்தால் நிஜா சொல்வது போல் விபரீத விளைவுகள் உண்டாகலாம் ஆனால் புரட்சியாளர்களுக்கு ஆயுதங்கள் அனுப்பி உதவுவதாகத் தங்கை குறிப்பிடுகின்ற அந்த அமெரிக்கனை இப்போதே பிடித்து வந்து தண்டித்தால் பாடம் கற்பித்தது போலிருக்கும். அப்போது

ரிக்கன். கள்ளத்தனமாக வருகின்ற இந்த ஆயுதங்களை ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்குவது யார் என்பதை அறிந்தால் நீங்கள் அதிசயப்பட்டுப் போவீர்கள். அந்த மனிதர் யார் தெரியுமா? நீங்கள்தான்! ஆமாம் அப்பா! உங்களுடைய கஜானாவிலிருந்துதான் அந்த அமெரிக்கனுக்குப் பணம் தரப்படுகிறது. அமெரிக்கப் பாங்குகள்பலவற்றில் இவன்கணக்கில் பணம் கட்டப்படுகிறது. இந்த ஏற்பாட்டில் எள்ளளவும் பிசகு நேராமல் கவனித்துக் கொள்பவர் உங்கள் முதன் மந்திரி மூர்பான்!"

"மகனே, கதை புனைகிறாயா?" என்று கேட்டார் மன்னர்.

"ஏன் உங்களுக்கு நான் சொல்வதில் சந்தேகமிருந்தால் மூர்பானையே இங்கே அழைத்து விசாரியுங்களேன்!"

"நிஜா! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிய வந்தது?"

"அதெல்லாம் பெரிய கதை. அதைக் கூற இப்போது நேரமில்லை."

"என்னுடைய ரகசியப் போலீஸாருக்கே தெரியாத விஷயங்கள் உனக்கு...."

"அப்பா உங்களுடைய அழகான ரகசியப் போலீஸார் அவோலோலோ ஆட்டி வைத்த படி ஆடுகின்ற அவனுடைய கைப்பாவைகள்!"







அபோபோபோவும் உடனடியாகத் தன் கைவரிசையைக் காட்டத் தயங்குவான். நம்மை நாமே ஸ்திரப்படுத்திக் கொள்ள அவகாசம் கிடைக்கும்.''

''நல்ல யோசனை!'' என்று பாராட்டினார் மன்னர்

''நிறைவேற்ற முடியாத யோசனை'' என்றான் திறூ.

''ஏன்?''

''ஏனென்றால் லயான்ஸினுடைய கப்பல் நங்கூரம் பாய்ச்சியிருக்கும் மறைவிடம் உங்களுக்குத் தெரியாது.''

''நீ சொல்வதைப் பார்த்தால் அவன் ஒளிந்திருக்கும் இடம் உனக்குத் தெரியும் போலிருக்கிறதே'' என்றான் அமீர்.

''எனக்குத் தெரியும். ஆனால் சொல்ல மாட்டேன்'' என்று ஆணித்

தரமாக மொழிந்த நிஜூ" அந்தக் கணமே அப்பாவின் தோள்களைத் தன் கரங்களால் சுற்றி வளைத்துக் கொண்டு அவர் நெஞ்சிலே முகம் புதைத்து விம்மத் தொடங்கினாள்.

மெல்ல அவள் கேசத்தைக் கோதிவிட்ட அரசர், "கண்ணே! என்ன நேர்ந்தது? எதற்கு அழுகிறாய்? எதுவானாலும் என்னிடம் சொல்லம்மா" என்றார் அன்பு ததும்ப.

"அப்பா! உங்களுக்குத் துரோகம் செய்ய வேண்டும் என்பது என் எண்ணமில்லை அப்பா! ஆனாலும் லயான்ஸ் தன் சிறிய கப்பலுடன் கரைதட்டி நிற்குமிடத்தை நான் கூறவே முடியாது. ஏனென்றால் நான்.... நான் அவரைக் காதலிக்கிறேன்!"

மகளை முதுகில் தட்டிக் கொடுத்தவாறே அவள் சிரத்தில் கண்ணீர் சிந்தினார் அரசர். "பாவம்! தாயில்லாப் பெண்" என்று முணுமுணுத்தார்.

இச்சமயத்தில் மந்திரி மூர்பான் அறையினுள் நுழைந்து மன்னரை வணங்கினார்.

"மூர்பான்! நான் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானா? புரட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டு என்னைக் கவிழ்த்துவிட்டு நாட்டை ஆளப் பார்க்கிறீர்களாமே!" என்று அரசர் இடி முழக்கம் போன்ற அதிகாரத் தொனியில் கேட்டபோது மூர்பானின் தேகம் வெடவெடக்கத்தான் செய்தது.

பணிவுடன் பேசினார் அவர். "அரசே! நான் பதவிக்கு வருவது நிச்சயம் என்கிற நிலையில்தான் அலோலோலோ என் உதவியை நாடினான். தனக்குள்ள அபரிமிதமான அதிகாரச் செல்வாக்கை மெய்ப்பித்துக் காட்டி, உதவ மறுத்தால் எனக்கு என்ன நேரிடும் என்பதையும் வெளியிட்டான். அத்தருணத்தில் நான் வேறென்ன செய்ய முடியும்? மன்னர் மன்னித்தருள வேண்டும்!"

"எல்லாம் விதிப்படி நடக்கும். மூர்பான்! சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் உங்களை எனக்கு எதிராளியாக்கிவிட்டிருக்கிறது. உங்களுக்கு மரண தண்டனை விதிக்க எனக்கு மனம் வரவில்லை. தேசப் பிரஷ்டம் செய்கிறேன். எங்காவது கண்காணாத இடத்துக்குப் போய்விடுங்கள்!"

"மன்னர் பெருமானே! இன்னொரு சமயமாக இருந்தால் நீங்கள் அளிக்கும் தண்டனையைச் சந்தோஷமாக அனுபவிப்பேன். ஆனால் இன்று அதை ஏற்றுக் கொள்ளத் திராணியற்றவனாக இருக்கிறேன். அலோலோலோவின் அனுமதியின்றி நான் இந்த நாட்டை விட்டுச் செல்வதற்கில்லை. புரட்சி வெற்றி பெற்றதும், தனக்குப் பதவி ஆசை கிடையாது என்பதாகச் சிறிது காலத்துக்கேனும் அலோலோலோ காட்டிக் கொள்ள வேண்டியது அவசியமல்லவா? அவ்வாறு மக்களை ஏமாற்ற என்னையே நாட்டின் தலைவனாகச் சில மாதங்களுக்கு வைத்திருப்பான். பிறகு நான் ஏதேனும் தவறு செய்து விட்டு அதற்காக வருந்தி ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். பின்னர் அலோலோலோ தனக்கு விருப்பமில்லாவிட்டாலும் 'மக்களின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு' தான் ஆட்சி பீடத்தில் அமருவதாய்ச் சொல்வான்."

"அதன் பின்னர் கொடுங்கோன்மையும் சர்வாதிகாரமும் இந்நாட்டில் நிலைபெற்று விடும்" என்று முடித்து வைத்தார் மன்னர்.


"அரசே! ஒரே ஒரு விஷயம்! நீங்கள் தப்பிச் செல்வதற்காக ஒரு விமானத்தைத் தயாராக வைத்திருக்கிறேன்....."

"மூர்பான்! உன் கருணைக்கு நன்றி. ஆனால் என் இருப்பிடம் இந்த அரண்மனைதான். இதை விட்டு நான் அசைய மாட்டேன்!"

மூர்பான் வணக்கம் கூறி விடைபெற்றுச் சென்றதும் மன்னர் தம் மக்களைப் பார்த்தார். "அமீர்! 'தங்கையை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்' என்று நான் கூற வேண்டிய அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதுடன் உன்னையும் கவனித்துக் கொள்கிற சாமர்த்தியம் அவளுக்கு இருப்பதாகவே தோன்றுகிறது. இருவரும் சென்று வாருங்கள். தப்பிப் பிழையுங்கள். ஆனால் கோழைகளாக மாறாதீர்கள்; போராட மறக்காதீர்கள்!"

"அப்பா! அரசுரிமை என் பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்" என்று மகன் சூளுரைப்பதைக் கேட்டு மகிழ்ந்த அரசர் அழுது புலம்பிய மகளையும் ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைத்தார்.

தனிமையில் விடப்பட்டதும், டெலிபோனைக் கையிலெடுத்து, புரட்சித்தலைவன் அலோலோலோவைக் கைது செய்து தம் எதிரில் அழைத்து வருமாறு ராணுவத் தளபதிக்குக் கட்டளையிட்டார் மன்னர் அலென்டோஸா. பிறகு அமைதியாக நடந்து போய்த் தம் அரியாசனத்தில் அமர்ந்து கொண்டார். வரப் போகிறவர்களையும் வரப் போவதையும் எதிர் நோக்கிக் காத்திருக்கத் தொடங்கினார்.



2

அரண்மனையில் வாழ்ந்தவர்கள் ஆரண்யத்தை அடைந்தார்கள். காட்டிலே பதுங்கியவர்கள் பகிரங்கமாக நாடாண்டார்கள். தலைநகர் அபுடாபியில் புரட்சியின் வெற்றி விழா கோலாகலமாய் நடைபெற்றது. கடற்கரை ஓரமாக அமைந்திருந்த அரண்மனை அரசன் படுகொலையுண்ட பிறகு 'மக்கள் மாளிகை' என்று மாற்றுப் பெயரிடப் பட்டு விளங்கியது. அதன் பதினைந்து அடுக்கு மாடிகளிலும் சரி, விசாலமான தோட்டத்தி



''இந்தத் தொழிற்சாலையில் எல்லாமே மின்சாரத்தினால் ஓடுகிறதாமே!''

''ஆமாம்! என் சம்பளத்தைக் கேட்டாலே உங்களுக்கு 'ஷாக்' அடிக்கும்!''

னும் சரி, வர்ண வர்ண மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்தன. மனோரம்மியமான மலர்ச் செடிகள், தென்னை, ஈச்ச மரங்கள் இவற்றுக்கிடையில் மரகதப் பச்சையில் பட்டுக் கம்பளம் விரித்தாற் போல் இருந்த புல்வெளியில் ஐந்நூறு பேர்களுக்கு மேல் விருந்துண்ணக் குழுமியிருந்தார்கள். விருந்தினரின் ஜரிகை வேலைப்பாடமைந்த உயர்தரப் பட்டாடைகளும் தங்க, வைர ஆபரணங்களும் செயற்கை ஒளியில் ஜாஜ்வல்யமாக ஜொலித்தன. அவர்களில் செல்வந்தர்கள் உண்டு; செருக்கு மிக்கவர்கள் உண்டு; சீமாட்டிகள் உண்டு; சினிமா நட்சத்திரங்கள் உண்டு. பட்டம் பெற்றவர்கள் உண்டு; பதவி வகிப்போர் உண்டு. மாறிய ஆட்சிக்கு அநுசரணையாகத் தங்கள் நிறத்தையும் மாற்றிக் கொண்ட இந்தப் பச்சோந்திகளைத் தவிர அங்கே, 'நாட்டின் மன்னர்கள்' எனப் புகழப்பட்ட ஜன சமுதாயத்தின் பிரதிநிதியாக ஒருவனைக் கூடக் காணோம்.

அலோலோவோ அனைவரையும் வரவேற்றுப் புதிய ஜனாதிபதி மூர்பானை அறிமுகப் படுத்திவைத்தான். வழக்கத்துக்கு மாறாகச் சுருக்கமாகவே முடித்துக் கொண்டான் தன் பேச்சை. சாரமற்ற நீண்ட சொற்பொழிவுகள் இவர்களிடத்தில் செல்லாது என்பது மட்டுமல்ல காரணம்; அவனுக்கு நிறைய வேலைகள் இருந்தன. வெற்றி விழாவுக்கு எத்தனை அழகிகள் வந்திருக்கிறார்கள்? அவர்களை யெல்லாம் அறிமுகம் செய்து கொள்ள வேண்டாமா? அதிலும் குறிப்பாகத் தனக்கு ஆயுதங்கள் விலைக்குக் கொடுத்து உதவிய லயான்ஸ், பின்னோடு ஓர் ஆரணங்கையும் அழைத்து வந்திருந்தானல்லவா? அவளைச் சந்திக்கும் சாவகாசமாக அளவளாவுகிற ஆர்வத்துடன் மேடையை விட்டு இறங்கினான் அலோலோவோ. மதுக் கிண்ணம் ஒன்றினை வலக் கரத்தில் ஏந்திக் கொண்டு இடக் கரத்தால் தாடியைத் தடவியபடியே விழிகளைச் சுழற்றி அவளைத் தேடினான்.

அந்தத் தோட்டம் முழுவதுமே அத்தனை எழிலுடன் தோற்றமளிப்பதற்குக் காரணமான அழகு தேவதை போல ஒரு பக்கமாய் நின்று கொண்டிருந்தாள் அவள்.

தன்னுடன் பேச வந்த ஆடவர்களை ஒதுக்கி விட்டும் ஆடலிழைத்த அணங்குகளை அலட்சியம் செய்தும் அவள் இருந்த பக்கமாய் விரைந்தான் அலோலோவோ.

ஆனால் அவன் அவளை அணுகுவதற்கு முன்னால் நாட்டிய இசை தொடங்கி விட்டது. லயான்ஸுடன் ஜோடி சேர்ந்து ஆட ஆரம்பித்து விட்டாள் அவள்: மெக்ஸிகோ தேசத்திலிருந்து அங்கு குடியேறிய இசை அது. அத்துடன் சிறிய முரசங்களில் விரல்கள் அதிர்ந்த போது 'டம் டம்' என்ற தாள ஒலி எழுந்தது. வாலிப முறுக்கேறிய யுவர்களையும் யுவதிகளையும் ஆடுமாறு கவர்ந்திழுத்த அந்த நாட்டிய இசையின் வேகம் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே போயிற்று. அந்த வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் மற்றவர்களெல்லாம் ஆடுவதை நிறுத்திவிட ஜெனவ் மட்டிலும் கைகளைக் கொட்டிக் கொண்டும் முகத்தைக் கவ்விய கேசத்தை அவ்வப்போது தலையின் ஒரு நொடிப்பிலே அப்புறப்படுத்திக் கொண்டும் தாளம் பிசகாமல் ஆடிக் கொண்டிருந்தாள். மேனி முழுவதுமே பதறித் துடிக்க ஏதோ ஓர் ஆவேசம் வந்தவளைப் போல அவள் ஆடிய அந்த நடனம் அவளுடைய இளமையையும் எழிலையும் எடுத்துக் காட்டவென்றே அமைந்தது போலிருந்தது.

நடனம் முடிந்த பின்னரும் நெடுமூச்சு வாங்க நின்ற அவளையே கண்கொட்டாமல் பார்த்தது பார்த்தபடி நின்ற அலோலோவோ கைதட்டிப் பாராட்டவும் மறந்தான்.

அவள் கையைப் பற்றி அவனிடத்தில் அழைத்துப் போனான் லயான்ஸ். ''இவள் என் மனைவி; பெயர் ஜெனவ்'' என்று அறிமுகம் செய்து வைத்தபோது அவன் குரலில் கடுமை தொனித்தது. அவன் கூறியதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் ஜெனவைப் பார்த்துப் புன்னகை செய்த அலோலோவோ திடுமென்று விழிப்புற்றவனாக, ''இவள்.... உன்.... நீ என்ன சொன்னாய்?'' என்று வினவினான்.

''இவள் என் மனைவி ஜெனவ்'' என்றேன்:

''உனக்குத் திருமணமாகி விட்டதாய்ச் சொல்லவே யில்லையே?''

''எனக்குக் கப்பலைச் செலுத்த உதவவும், இதர சிறு பணிகளைத் தட்டாமல் செய்யவும் என் தம்பி - சிற்றப்பனின் மகன் ஒருவன் எப்போதும் உடன் இருந்தானல்லவா?''

''ஆமாம்'' என்றபோதே அலோலோவோவுக்கு விஷயம் புரிந்து விட்டது. ''அவன் தான் இவள் என்கிறாயா? ஆமாம், ஆமாம்! முகஜாடைகூட அப்படியே இருக்கிறதே! முன்பே ஊகித்திருக்க வேண்டும் நான். பொல்லாதவன்தானப்பா நீ! ஆனாலும் இவ்வளவு ஆபத்தான காரியங்களில் ஒரு பெண்ணை, கட்டிய மனைவியை ஈடுபடுத்தியிருக்கக் கூடாது நீ! ஆண் உடை தரித்தால் போதுமா? வீரம் விளைந்து விடுமா?''

''ஆபத்து நிறைந்த காரியங்களில் என் போன்ற பெண்களுக்கும் இடமுண்டு என்பதும் அதில் அவர்கள் வெற்றி பெறவும் முடியும் என்பதும் இந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்திலேயே நிரூபணமாகிறது. இல்லையா?'' என்று கேட்டாள் ஜெனவ்.

''அடேயப்பா!'' என்று அசந்து போனது போல் நடித்தான் அலோலோவோ. ''அழகுடன் வாக்குச் சாதுர்யமும் பெற்று விளங்குகிறாள் உன் மனைவி. பேச்சு வன்மையால் மக்களைக் கவர்ந்த நானே இவளிடம் பாடம் கற்கலாம் போல் இருக்கிறதே!'' என்றவன் அவள் கரத்தைத் இயல்பாகப் பற்றிக் குலுக்கினான். ''ஜெனவ்! நமது நட்பு வளர வேண்

பிராஸோவினால்
அதிகப் பிரகாசம்



பிரகாசமுள்ள பித்தளைச்
சாமான் உங்கள்
அறையின் அலங்காரத்தை
அதிகரிக்கச் செய்கிறது—
அறைக்கு ஒளி மிகுந்த
தோற்றத்தை அளிக்கிறது.
உங்கள் பித்தளைச்
சாமான் பளபளக்கும்
ஒளியுடனிருப்பதற்கு,
அதனைத் தவறாமல் பிராஸோ
கொண்டு மெருகிடுவதே
சந்தேகமற்ற வழியாகும்.
உபயோகிக்க சுலபமான
பிராஸோ சிக்கனமானதும் கூட.

உங்கள் பித்தளைச் சாமான்களை

பிராஸோவினால்



வாரத்திற்கு ஒரு முறை
ஒவ்வொரு வாரமும் மெருகிடுங்கள்

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT/B.R. 5708

BR-4

டும்; பின்னர் சந்திக்கிறேன்'' என்று கூறி விட்டு மற்ற விருந்தினர்களை யெல்லாம் கவனிக்கச் சென்றான்.

தலைநகர் அபுடாப்பியில் லயான்ஸுக்கு அவனுடைய புதிய அந்தஸ்துக்கு ஏற்பப் பெரியதொரு பங்களா ஒதுக்கப்பட்டிருந்தது.

விருந்து முடிந்தது. இரவு வெகுநேரத்துக்குப் பிறகு வீட்டை அடைந்ததும் களைப்பு மிகுதியில் கட்டிலில் விழுந்தான் ஜெஹலன்.

''அழகும் பாசமும், கண்ணியத் தாழ்வும் சனியன்! அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை எனக்கு!'' என்றான்.



3

லயான்ஸ் மேற்கொண்ட முயற்சிகள் நியாயமானவைதானா என்ற சந்தேகம் ஜெஹலனுக்கு எப்போதுமே இருந்ததுண்டு. பணத்தையே பிரதானமாகக் கருதி நேர்மையைப் புறக்கணிப்பதற்கில்லை என்று அவள் கூறும்போதெல்லாம் 'எவன் இந்த நிலை ஆண்டால் எனக்கென்ன? யார் அதிகப் பணம் தருகிறார்களோ அவர்களுக்கு என் உழைப்பு' என்று மூர்க்கத்தனமான பிடிவாதத்துடன் பேசிய லயான்ஸ், புரட்சி வெற்றி பெற்ற இரண்டு மாதங்களுக்குள்ளாகத் தான் செய்தவைகளின் தன்மை நிலைகளைச் சிந்திக்கத் தொடங்கியிருந்தான்.

அதிலும் இன்று நடந்த விசாரணையைக் கண்ணுற்ற பிறகு, அவன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். நீதி, சட்டம் என்கிற தத்துவங்களைக் குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டு நடத்துகிற விசாரணையை நீதி விசாரணை என்று பெயரிட்டு அழைக்கலாமென்றால் அதுவும் ஒரு நீதி விசாரணைதான். முதன் முதலாக, மடிந்த மன்னனுடைய மறைந்து வாழும் மக்களுக்குச் சாதகமாகச் சதி செய்ததாக மூர்பான் மீது குற்றம் சாட்டப்பட்டது. நீண்ட பிரசங்கத்தின் இறுதியில், ''ராஜ விசுவாசம் உள்ளவன் தேசத் துரோகி! தூக்கிலே போடு அவனை!'' என்று முழக்கினான் அபோலோவோ.

''தூக்கிலே போடு! தூக்கிலே போடு!'' என்று எதிரொலித்தார்கள் மக்கட் பிரதிநிதிகளெனக் கோர்ட்டிலே கூடியிருந்த அபோலோவோவின் கூலி ஆட்கள்.

மூர்பானின் சார்பிலே வாதாட அனுமதி கோரி எழுந்து நின்றார் ஒரு வழக்கறிஞர். ''எனது கட்சிக்காரர் குற்றம் புரிந்தார் என்று நிரூபிக்க எவ்விதமான ஆதாரமோ சாட்சியமோ இல்லையே'' என்றார்.

''ஆதாரம் தேவையில்லை; மக்கட் சமூகத்தின் மன ஆரோக்கியத்தைக் கருதி இவனைச் சாக அடிக்க வேண்டியதுதான்!'' அபோலோவோ பளிச்சென்று பதிலிறுத்தான்.

''மரணம்! மரணம்!'' என்று ரத்தவெறி கொண்டவர்களாய்க் கூக்குரலிட்டார்கள் சுற்றிலுமிருந்தவர்கள். வழக்கறிஞர் அதன் பின்னர் வாய் திறக்கவில்லை.

ஒருவரா? இருவரா? அரச குடும்பத்தினரிடம் அனுதாபம் கொண்டோர் என்று சந்தேகிக்கப்பட்ட நூற்றுக் கணக்கானவர்கள் சுவரோரமாக நிற்க வைக்கப்பட்டுச் சுடப்பட்டார்கள்! மக்களாட்சி ஸ்தாபிதமான புதிதில் கண் துடைப்புக்காக உருவான அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் தன் இஷ்டப்படி மாற்றி அமைத்துச் சகல அதிகாரங்களையும் தனதாக்கிக் கொண்டிருந்தான் அபோலோவோ.

வெறுப்புக் கொந்தளிக்கிற உள்ளத்துடன் வீடு சேர்ந்த லயான்ஸ் அது 'வெறிச்'சென்று இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். ஜெஹலன் அவனுக்காக எழுதி வைத்திருந்த ஒரு கடிதம்தான் மேஜை மீது இருந்தது.

''அன்பு மிக்கவருக்கு,

என்னை மன்னியுங்கள். ஜனநாயகத்துக்கு வழி வகுப்பதாய் எண்ணிக்கொண்டு நீங்கள் சர்வாதிகாரத்துக்கும் கொடுங்கோன்மைக்கும் அடிகோலி விட்டதாக நான் கருதுகிறேன்.

அபோலோவோவின் சுயரூபம் தெரிந்த பிறகும் தொடர்ந்து அவனுடன் ஒத்துழைத்துவருகிற உங்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. வேதனை அளிக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ உங்களுடன் சேர்ந்து நானும் செய்து விட்ட தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக இதோ மீண்டும் ஆண் உடை தரித்து நான் கிளம்பி விட்டேன். காடு மலைகளில் அலைந்து திரிந்து காலஞ் சென்ற மன்னரின் மக்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்யத் தீர்மானித்திருக்கிறேன்.

அன்பரே! கருத்து வேற்றுமை ஏற்பட்ட போதிலும் உங்களிடம் நான் கொண்ட காதல் என்றும் மாறாது!

உங்கள் அன்பு மனைவி, ஜெஹலன்.''

கண்ணீர் சிந்தியதால் கடைசி வரியில் எழுத்துக்கள் கலங்கியிருப்பதைக் கண்டு நெஞ்சம் புழுங்கினான் லயான்ஸ்.

''அவசரப்பட்டு விட்டாய், ஜெஹலன்! பணத்தையே பிரதானமாகக் கருதி மனிதப் பண்பைக் காற்றிலே பறக்கவிட்ட நான் மனம் மாறித் திருந்திய தருணத்தில் நீ என்னைத் தனியாக்கி விட்டுப் போய் விட்டாய். இன்னும் சற்றுப் பொறுத்திருந்தாயானால் அமீரை அரியாசனத்தில் அமர்த்தும் முயற்சியில் நாம் இருவரும் சேர்ந்தே ஈடுபட்டிருக்கலாமே!'' என்று மானசீகமாகப் புலம்பியவாறே கடிதத்தை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான் லயான்ஸ்.



4

காடு மலைகளைத் தாண்டிச் செல்கையில் லயான்ஸ் அருவருக்கத் தக்க காட்சிகள் பலவற்றைக் கண்டான். நாட்டின் அமைதியைக் குலைக்கும் கலகக்காரர்களென இன்று ஆட்சியிலிருப்போரால் கருதப்பட்ட அமேரையும், அவன் சகாக்களையும் அடக்கி ஒடுக்க ராணுவத்தினர் ஏவப்பட்டனர். அவர்கள் கிராமம் கிராமமாகப் புகுந்து அரச வம்சத்தினர் ஒளிந்திருக்கும் இடத்தைக் கூறுமாறு கேட்டு மக்களைச் சித்திரவதை செய்தார்கள். ஓரிடத்தில் பதினைந்து வயதுச் சிறுவன் ஒருவன் கத்தி முனைக்கெதிரிலும் தனக்கொன்றுமே தெரியாதெனப் பொய் சொல்லிச் சாதிப்பதை மறைந்திருந்து பார்த்து மெய்சிலிர்த்தான் லயான்ஸ். ஐந்து நிமிஷங்களுக்கு முன்பாகத்தான் அதே சிறுவன், லயான்ஸுக்கு அமேர் இருக்கிற இடத்தை அடையும் வழியைக் கட்டிக்காட்டியிருந்தான். ராணுவ உடையில் இல்லாததாலும், அயல்நாட்டைச் சேர்ந்தவனாதலாலும் அன்புடன் பேசியதாலுமே லயான்ஸினால் அந்த விவரத்தைக் கேட்டுப் பெற முடிந்தது. அமேருக்கும் அவன் தோழர்களுக்கும் உணவளித்து உதவுவோராகச் சந்தேகிக்கப்பட்ட சிலரைக் கழுத்திலே சுருக்கு மாட்டிப் படகில் ஏற்றி ராணுவத்தினர் அழைத்துப் போவதை மற்றுமோர் இடத்தில் பார்த்தான் லயான்ஸ். இன்னும் அந்த ராணுவத்தினர் செய்த அட்டகாசங்கள் கொஞ்சநஞ்சமல்ல. குடிசைகளைச் சூறையாடி விட்டுப் பின்னர் தீ வைத்தார்கள். ஆடு மாடுகளைக் கொன்று விருந்துண்டார்கள். பயந்து ஓடிய இளம் பெண்களைப் பின்துரத்தினார்கள்.

இவ்வளவு துன்பங்களுக்கு இடையிலும் அந்த வனாந்திரப் பிரதேசங்களில் நாடோடிகளைப் போல் வாழ்ந்த அம்மக்களின் தைரியம் குன்றவில்லை என்பதைக் கண்டான் லயான்ஸ். நாடாள்பவனுடைய அரக்கத் தன்மையுடன் கூடிய அட்டூழியங்கள் அவர்களிடையே சினத்தைப் பொங்கச் செய்தது; ராஜ பக்தியை வளர வைத்தது; வீரத்தைக் கிளர்ந்தெழச் செய்தது. அத்தனை பேரும் அமேருக்கு உறுதுணையாக நிற்கத் தயாராக இருப்பதை லயான்ஸினால் கணிக்க முடிந்தது. அவன் மேலே நடந்தான்.

நிஹாவுடன் பல தடவைகளில் நெருங்கிப் பழகியிருக்கிறான் லயான்ஸ். ஆனால் அப்போதெல்லாம் அவள்தான் அந்நாட்டின் அரசிளங்குமரி என்று அவன் அறிந்திருக்கவில்லை. அண்ணனும் தங்கையும் புரட்சியாளர்களின் கையில் சிக்காமல் தப்பி ஓடுவது எப்படிச் சாத்தியமாயிற்று என்ற கேள்வி எழுந்த போதுதான், சாமான்யப் பெண்ணைப் போல் நடித்துச் சதிச் செயல்களைப் பற்றிய விவரங்களை அறிய முயன்று அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறாள் அவள் என்பது தெளிவாயிற்று.

'அவள் என்னிடம் நடந்து கொண்ட விதத்தை முழுக்க முழுக்க நடிப்பு என்றும் தீர்மானித்து விடுவதற்கில்லைதான்.'—இப்படி நினைத்தான் லயான்ஸ். 'காதல் கொண்ட ஒருத்தியாக அத்தனை தத்ரூபமாக நடிப்பது சாத்தியமா என்ன? உண்மையை நடிப்பு என்று நான்கூடத் தவறாக முடிவு கட்டி விடலாம். ஆனால் பெண் மனத்தைப் பெண் புரிந்து கொள்ளாதிருப்பாளா? ஆண் உடையில் என்னுடனேயே சதா இருந்து வந்த ஜெஹலன் ஒரு முறை, 'ஐயோ, பாவம்! அந்தப் பெண் உங்கள் மீது தன் உயிரையே வைத்திருக்கிறாள்' என்று அனுதாபத்துடன் கூறவில்லையா? அவளுக்கென அர்ப்பணிக்கப்பட்ட என் இதயம் வேறு ஒருத்தியைப் பற்றி எண்ணாது என்ற நம்பிக்கையும் பெருமையும் தொனித்ததே அன்று ஜெஹலன் பேசிய பேச்சில்....

கானகத்தின் மத்தியில் சலசலத்து ஓடும் ஒரு சிற்றாற்றில் அச்சமின்றித் தன்னந்தனியாக நீச்சலடித்துக் குளித்துக் கொண்டிருக்கும் இளவரசி நிஹாவைக் கண்டதும் இந்தப் பழைய நினைவுகள் எழுந்தன, லயான்ஸுடைய உள்ளத்தில்.

"நிஹா!" என்று அவன் அழைத்ததும் இளவரசியின் உடல் குபுக்கென்று நீருக்குள்ளே கழுத்து வரை மூழ்கி மறைந்தது.

மாற்றுடை தரித்து அவள் வரும் வரை மறைவாகச் சென்றிருந்தான் லயான்ஸ். மீண்டும் அவள் எதிரே அவன் வந்த போது அவள் கண்கள் அனலைக் கக்கிக் கொண்டிருந்தன. "உங்களால் மக்களுக்கு எத்தனை துன்பம் பார்த்தீர்களா? அத்தனை பேர்களுடைய கண்ணீரும் உங்களைச் சும்மா விடுமா? அதனால்தான் உங்கள் தம்பியைப் பறி கொடுத்து விட்டு நிற்கிறீர்கள்!"

துணுக்குற்றுத் துள்ளினான் லயான்ஸ். அவன் தேகம் வெட வெட வென்று நடுங்கியது. "நிஹா! நீ என்ன சொல்கிறாய், நிஹா?" என்று பதறுகிற குரலில் கேட்டான்.

விசனிக்கின்ற முறையில் பேசினாள் அவள். "நான் ஆத்திரப்பட்டுப் பழிப்பது போல் கூறியது தவறுதான். மன்னியுங்கள். உங்கள் தம்பியைப் புதை சேற்றுக் குழியிலிருந்து மீட்க ஆனமட்டும் முயன்று பார்த்தேன். முடியவில்லை. உதவிக்கு ஆட்களை அழைத்து வருமுன்னர்...."

அவள் மேலே பேச வேண்டியிருக்கவில்லை. லயான்ஸ் நிற்கச் சக்தியற்றுத் தரையில் விழுந்து அழுது புலம்பினான்.

அவன் முதுகில் ஆதரவாகத் தடவிக் கொடுத்த நிஹாவிடம் நீண்ட நேரத்துக்குப் பிறகு ஜெஹலனுடைய கடிதத்தை எடுத்துக் கொடுத்தான் லயான்ஸ். அதைப் படிக்கும்

போது அவனுக்கு ஏற்படக்கூடிய வேதனையைப் புரிந்து கொண்டிருந்தானாதலால் அனுதாபத்துடன் சற்று நேரம் காத்திருந்து பின்னர், "நிஹா! உங்களுக்கு உதவ எனக்கு அநுமதி கொடு. உன் மக்களுக்குக் கொரில்லாப் போர் முறையில் பயிற்சி அளிக்கிறேன். மலைப்பாங்கான இந்தப் பிரதேசத்தில் கையாளப்பட வேண்டிய யுத்த முறை அது தான். அலோலோவோவுடைய ஆட்களை இங்கே கவர்ந்திழுத்து அழிப்போம். அரியாசனத்தில், அமேரை அமர்த்தினுலொழிய ஜேஸனுடைய ஆத்மா சாந்தியடையாது! நிஹா, தயவுசெய்து என்னை உங்களில் ஒருவனும் ஏற்றுக் கொள்ள மாட்டாயா?" என்று கெஞ்சினன் வயான்ஸ். சம்மதம் தெரிவித்து மெல்லத் தலையசைத்தாள் அவள்.

இது நடந்த நான்காவது நாள் சர்வாதிகாரப் போக்குக் கொண்ட அண்டை நாட்டிலிருந்து, அலோலோவோவின் கோரிக்கைக்கு இணங்கிப் போர்த் தளவாடங்களும் துருப்புக்களும் வந்து சேர்ந்தன.

மலைப் பாதைகளை டாங்குகளின் பல் சக்கரங்கள் அரைத்துக் கொண்டு முன்னேறின. பீரங்கிகளின் பேரிடி ஓசை மலை முகட்டுக்களுக்கு எட்டி எதிரொலித்தது. மிஷின் கன்கள் அனலைக் கக்கின. விமானங்களும் குண்டு மழை பொழிந்தன. பசுங் காடு சுடுகாடாகியது.

பிணக் குவியல்களுக்கிடையில் கிடந்த அமேரைத் தூக்கி வந்து ஓரிடத்தில் அடக்கம் செய்தான் வயான்ஸ்.

அருகில் மௌனமாக நின்றாள் நிஹா. அழுது புலம்பவில்லை; கண்ணீர் உகுக்கவில்லை. துன்பத்தை அநுபவித்து அநுபவித்து மறத்துப் போய் விட்டதா அவள் இருதயம்?

நீண்ட நேரத்துக்குப் பிறகு, "நிஹா!" என்று மெல்ல அழைத்தான் வயான்ஸ். "இனி நமக்கு இங்கே வேலையில்லை; ஒரு மறைவிடத்தில் என் கப்பல் நமக்காகக் காத்திருக்கிறது; வா போகலாம்" என்று அழைத்தான்.

தலையசைத்தாள் நிஹா முடியாதென்று. "உங்கள் இதயத்தில் எனக்கு இடமில்லை. உங்கள் நாட்டிலும் எனக்கு இடமில்லை. நான் இருக்க வேண்டிய இடம் இதுதான்; இந்த வைரத் தீவுதான். நீங்கள் சந்தோஷமாய்ப் போய் வாருங்கள்" என்றாள்.

தரையில் வைத்திருந்த தன்னுடைய கனமான தோல் பையை எடுத்துத் திறந்தான் வயான்ஸ். அதிலே அன்றாடத் தேவைக்கான சில சாமான்களைத் தவிர ஒரு சிறிய புத்தகமும் இருந்தது. அதை அவளிடம் தந்தான்.

"நிஹா! எங்கள் நாட்டுப் பேரறிஞர் ஒருவர் எழுதியது இது. எனது அன்பளிப்பாக ஏற்றுக் கொள்" என்று கூறி விட்டுப் பதிலை எதிர்பாராமல் நடக்க ஆரம்பித்தான். அவன் தலை மறையும் வரை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின்னர் புத்தகத்தைப் பிரித்தாள் நிஹா.

ஜேம்ஸ் தர்பர் எழுதிய 'கடைசி மலர்' என்ற புத்தகம் அது. ஆசிரியர் தாமே வரைந்திருந்த கார்ட்டூன் சித்திரங்களை ஒரு முறை பார்த்துக் கொண்டே வந்தாள் அவள். பிறகு ஒவ்வொரு கார்ட்டூன் படத்துக்கும் கீழே எழுதி அச்சடிக்கப்பட்டிருந்த வாசகங்களைப் படித்தாள். அதன் சுருக்கம் இதுதான்:

பன்னிரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாக நகரங்கள், கிராமங்கள் மட்டுமின்றி உலக நாகரிகமே அழிந்து மக்கள் கீழ்த்தரமான மிருகங்களைவிடக் கேவலமான நிலையில் எதற்கும் லாயக்கற்றவர்களாய் நாட்களைக் கடத்தினார்கள். அன்பு, காதல் எல்லாம் உலகிலிருந்து மறைந்து விட்டன. பல வருஷங்களுக்குப் பின் ஒரு நாள் அதுவரை மலரையே பார்த்தறியாத ஓர் இளம் நங்கை உலகின் கடைசி மலரைத் தற்செயலாகக் கண்ணுற்றாள். அது சாகாமல் இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். அதைக் காப்பாற்ற அவளுக்கு ஒரு வாலிபன் உதவினான். ஒரு நாள் அம்மலரிடம் ஒரு தேனீயும் தேன்சிட்டும் வந்தன.

விரைவில் நூற்றுக்கணக்கான மலர்களும் செடிகளும் தோன்றின; மரங்களும் வளர்ந்தன. அந்த இளம் நங்கை தன்னை அழகு படுத்திக்கொள்ள விரும்பினாள். உலகில் மீண்டும் அன்பும் காதலும் தளிர்விடத் தொடங்கின. நாகரிகம் வளர்ந்தது; கலைகள் தோன்றின. ஓவியர்கள், சிற்பிகள், தையல்காரர்கள் போன்றவர்களுடன் சிப்பாய்களும் ஏராளமாய்த் தோன்றினார்கள்; தளபதிகள் வந்தார்கள். புரட்சியாளர்களும் தங்கள் பணியைச் செய்தார்கள்; மக்களிடையே மனக்கசப்பை வளர்த்தார்கள். உலகில் மீண்டும் யுத்தம் மூண்டது. இம்முறை உலகின் அழிவு என்பது பரிபூரணமாக இருந்தது. உலகில் எஞ்சியிருந்தது எதுவுமேயில்லை—

ஒரு ஆண்; ஒரு பெண்; ஒரு மலர்; இவற்றைத் தவிர.

புத்தகத்தைப் படித்து முடித்ததும் மறத்துப் போயிருந்த நிஹாவின் உள்ளத்திலும் அன்பு துளிர்த்தது; வறண்டு போயிருந்த கண்களில் நீர் படர்ந்தது; பொலிவிழந்த அதரங்களில் புன்னகை மலர்ந்தது; வறண்டு போயிருந்த நெஞ்சத்தில் நம்பிக்கை தளிர்விட்டது.





இருபத்திரண்டாவது அத்தியாயம்

குத்து விளக்கு காரியாலயத்தின் உள்ளே சகல விதமான இருட்டுக்களும் உண்டாயினும் மேலுக்கு என்னவோ பிரகாசமான விளக்குகள் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். அந்தக் காரியாலயத்தில் எந்த இடத்தில் எதற்காக எப்போது வெளிச்சமாக இருக்கும் என்பதும் எந்த இடத்தில் எதற்காக எப்போது இருட்டாக இருக்கும் என்பதும் குமரப்பனுக்கு நன்றாகத் தெரியும். குமரப்பன் அந்தப் பத்திரிகையின் 'கார்ட்டூனிஸ்ட்' மட்டுமல்ல. சமயா சமயங்களில் 'போட்டோ கிராபராக'வும், 'ரிப்போர்ட்டராக'வும், கூட வேலை செய்ய வேண்டி யிருக்கும். இரண்டு கைகளையும் தாராளமாக வீசிக்கொண்டு நடக்கிற நடையிலேயே வழியில் நிற்கிற நாலு பேரை ஒதுங்கச் செய்துவிடுகிற சாமர்த்தியசாலி அவன். சுற்றி இருக்கிறவர்களுடைய மனத்தின் இருளை நன்றாகப் புரிந்துகொண்டு பட்டும் படாமலும் பேசிக் கூர்மையான வார்த்தைகளால் அவர்களை நேருக்கு நேரேயே தாக்கிக் கூறிவிட்டுச் சிரிப்பதில் அவனுக்கு நிகரான நிபுணன் அவன்தான். துணிவும், அந்தத் துணிவை விட்டு நீங்காத ஒருவித வேதாந்த மனப்பான்மையும் உடைய தைரியசாலி அவன். எப்போதும் யாரையும் எதற்காகவும் பொய்யாக மதிப்பதோ, பொய்யாகப் புகழ்வதோ அவனுக்குப் பிடிக்காது. அன்று காலையில் குமரப்பன் அலுவலகத்துக்கு வந்ததும் நாட்டியக் கலைமணி குமாரி மோகினியைப் பேட்டி கண்டு வருவதற்காகப் புறப்பட்டுப் போகவேண்டி யிருக்கும் என்று கூறியிருந்தார்கள். குமரப்பனையும் அந்தப் பத்திரிகையின் கலை



விமரிசனப் பகுதிகளைக் கவனித்துக் கொள்ளும் ஓர் உதவி ஆசிரியரையும் மோகினியின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவதற்காகக் கண்ணாயிரம் தயாராக வந்து காத்துக் கொண்டிருந்தார். குமரப்பனைக் கண்டாலே கண்ணாயிரத்துக்கு எப்போதும் பயம் உண்டு. அந்தப் பயம் தமக்கு இல்லை என்பதை நிரூபித்துக் கொள்ள முயல்கிறவரைப் போல் குமரப்பனிடம் கலகலப்பாகப் பேச முயன்று, அப்படிப் பேசியதன் காரணமாகவே அந்தப் பயத்தை அதிகமாக்கிக் கொண்டு போய்ச் சேருவது அவர் வழக்கம். வெளிப் படையாகத் தைரியசாலியாக இருப்பதைப் போல் காண்பித்துக் கொண்டே அந்தரங்கமாகக் கோழைத் தனத்தை வளர்த்துக் கொள்கிற நுணுக்கமான கோழை என்று அவரைப் பற்றித் தீர்மானம் செய்திருந்தான்






விலங்கு


குமரப்பனை கண்ணாயிரம் அன்றும் அவனை விசாரித்துக்கொண்டே வந்து சேர்ந்தார்.


“என்ன குமரப்பன்? எப்படி இருக்கிறீர்கள்?” என்று அவர் விசாரித்தவுடன், “மற்றவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிற உரிமையே உங்களைப் போன்றவர்களிடம் விடப்பட்டிருக்கும்போது நீங்களெல்லாம் இப்படி விசாரிக்கலாமா சார்?” என்று சிறிதும் இடைவெளியின்றி அவருக்கு மறுமொழி கூறினான் குமரப்பன். இந்த வார்த்தைகளில் இருந்த ஆழமான அர்த்தத்தினும் கௌரவமாகத் தாக்கப்பட்டுவிட்ட கண்ணாயிரம் மேலே பேசும் சக்தியை இழந்து விட்டார். மோகினியின் வீட்டில் போய்ப் பேட்டி காண்பதற்காக உடன்வர இருந்த உதவியாசிரியர் கண்ணாயிரத்துக்கு மிகவும் வேண்டியவர். காரில் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தபோது கண்ணாயிரத்தை வாய் ஓயாமல் தூக்கிவைத்துப் புகழ்ந்து கொண்டே வந்தார் அந்த உதவி ஆசிரியர். ‘எல்லாரையும் புகழ்கிறவன் யாரோ அவன் எல்லாராலும் புகழப்படுவான்’ என்று ஒரு சித்தாந்தம் உண்டு. அந்தச் சித்தாந்தப்படி புகழை ஏற்படுத்திக்கொண்ட உதவி ஆசிரியர் அவர். அந்தக் காரில் அவர்களோடு காமிராவும் கையுமாகப் போய்க் கொண்டிருந்த குமரப்பன் பொறுமை இழந்திருந்தான். குமரப்பன் ஒன்றும் பேசாமலே குறும்புத்தனமான மௌனத்தோடு உடன் வருவதைக் கவனித்த உதவி ஆசிரியர் அவனிடமும் ஏதாவது பேச்சுக் கொடுத்தாக வேண்டும் என்பதற்காக அவன் கையிலிருந்த புகைப்படக் கருவியைச் சுட்டிக் காட்டி, ‘இது மிகவும் உயர்ந்த ரகத்துக் ‘காமிரா’ — குமரப்பன்! ‘அட்ஜஸ்மெண்ட்’ சரியாக இருந்தால் பிரமாதமாயிருக்கும்” என்றார். குமரப்பன் அவரைச் சும்மா விடவில்லை.

“ஆமாம் சார்! நன்றாகச் சொன்னீர்கள். ‘அட்ஜஸ்மெண்ட்’ சரியாயிருந்தால் எதுவுமே பிரமாதமாகத்தான் இருக்கும்” என்று அந்த ஆள் வாய் ஓயாமல் கண்ணாயிரத்தைப் புகழ்வதையும் சேர்த்துத் துணிவாகவும் குத்தலாகவும் சொல்லிக் காண்பித்தான் குமரப்பன். அதற்கப்புறம் மோகினியின் வீடு வந்து சேருகிற வரை அந்த உதவி ஆசிரியர் வாயைத் திறக்கவே யில்லை. மோகினியின் தாய் முத்தழகம்மாள் வீட்டு வாசலிலேயே அவர்களை எதிர்கொண்டு வந்து உள்ளே அழைத்துச் சென்றாள். கண்ணாயிரம் முத்தழகம்மாளிடம் ‘குத்துவிளக்கின்’ உதவி ஆசிரியரை முதலில் அறிமுகம் செய்துவைத்துவிட்டுக் குமரப்பனின் பக்கமாகத் திரும்பி, “இவர் அந்தப் பத்திரிகையில் கேலிச் சித்திரங்கள் வரைகிறவர். நிரம்பவும் வேடிக்கையாகப் பேசுவார். நல்ல கலை ரசிகர்” என்று அவனைப் பற்றியும் கூறினார். உடனே குமரப்பன் நடுவில் குறுக்கிட்டு, “தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள் சார்! நீங்களெல்லாம் கலை ரசிகர்களாக இருக்கிற உலகத்தில் என்னைப் போன்றவர்களும் கலைரசிகர்களாக இருப்பது முடியாத காரியம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏதோ மனிதர்களை மட்டும் ரசித்துக் கொண்டிருக்கிற பாமரன் சார்” என்று அதிக விநயமாக ஆரம்பித்து அவரை மடக்கிப் பேசினான். ஒவ்வொரு முறையும் வாயைத் திறந்து பேசும்போது பேச்சில் அவனிடம் வகையாகப் பிடிபட்டுக்கொண்டு விழித்தார் கண்ணாயிரம். அவருக்கு அவன் ஒரு பிரச்னையாயிருந்தான். நளின கலைகளின் இருப்பிடமான அந்தத் தெருவிலும் அந்த வீட்டிற்குள்ளும் நுழையும்போது குமரப்பன் தன் மனத்தில் ஏதேதோ சிந்தித்தான். மனித நினைவுகளைத் தெய்விகத்தோடு கொண்டு போய் இணைப்பதற்காகத் தோன்றிய உயர்ந்த கலைகள் எல்லாம் பத்திரிகைப் புகழுக்கும் பணத்துக்கும் ஆட்படுகிறவைகளாகப் போய்விட்டதை எண்ணி வேதனைப்பட்டான். தன்னுடைய புத்தியின் குறும்புத்தனத்தையும் சிந்தனையின் துறுதுறுப்பையும் அடக்கிக்கொண்டு கலைமகளே குடியிருப்பது போன்ற அந்தச் சிறிய வீட்டை ஒவ்வொரு பகுதியாகக் கூர்ந்து நோக்கினான் குமரப்பன்.

‘இந்த வீட்டில் இந்த அழகிய கூடத்தில் பாதசரங்களும், கொலுசுகளும் ஒலிக்க எத்தனை எத்தனை அழகிய பாதங்கள் தலைமுறை தலைமுறைகளாக நடந்திருக்கும்? எத்தனை எத்தனை இனிய குரல்களும் வாத்தியங்களும் ஒலித்திருக்கும்? இந்த நான்கு சுவர்களும் தோன்றிய பிறகு இவற்றுக்கிடையே எத்தனை பேருடைய ஆசைகளும், தாபங்களும், அநுதாபங்களும் தோன்றி அடங்கி யிருக்கும்? எவ்வளவு சிரிப்பொலிகள் கலகலத்திருக்கும்? எவ்வளவு அழுகுரல்கள் விம்மி ஒலித்து, வெடித்துத் தணிந்திருக்கும்?’ என்றெல்லாம் எண்ணியபோது அவனுடைய இதயம் ஓயாமல் தவித்தது. ஏதோ ஓர் அதிகாரத்தை மீற முடியாமல் கட்டுப்பட்டு உட்கார்ந்திருப்பவளைப் போல் மோகினி அங்கு அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்திருந்தாள். பதி







திரிகைக்காரர்கள் பேட்டி காண வந்திருக்கிறார்கள் என்பதற்காக அவளிடம் எந்த விதமான உற்சாகமும், கிளர்ச்சியுமில்லை. சமூகத்தின் அநுபவத்துக்குப் பொதுவாயிருக்கிற கலைகள் எவையானாலும் அவற்றை நம்பி வாழ்கிறவர்கள் ஊர் நடுவில் இருக்கிற மருந்து மரத்தைப் போன்றவர்கள். பயன்படுவது அதிகமாகவும், பயன் பெறுவது குறைவாகவும் வாழ வேண்டிய நியதிதான் அவர்களுக்குப் பெரும்பாலும் நியமிக்கப்பட்டிருக்கிறதென்று குமரப்பனுக்குத் தோன்றியது. ஏதோ ஒரு பத்துக்கு அபிநயம் பிடிக்கச் சொல்லி இரண்டு மூன்று புகைப்படங்களைப் பிடித்துக் கொண்ட பின் குமரப்பனைப் பொறுத்தவரையில் அங்கு வந்த காரியம் முடிந்துவிட்டது. குழந்தைக் குறுகுறுப்பும் தெய்விகமானதோர் அமைதித் தன்மையும் நிறைந்த மோகினியின் முகத்தைப் பார்த்தபோது சித்திரா பௌர்ணமியன்று இரவு வையையாற்று மணலில் சத்தியமூர்த்தியும் தானுமாக அவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் குமரப்பனுக்கு நினைவு வந்தன. மனிதனுடைய ஆசைகளும் சபலங்களும் நெருங்கிய அந்த வீட்டில் சகல கலைகளுக்கும் அதிதேவதையாகிய கலைமகளே வந்து அடைபட்டுக் கிடப்பது போல் அவள் அடைபட்டுக் கிடப்பது அவனுக்குப் புரிந்தது. மோகினியைப் பேட்டி காண்பதற்காகத்தான் அவர்களை அழைத்து வந்திருந்தார் கண்ணாயிரம். ஆனால் எல்லாவிதமான பேச்சு வார்த்தைகளுக்கும் கண்ணாயிரமும், முத்தழகம்மாளுமே பதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பேசாமல் வீற்றிருக்கும் அழகிய சித்திரத்தைப் போல் குனிந்த தலை நிமிராமல் வீற்றிருந்தாள் மோகினி. பேட்டி காண வந்திருந்த உதவி ஆசிரியர் கண்ணாயிரத்துக்குக் கட்டுப்பட்டுக் கேள்விகளை எழுதிக்கொண்டு வந்திருந்தார் போலிருக்கிறது. மௌனமாகவே இருந்த மோகினி சில கேள்விகளுக்கு அம்மாவும், கண்ணாயிரமும் கூறிய மறுமொழிகளை எதிர்த்துச் சீறினாள்.

''நாட்டியக் கலையில் நீங்கள் செய்து முடிக்க விரும்புகிற உயர்ந்த சாதனை எதுவோ?'' — என்று ஒரு கேள்வி இருந்தது. அந்தக் கேள்விக்கு முத்தழகம்மாளும் கண்ணாயிரமும் சேர்ந்து பதில் சொல்லும்போது, 'திரைப்படங்களில் நடிக்க வேண்டும் — உலகமெல்லாம் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும்' என்று ஏதேதோ 'ஆசைகளை வெளியிட்டார்கள். தானே நடுவில் குறுக்கிட்டுப் பேசி மோகினி அதை மறுத்தாள்.

''உங்கள் கேள்விக்குப் பதில் இப்படி எழுதிக் கொள்ளுங்கள். என்னுடைய கலையில் பரிபூரணமான திறமை எதுவோ அதை நான் அடைவதுதான் என்னுடைய உயர்ந்த சாதனையாக இருக்க முடியும். ஊர் சுற்றுவதையும், சினிமாப் படங்களில் நட்சத்திரமாக மின்னுவதையும் சாமர்த்தியங்களாக நினைக்கலாம். ஆனால் சாதனையாக ஒப்புக்கொள்ள முடியாது'' — என்று மோகினி கூறியபோது கண்ணாயிரம் மறுத்து விவகாரம் பேசினார்.

''அப்படியெல்லாம் புரியாத பதில்களைச் சொல்லாதே மோகினி! இந்தப் பேட்டியில் வெளிவருகிற ஒவ்வொரு வாக்கியமும் நமக்கு நல்ல விளம்பரமாக இருக்க வேண்டும். தயவு செய்து கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிற பொறுப்பை என்னிடமும் அம்மாவிடமும் விட்டு விட்டு நீ பேசாமல் உட்கார்ந்திரு. இதெல்லாம் நம்மைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்கு நாமே

> **பொன் விளக்கு**
>
> சமூகத்தின் அநுபவத்துக்குப் பொதுவான கலைகள் எவையானாலும் அவற்றை நம்பி வாழ்கிறவர்கள் ஊர் நடுவிலிருக்கிற மருந்து மரத்தைப் போன்று பயன்படுவது அதிகமாகவும், பயன்பெறுவது குறைவாகவும் வாழ்கிறார்கள்.

செய்துகொள்கிற ஓர் ஏற்பாடு. இப்படியெல்லாம் செய்துகொண்டால் ஒழிய இந்தக் காலத்தில் முன்னுக்கு வரவும் முடியாது. நீயோ குழந்தைப் பெண். உனக்கு இதெல்லாம் புரியவும் புரியாது! என்ன முத்தழகம்மாள்? நான் சொல்கிறது சரிதானே?'' என்று அந்த அம்மாவையும் பேச்சில் இழுத்துத் தம்மோடு ஒத்துப் பாடச் சொன்னார் கண்ணாயிரம். ஆனால் மோகினி நிச்சயமாகவும், பிடிவாதமாகவும் தான் கூறிய வார்த்தைகளையே சாதித்தாள்.

''நாட்டியக் கலையில் நீங்கள் முன்னுக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் யார் என்பதைச் சொல்ல முடியுமா?'' என்ற கேள்வியைப் பேட்டி காண வந்திருந்த உதவியாசிரியர் கேட்டபோது ஒரு கணமும் தயங்காமல் தன் தாயின் பெயரையும் தனக்கு நாட்டியம் கற்பித்த ஆசிரியரின் பெயரையும் கூறினாள் மோகினி. ஆனால் முத்தழகம்மாளோ அதை உடனே மறுத்து, ''விளம்பர நிபுணர்

கண்ணாயிரம் அவர்களும், கலைவளர்த்த மருங்கன்பட்டி ஜமீன்தாரும் பலவகைகளில் ஒத்துழைத்து மோகினியை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள் என்று எழுதிக் கொள்ளுங்க'' என்றாள்.

''இந்தப் பொய் அடுக்கவே அடுக்காது. யார் பேரை வேண்டுமானாலும் எழுதிக்கொள்ளுங்கள். எப்படி வேண்டுமானாலும் எழுதிக்கொள்ளுங்கள். ஆனால் எனக்குக் கற்பித்த 'வாத்தியார்' பேரை எழுதாவிட்டால் சும்மா விடமாட்டேன்!'' என்று மோகினி சீறி விழுந்த பின்பே அவர்கள் வழிக்கு வந்தார்கள். அதுவரை ஒரு நியாயத்துக்குக் கட்டுப்பட்டு ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்த குமரப்பன் தானும் அங்கு இருப்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறாற்போல், ஒரு கனைப்புக் கனைத்துவிட்டுக் கண்ணாயிரத்திடம் கேட்கலானான்:

''எனக்கு ஒரு சிறிய சந்தேகம் சார்! இந்தப் பேட்டியைக் குத்துவிளக்கில் வெளியிடும்போது 'நாட்டிய நட்சத்திரம் மோகினியைப் பேட்டி கண்டு நமது நிருபர் அளிக்கும் பதில்கள்' என்று வெளியிடுவீர்களா அல்லது மோகினிக்காக அவளுடைய தாயையும் கண்ணாயிரம் அவர்களையும் பேட்டி கண்டு நமது நிருபர் அளிக்கும் பதில் என்று வெளியிடப் போகிறீர்களா? நான் இரண்டாவதாகச் சொன்ன மாதிரித்தான் வெளியிடப் போகிறீர்கள் என்று தெரிந்தால் இதுவரை இங்கு பிடித்த புகைப்படங்களெல்லாம் வீணாகிவிடும். புதிதாக உங்களையும் இந்த அம்மாளையும் படம் பிடித்து வெளியிட்டுவிடலாம் என்பதற்காகத்தான் கேட்கிறேன்'' என்று விநயமாக விசாரிப்பது போல் குறும்புத்தனமாக விசாரித்திருந்தான் குமரப்பன். இந்தக் கேள்விக்குப் பின்பு கண்ணாயிரம் விழித்துக் கொண்டார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. ஏதோ அவளுக்குப் பதில் சொல்ல முடியாத கேள்விகளை நாங்கள் சொல்லி விளக்கியிருப்போம். எங்களுக்குள் நாங்கள் வித்தியாசமாகப் பழகவில்லை குமரப்பன்! மோகினி பதில் கூறினாலும் ஒன்றுதான். நாங்கள் பதில் கூறினாலும் ஒன்றுதான். நீங்களாகத்தான் அநாவசியமான வேறுபாட்டை உண்டாக்கிப் பேசுகிறீர்கள். எங்களுக்குள் ஒரு வேறுபாடும் கிடையாது.''

''இருக்கலாம். ஆனால் மோகினியின் நாட்டியத்தை மோகினியிடமிருந்துதான் மக்கள் எதிர்பார்ப்பார்கள். மோகினிக்குப் பதிலாக அதையும் இன்னொருவர் ஆடிவிட முடியாது.''

குமரப்பனின் இந்த வாக்கியத்தைத் வெறும் நகைச்சுவையாக ஏற்றுக் கொண்டு சிரிக்கிறவரைப் போல் சிரித்துவிட்டு அந்தச் சிரிப்பின் மூலம் தமக்குக் கிடைத்த தீவிரமான தாக்குதலை மறைத்துக்கொள்ள முயன்றார் கண்ணாயிரம். மானமும் சுயமரியாதையும் உள்ளவர்கள்தான் விருப்பு, வெறுப்புக்களைத் தயங்காமல் எதிர்பார்த்துத் தைரியமாக ஏற்றுக்கொள்வார்கள். கண்ணாயிரத்தைப் போன்றவர்களோ எல்லாவற்றையும் துடைத்துவிட்டு வாழ்கிறவர்கள். எவ்வளவு கூர்மையான வார்த்தைகளால் தாக்கினாலும் தங்களுக்கு ஒன்றுமில்லை என்பது போல் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுகிற தன்மை உடையவர்களை என்ன செய்ய முடியும்? எந்த வார்த்தைகளால் தாக்க முடியும்?


''ஏதேது? போட்டோக்காரர் ரொம்பப் பொல்லாதவராக இருப்பார் போலிருக்கே?'' என்று அப்பொழுதுதான் அவனைக் கூர்ந்து கவனித்தவளாக முத்தழகம்மாள் ஏதோ சொல்லிவைத்தாள். குமரப்பனின் கைவசம் 'காமிரா' இருந்ததனாலும், அவன் படங்கள் பிடித்ததனாலும் தானாகவே அவருக்கு 'போட்டோக்காரர்' என்று ஒரு பெயரையும் முத்தழகம்மாளே உண்டாக்கியிருந்தாள். 'ரொம்பப் பொல்லாதவராயிருப்பார் போலிருக்கே' என்று அந்த அம்மாள் தன்னைப் பற்றிக் கூறியதைக் கேட்டுக் குமரப்பன் சும்மா இருந்துவிடவில்லை. மனத்தில் உறைக்கும்படி நன்றாகப் பதில் கூறினான். ''நல்லவனாக இருப்பவனே தன்னை நல்லவன் என்று நிரூபித்துக் கொள்வது இந்தக் காலத்தில் ஒருவிதமான இலாபத்தையும் தராது அம்மா! எல்லா விதத்திலும் பொல்லாதவனாக வாழ்கிறவன் தன்னை நல்லவனாக நிரூபித்துக் கொண்டு காலம் தள்ளுவதுதான் இந்தக் காலத்தில் மிகவும் இலாபகரமாக நடைபெறுகிற வியாபாரம். ஏதோ உண்மையைச் சொல்லலாமென்று வாயைத் திறந்தால் உடனே எனக்குப் பொல்லாதவனென்று பட்டம் கட்டுகிறீர்களே?''

''ஐயா! நீர் கொஞ்சம் சும்மா இருந்தால் நல்லது. உம்மோடு பேசறத்துக்கே பயமாயிருக்கு'' என்று கேலியாகச் சிரித்துக்கொண்டே சொன்னாள் முத்தழகம்மாள்.

''அப்படி நினைக்காதீர்கள் முத்தழகம்மா! நம் குமரப்பனுடைய சுபாவமே இப்படித்தான். இவரிடம் எதிலும் ஒளிவு மறைவான பேச்சு இருக்காது. வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவார். இவர் மட்டுமில்லை,







சருமப்
பராமரிப்புக்குத்
தகுந்த
ஏற்பாடு
அவசியம் . . .
அதற்குகந்தவை


'ஹேஸலின்'
அழகு
சாதனங்கள்

ஸ்னோ * கோல்ட் க்ரீம் * டால்க்

உங்கள் சருமத்துக்குத் தனிப்பட்ட அழகுப் பராமரிப்பு தரும் மூன்று வகை நறுமண அழகுப் பொருள்கள்.

* "'ஹேஸலின்' ஸ்னோ"—மேனி பொலிவுக்கு மெருகூட்டி, சருமத்தைப் பாதுகாக்கிறது.
* 'ஹேஸலின்' கோல்ட் க்ரீம் ஊடுருவிச் சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்போடும், கட்டுத் தளரா இளமையுடனும் இருக்கச் செய்கிறது.
* 'ஹேஸலின்' டால்க் நறுமணமுள்ள மென்மையான பவுடர் – பூசிக்கொண்டால்...ஆஹா! என்ன குளுமை! என்ன புதுமை! என்ன புது மணம்!





பர்ரோஸ் வெல்கம் தயாரிப்புக்கள்

SWY-10-TAM.

இவருடைய நண்பர்கள், இவரோடு பழகுகிறவர்கள் எல்லாருமே இப்படித்தான். சத்தியமூர்த்தியைத்தான் உங்களுக்குத் தெரியுமே? இரயிலில் உங்களுக்குப் பழக்கமாகி அப்புறம் உங்கள் பெண் பேனாவைக் கொடுப்பதற்காக அவனைத் தேடிக்கொண்டு போகணுமென்றீர்களே; அந்தப் பையன் கூடக் குமரப்பனுக்கு நெருங்கிய நண்பன்தான். அவனும் ஏறக்குறைய இவரைப் போலத்தான் பேசுவான்'' என்று கண்ணாயிரம் கூறிய செய்தியைக் கேட்டு மோகினியின் முகம் மலர்ந்தது. குமரப்பன் அங்கே வந்ததிலிருந்து அவனை இதற்கு முன்பு எங்கோ பார்த்தமாதிரி நினைவிருக்கிறதே என்று எண்ணி எங்கே எப்போது பார்த்திருக்கிறோம் என்று புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தவளுக்கு இப்போது குழப்பம் நீங்கித் தெளிவு பிறந்து விட்டது. சித்திரைப் பொருட்காட்சியில் தன்னுடைய நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்ற தினத்தன்று சத்தியமூர்த்திக்குப் பக்கத்தில் இந்த மனிதன் அமர்ந்திருந்ததை நினைவுகூர்ந்தாள் அவள்.

மனத்தினால் வெறுத்துக் கொண்டே வாய் வார்த்தையால் புகழ்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று குமரப்பனுக்குத் தெரியும். கண்ணாயிரம் இருந்தாற் போலிருந்து தன்னையும் சத்தியமூர்த்தியையும் பற்றி முத்தழகம்மாளிடம் கூறிப் புகழ ஆரம்பித்த போது குமரப்பனுடைய மனம் சிந்திக்கத் தொடங்கியது. வெளிப்படையாகப் புகழ்ந்து விட்டு அந்தப் புகழ்ச்சியினால் எதிரி நலிந்து கவனக் குறைவாக இருக்கும்படி செய்தபின் அவனுக்கு நேர்மாறான காரியங்களை இரகசியமாகச் செய்கிற வஞ்சகத் திறமை கண்ணாயிரத்துக்கும் உண்டு என்று குமரப்பன் அறிவான். 'இவன் நமக்கு மிகவும் வேண்டிய நண்பன்' என்று தன்னைப் பற்றி நம்மைப் புரிந்து கொள்ளும்படி செய்து விட்டுப் பின்னால் போய்ப் பகைவனாக வேலை செய்கிறவன் தான் சமூக வாழ்க்கையில் தனி மனிதனைப் பாழாக்கி விடுகிற பயங்கர எதிரி. இப்படி எதிரிகள் யார் யாரென்று கண்டுபிடித்து அவர்களைத் தன் வழிகளிலிருந்து விலக்கிவிட முடியுமானால் அதற்கப்புறம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பிரச்னைகளை எதிர்த்துப் போர் புரிய வேண்டிய அவசியம் மட்டும்தான் இருக்கும்; மனிதர்களை எதிர்த்துப் போர் புரிய வேண்டியிருக்காது. கண்ணாயிரம் அப்படி விலக்கிவிட வேண்டிய எதிரிதான் என்பதை நீண்ட நாட்களுக்குமுன் 'குத்து விளக்கு' காரியாலயத்தில் முதன் முதலாக அவரைச் சந்தித்த சில தினங்களிலேயே குமரப்பன் தீர்மானம் செய்திருந்தான். அதனால் கண்ணாயிரம் முத்தழகம்மாளிடம் தன்னைப் பற்றித் தூக்கி வைத்துப் பேச ஆரம்பித்ததைக் குமரப்பன் சும்மா சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்தானே தவிர மனமார ஏற்றுக் கொள்ளவில்லை. நவீன யுகத்தில் நாகரிகமான இந்த நூற்றாண்டு மனிதர்களை அடித்து வீழ்த்துவதற்கும் சோம்பேறிகளாக்குவதற்கும் புகழைப் போல் நவீனமான பயங்கர ஆயுதம் வேறு இல்லை என்பது குமரப்பனுடைய நம்பிக்கை. அந்தத் திடமான நம்பிக்கையோடுதான் கண்ணாயிரத்தின் வஞ்சகப் புகழ்ச்சிக்குச் செவி சாய்க்காமல் வீற்றிருந்தான் அவன். உதவியாசிரியர் மோகினியிடம் கேட்க வேண்டிய கடைசிக் கேள்வியைக் கேட்டார் :—

''நீங்கள் ஆண்டாள் பாசுரங்களுக்கு அபிநயம் பிடிக்கும் போது தன்னை மறந்த தெய்விக மலர்ச்சியோடு ஆடுகிறீர்கள் என்பதை எல்லாரும் அறிந்து ஒப்புக் கொண்டு மனமாரப் பாராட்டுகிறார்கள். சிறப்பு வாய்ந்த அந்த ஆண்டாள் நடனத்தைப் பல முறை நீங்கள் ஆடியிருந்தாலும் என்றாவது ஒரு நாள் தான் உங்கள் மனமே பரிபூரணமான திருப்தியோடு இலயித்து ஆடியிருக்க முடியும். அப்படி இலயித்து ஆடிய தினத்தைப் பற்றிய எண்ணங்களை நீங்கள் 'குத்து விளக்கு' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?''

இந்தக் கேள்விக்கு முத்தழகம்மாளும் கண்ணாயிரமும் பதில் தயாராக வைத்திருந்தார்கள். ''போன வருடம் நவராத்திரியின்போது மஞ்சள்பட்டி சமஸ்தானத்தில் ஜமீன்தார் முன்னிலையில்



வந்தவன்: (பச்சை குத்துபவனிடம்) ''இந்தாப்பா! என் புருஷன் பேரை நம்ம கையிலே குத்து.''
''பேரைச் சொல்லு ஆத்தே!...''
''...ஆ... நீ குத்தறியே அதுதான் அவர் பேரு!''

ஆண்டாள் நடனத்தை ஆடினதுபோல் மோகினி என்றுமே ஆடியதில்லை. ஜமீன்தாருடைய தாராள மனப்பான்மையும், இரசிகத் தன்மையும்தான் அவ்வளவு சிறப்பாக மோகினி ஆடியதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும்'' என்று முத்தழகம்மாளும் கண்ணாயிரமும் முன்பே திட்டமிட்டுப் பேசி வைத்துக் கொண்டாற்போலப் பதில் கூறினார்கள். மோகினியைப் பற்றிய பேட்டியில் மஞ்சன்பட்டி ஜமீன்தாருடைய பெயர் எப்படியும் வந்துவிட வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்வது குமரப்பனுக்குப் புரிந்தது. உதவியாசிரியருக்கும் அது புரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படிப் புரிந்து கொள்ளாதது போல் இருந்தார். ஜமீன்தாருக்கு நல்ல பிள்ளையாக வேண்டுமென்பதற்காக அவருடைய தாராள மனப்பான்மையால்தான் மோகினியின் நடனமே சிறப்பாக அமைந்தது என்று பல்லாயிரம் பிரதிகள் செலவாகும் ஒரு பத்திரிகையில் அச்சிட்டுத் திருப்திப்பட எண்ணும் சிறுமையை நினைத்துக் குமரப்பன் மனம் குமுறினான். அவனைப் போலவே மோகினியும் மனம் குமுறியிருக்கிறாள் என்பது அப்போது அவள் கூறத் தொடங்கிய வார்த்தைகளிலிருந்து தெரிய வந்தது. அவள் உதவியாசிரியரைக் கேட்ட கேள்வியில் சிறிது ஆத்திரமும் ஒலித்தது:

''நீங்கள் சற்று முன்னால் கேட்ட கேள்விக்கு மனப் பூர்வமாக நானே மறுமொழி கூற வேண்டும் என்று நினைக்கிறீர்களா? அல்லது மற்றவர்கள் சொல்லிய பதிலே போதுமென்று நினைக்கிறீர்களா?''

''என்னடீது? இப்படிக் கேட்கிறே? நீ என்னை மீறிக்கிட்டுச் சொந்தமாச் சொல்றதுக்கு வேறே பதில் வச்சிருக்கியா ?'' என்று மோகினியின் அம்மா அவள் வாயையே மேலே பேசவிடாமல் அடக்கி விடுகிற அதிகாரக் குரலில் மிரட்டினாள். மோகினி அந்த மிரட்டலுக்குப் பயந்து சிறிதும் அடங்கவில்லை.

''நீ சும்மா இரும்மா! நீயும், கண்ணாயிரம் மாமாவுமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கி விடாதீர்கள். இந்த உலகமே மஞ்சன்பட்டி ஜமீன்தாரால்தான் நடக்கிறதென்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளுங்கள். எனக்குக் கவலையில்லை. என்னைப் பற்றி ஏதோ கேள்வி கேட்டால் அதற்கும் மஞ்சன்பட்டி ஜமீன்தாரால்தான் நான் நாட்டியமே ஆட முடிகிறதென்று சொல்வதை மட்டும் ஒப்புக்கொள்ளவே முடியாது. நிஜத்தைச் சொல்ல வேண்டுமானால் போன மாதம் சித்திரா பௌர்ணமியன்று தமுக்கம் பொருட்காட்சியில் ஆடினேனே; அன்றுதான் நான் என்னை மறந்த இலயிப்போடு ஆண்டாளாகவே மாறி ஆடினேன்... அதைப் போல் வேறெந்த தினத்திலும் பெருமிதமாக நான் ஆடியதில்லை'' என்று மோகினி கூறியதும் குமரப்பன் மனத்துக்குள் அவள் தைரியத்தைப் பாராட்டினான். மஞ்சன்பட்டி ஜமீன்தாரிடம் பணம் கறப்பதற்காக அவர்கள் இப்படிப் பொய் சொல்வதை எதிர்த்து மோகினி துணிவாகக் குறுக்கிட்டுப் பதில் கூறியது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''மோகி! நான் சொல்றதிலே ஓர் அர்த்தம் இருக்கு. நீ என்னைக்கு நன்றாக ஆடியிருந்தாலும் கவலையில்லை. பத்திரிகையிலே கொடுக்கிற பதிலில் மட்டும் மஞ்சன்பட்டி அரண்மனை நவராத்திரியில் ஆடினபோதுதான் பிரமாதமாக ஆடினேன் என்று கொடுத்து வைப்போமே! அதில் நமக்கென்ன வந்தது. ஜமீன்தார் புகழ்ப் பிரியர். அவருடைய மனம் இதனால் திருப்திப்படும்'' என்று கண்ணாயிரம் பிடிவாதமாக விட்டுக் கொடுக்காமல் மோகினியைக் கெஞ்சினார்.

''யாரோ திருப்திப்படறத்துக்காக நான் நாட்டியமாடலே.''


''எதிர்த்துப் பேசாதேடீ! நாங்கள் உன் நன்மைக்காகத்தான் சொல்றோம்னு நெனை....''

அடக்க முடியாத கோபத்தோடு அம்மா சீறினாள். மோகினியின் மை தீட்டிய கண்களில் நீர் முத்துக்கள் திரண்டன. மேலும் அங்கே உட்கார்ந்திருக்க விரும்பாமல் அழுது கொண்டே எழுந்து மாடிக்குப் போனாள் அவள். பேட்டி முடிந்து விட்டதாகப் பேர் பண்ணி விட்டுக் கண்ணாயிரம் உதவியாசிரியரையும் குமரப்பனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். காரில் திரும்பிக் கொண்டிருந்த போது, ''பேட்டி மிகவும் நல்லபடியாக ஆயிற்று. உங்களுக்குத்தான் மிகவும் நன்றி சொல்லணும்'' என்று உதவியாசிரியர் கண்ணாயிரத்தின் தலையில் தாராளமாக ஐஸ் தூவினார்.

''ஆமாம்! ஆமாம்! இதில் சாருக்குத்தான் முக்கியமாக நன்றி சொல்லணும். ஏறக்குறைய இந்தப் பேட்டியில் மோகினிக்குச் சிரமமே வைக்காமல் எல்லாப் பதில்களையும் சாரே தயாராகச் சொல்லி விட்டார் அல்லவா ?'' என்று வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போல் சொல்லித் தன் வயிற்றெரிச்சலை நாசூக்காகத் தீர்த்துக் கொண்டான் குமரப்பன். (தொடரும்)

இதோ வந்து விட்டது...

புதிய ராலீஸ் 16
வலைக்கண்
பாதுகாப்புள்ள
மேஜை விசிறி





பளிச்சிடும் புதிய அம்சங்கள்:

- புதிய 'கெபாஸிடர்' மோட்டார்
  உங்கள் அறைக்கு அதிகக் குளுமையூட்டி, உங்கள் மின்சாரச் செலவில் கால் பங்கை மிச்சப்படுத்துகிறது.
- புதிய 'பியோனோ மாதிரி' ஸ்பீட் கண்ட்ரோல்கள்
  சுலபமான, தரமான முறையில் வேக மாறுதலை உறுதி செய்கிறது.
- புதிய அபிவிருத்தியடைந்த அமைப்பு
  ஆபத்தில்லாத புதிய வலைக்கண் பாதுகாப்பு மற்றும் பளபளப்பான, வழுவழுப்பான வளைந்த உருவமைப்பு.
- கண்கவர் வர்ண வகைகள்

தவிர 2 வருடங்களுக்கு உத்தரவாதமுண்டு.

மேலும் கிடைக்கும் மாதிரிகள்: ராலீஸ் 18" வலைக்கண் மேஜை விசிறி, ராலீஸ் 16" பெடஸ்டல் விசிறி, மற்றும் எக்ஸாஸ்ட் விசிறி.

தயாரிப்பில் ராலீஸ் காட்டும் சிரத்தை உங்களுக்கு மேலும் சிறந்த விசிறியை அளிக்கிறது.

சென்னை, கேரளா மற்றும் தென் மைசூருக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்

மெஸர்ஸ் மகமத் இப்ராஹிம் & கோ., பிரைவேட் லிமிடெட்

7/8, மவுண்ட் ரோடு, சென்னை - 2 — 113-H, பிரிகேட் ரோடு, பெங்களூர்


மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ்.பி.. க்ரீம் ஆப் மக்னீஷியா B.P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஒளஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அநுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்தபோதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மக்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒளஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மக்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் (பிரை) லிமிடெட். ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மெர்க்கண்டைல் பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1
பம்பாய் - புது டில்லி - சென்னை



ஸ்ரீஹரி வைத்தியம்

10. தலைசுற்றல் மயக்கம் (ரத்தக் குறைவினால்)

ஹார்வி என்பவர் தானேய்யா 19-ம் நூற்றாண்டில் ரத்தம் உடலில் சுற்றுவதாகத் தெரிந்து சொன்னார். அதற்கு முன்பே ரத்தத்தைப் பற்றி ஏதோ நமது சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதாகச் சொல்லித் தீர்க்கனே! இது என்னவென்று கேட்கிறீர்களா?

இந்தச் சர்ச்சைக்கு இன்று இடமில்லை. மேனாட்டு வைத்தியர்கள் ஹார்வி மூலமாக ரத்தம், அதன் சுற்றல் இவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டது 19-ம் நூற்றாண்டில் என்பது உண்மையாக இருக்கலாம்.

நமது சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது சாஸ்திரம் பிறந்த நாளிலிருந்து உள்ளது. இந்தச் சிவப்பு ஜீவாணுக்களைப் பற்றி வட்டமான வடிவம் பெற்றவை, அருணதாம்ர வர்ணமுள்ளவை, கால்கள் இல்லாதவை, மிகவும் சிறியவையானதால் புறக் கண்களுக்குப் புலப்படாதவை என்று விளக்கியுள்ளனர். அவ்விதமே வெண்ணிற ஜீவாணுக்களைப் பற்றியும், அவை புரியும் 'தோட்டி' வேலைகளைப் பற்றியும் சாஸ்திரங்களில் காண்கிறோம்.

இந்தச் சிவப்பு ஜீவாணுக்கள் ரத்தத்தில் குறைவதால் அவை சுமந்து செல்லுதலும் (''அமிருதம்'' என்னும்) ஜீவனுக்கு முக்கியமான ஆகாரமென்று தெரிவிக்கப்பட்டுள்ள பிராணவாயு போதுமான அளவு கிடைக்கவில்லை என்ற காரணம் சரீரத்தில் ஏற்படும். அப்போது எந்த ஆசயமும் இயங்காது. அதுவும் கபாலப் புரியான மூளைக்குப் போதுமான அளவு ரத்தமும் அல்லது ரத்தத்தின் மூலம் போதுமான அளவு பிராணவாயுவும் இதர ஊட்டப் பதார்த்தங்களும் கிடைக்காவிடில் தலைசுற்றல் மட்டுமா வரும்? மயக்கம் போட்டும் விழுந்து விடலாமல்லவா? நிரந்தரமான தலைசுற்றலும் ஏற்படலாமல்லவா?

அப்படியானால் உடலில் ரத்தம் குறைவானேன்?

ரத்தக் குறைவு ஏற்படுவதற்கு எத்தனையோ காரணங்கள். மூல வியாதியினால் ரத்தப் போக்கு. அதனால் ஏற்பட்ட ரத்தக் குறைவு. இரஹணி, கோலைடிஸ் போன்ற வியாதிகளால் ஆகாரத்தின் சத்துப் பொருள் கிரகிக்கப்படுவதில்லை என்ற காரணத்தால் ரத்தக் குறைவு. டைபாய்டு போன்ற சில ரோகங்களில் ஆன்டிபயாடிக் என்னும் மருந்துகளைக் கொடுப்பதால் சில சமயம் இவ்வகை ரத்தக் குறைவு ஏற்படுவதுண்டு. எக்ஸ்ரே என்னும் படப்பிடிப்பு அல்லது அவ்வித ஒளிச் சிகிச்சை காரணமாகவும் ரத்தக் குறைவு ஏற்படலாம். நெடு நாட்கள் க்ஷீண முற்றுக்கிடந்தவர், தாய்மைச் செல்வம் பெறல் என்பது போன்ற பல் வேறு காரணங்களால் ரத்தக் குறைவு — ரத்தத்தில் சிவப்பு ஜீவ அணுக்கள் குறைதல் அல்லது வெண்ணிற ஜீவாணுக்கள் அதிகரித்திருத்தல் என்னும் நிலை ஏற்படுவதுண்டு. அதைத் தொடர்ந்து தலை சுற்றல் மயக்கம், நெஞ்சில் படபடப்பு, கண் இருட்டல் – நாவு உலர்ந்து போதல், உடல் முழுதும் திடீரென்று குபீரென்று வியர்த்தல், இரவில் தூக்கமின்மை, ஆகாரம் ஜெரிக்காமை, ஓய்ச்சல், அசதி என்று இப்படி ஒரு லட்சார்ச்சனை செய்வதுபோல் ஒப்பிக்கப்படும் நோயைப் பற்றிய பட்டியல். இவையெல்லாம் ஒருபுறமிருக்கட்டும்.

'நியூட்ரிஷன் எனிமியா' என்று ஒருவகை ரத்தக் குறைவுதான் இக்காலத்தில் அதிகமாகக் காணப்படுவது. அதாவது 'போஷாக்குச் சோகை'' எனலாம். அதாவது போஷாக்குப் போதாமையால் ஏற்படும் சோகை என்று பொருளாகும்.

ஒரு பருக்கை சோற்றை எடுத்துத் தபால் தலையின் பின்புறம் தேய்த்துக் கவரின் மேல் ஒட்டினால் ஒட்ட மறுக்கிறது. சோற்றில் பசை இல்லாமைதான் இதற்குக் காரணம். இந்தப் பசையற்ற சோற்றைத் தின்று எப்படியோ இந்த உடலும் நிற்கிறது. அந்த உடலில் வெட்கம் கெட்ட இந்த உயிரும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இதுதான் விந்தை. இந்நிலையில் போஷாக்கைப் பற்றிப் பேசுவதே அதிகப்பிரசங்கமாகும். மற்றும் சத்தும் போஷாக்கும் ஊட்டவல்ல ஆகாராதிகளை எல்லோரும் சாப்பிடக் கிடைக்குமா? 'ஸோஷியலிஸம்' பூர்ண வெற்றி என்ற நிலையிலும் கூட எல்லோருக்கும் மேற்சொன்ன வகையைச் சேர்ந்த ஆகாராதிகள் கிடைப்பது சந்தேகம்தான். இந்த நிலை....அதாவது ஏற்றத் தாழ்வு என்பது எல்லாக் காலத்திலும் உள்ளதுதான். அனாதி காலமாக இருந்து வந்துள்ளதுதான். அதனால் அக்காலத்தில் ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதியார் தெரிவித்த மனோபாவமும் பண்பும் மக்களிடையில் நிறைந்திருந்தன. தமக்குள்ளதைப் பிறருடன் பகிர்ந்துகொண்டு உண்பதில்தான் அக்காலத்தவர் நிறைவைக் கண்டனர்.



''அவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? 'உன்மேல் உயிரையே வைத்திருக்கிறேன். உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையென்றால், எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்!' என்றார்.''



''அப்படிச் சொன்னவரா காமினியைக் கல்யாணம் செய்துகொண்டு ஜாலியாகக் குடித்தனம் நடத்துகிறார்....?''

''அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பதிலிருந்தே தெரியவில்லையா மனுஷனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று?''

மஹாமகம் — பெருங் கூட்டம். அச்சமயம் அன்னதானம் செய்யும் திருப்பணி — கேட்பானேன்!

பிரம்மோத்ஸவம்... வேத பாராயண— திவ்யப் பிரபந்தக் கோஷ்டிகள், யாத்திரிகர்களுக்கு அன்னதானம். பொறுப்பை ஏற்று நிர்வகிக்கும் குழு. சொல்ல வேணுமா?

அங்கங்கே நீர்மோர், பானகம், குளிர்ந்த பான ஜலம் — இவை கொடுத்துதவும் விடுதிகள்....பேஷ்....

இப்படி தேசாந்திரிகள் — ஐந்து பேருக்கு எட்டுப் பேருக்கு என்று 'அலங்காரமாக'ப் பருப்பு வடை வட்டு பாயஸத்துடன் சாப்பாடு - அதற்கான என்டோமென்டு.

இவ்வாறு பலப் பல நிறுவனங்கள். அவை யாவும் ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு குழுவினரின் மனத்தில் இயல்பாக உதித்து, உடல், மனங்களில் ஊறின பண்பு, சமதர்மம், சோஷலிஸம் என்ற எந்தப் பெயரிட்டு வேணுமானாலும் அழையுங்கள். இப்பண்பும் செயலும் அரசாங்கத்தின் திட்டத்தைச் சார்ந்து, சட்டத்தின் பலத்தால் புகுத்தப்பட்டவையல்ல.

வெட்டிச் சோறு போட்டு ஜனங்களை வீண் சோம்பேறிகளாக்கிவிடும் திண்ணை தூங்கிக் கூட்டம் என இதைக் குறை கூறின காலமும் உண்டு.

ஒருசிலரிடம் குவிந்திருக்கும் தனத்தைப் பலரிடம் உலவுமாறு செய்ய வகுத்த இவ்வகைத் திட்டத்தை ஏனோ 'சோஷலிஸம்' என்று தெளிய மறுத்தனர் சிலர்.

பத்து மைல் தூரத்தில் ஓர் ஊரில் ஒரு ஸமாராதனை என்றால் அந்தப் பத்து மைல் தூரத்தை இரண்டு எட்டாக நடந்து சென்று ஸ்நானம், சந்தி என்று அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மறு நாள் உச்சி வேளை வரையில் பசிக்காமலிருக்குமாறு ஸமாராதனைச் சாப்பாடு சாப்பிட்டு, ஓரணா தட்சிணையை இடுப்பில் செருகிக்கொண்டு மறுபடியும் பத்து மைலை நடந்து வந்துவிடுவர், அந்நாளில். இவ்விதமாகப் பற்பல விதங்களில் சத்தும் புஷ்டியளிக்கும் குணமும் நிறைந்த ஆகாராதிகள், இல்லாதவருக்கும் கிடைக்கும் படி வாழ்க்கைத் திட்டம் நிறுவப்பட்ட ஸமூகமாக இருந்தது பாரத ஸமுதாயம்.

சாப்பிடுபவர் என்றால் அவருக்கு மட்டும் தானா? பந்தல் போடுபவர், பாத்திரங்களைச் சுத்தி செய்பவர், காய்கறி விற்பவர், தயிர், பால் மோர் விற்பவர், பலசரக்குக் கடைக் காரர், அவரை அண்டிப் பிழைப்பவர் என்றிப்படி எண்ணற்றவருக்கும் பிழைப்பு ஏற்பட வாய்ப்பிருந்தது.

இன்று நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம். வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. சம்பாத்தியம் அதிகம். உண்மைதான். ஆனால் வாழ்வு....?

ஒருவன் சம்பாதிப்பது — அவன் பணப் பெட்டி, பணப் பெட்டியின் சாவி மனைவியின் வசம்... அவ்வம்மையோ.... தட்டான் கடையை நோக்கி நடப்பது என்றிருந்தது. இன்று அந்த நடைக்கும் அவசியமில்லை.

அக்காலத்தில் இந்த 'நியூட்ரிஷன் எனீமியா' இருந்ததா? இன்று...சோகை (ரத்தக் குறை) என்றால் அதில் தொண்ணூறு சத விகிதத்தினருக்கு இந்தப் போஷாக்குக் குறைவினால் ஏற்பட்ட ரத்தக் குறைவுதான்.

ஆமாமய்யா, இதெல்லாம் தெரிந்த விஷயம்தான். இதைச் சொல்லி என்ன பயன்? இதற்கு நிவாரணம் என்னவென்று சொல்லும் என்கிறீர்களா...?

இந்தியாவில் சராசரி தலைக்குத் தினம் ஒன்றுக்கு வருமானம் ஓர் அணா என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டுத் தெரிவித்த ஒரு காலத்தில் அன்றிருந்த வைஸ்ராய் பிரபு ஓர் அருமையான உபதேசம் இந்திய மக்களுக்குச் செய்தார். அதை இன்று பலரும் மறந்திருக்கலாம். நான் மறக்கவில்லை. அவ்வுபதேசம் என்ன தெரியுமா? ஜனங்கள் ஒவ்வொருவரும் தினம் ஆறாக்குக்குக் குறையாமல் பால் பருகிவர வேண்டும் என்பதுதான் அவ்வுபதேசம்.

அதே போல இன்று நானும் ஒரு 'நிவாரணோபாயம்' சொல்கிறேன். ஒவ்வொருவரும் தினந்தோறும் குறைந்தது ஓர் ஆப்பிள் பழம் சாப்பிட வேண்டும். இந்த நியூட்ரிஷன் எனீமியா தலைகாட்டாது. பொதுவாக எல்லாப் பழங்களும் சிறப்பாகப் பச்சைத் திராட்சை, ஆப்பிள், மங்குஸ்தான், மாதுளை, ஸபோடா இவைகளும் ரத்தக் குறைவு நீங்கும் வகையிலாவது சேவிக்கத்தக்கவை. மருந்துக்குச் செலவு செய்வது போல் இவற்றுக்கும் செய்ய வேண்டும். உண்மையில் இது மருந்தையும் விடச் சிலாக்கியமானது; பலனளிக்க வல்லது.



'என்னமாய்ப் பேசி விட்டாள் அந்தச் சாரதா?'

நினைக்க நினைக்கக் கோமதிக்கு நெஞ்சு வலித்தது. மனம் புழுங்கித் தவித்தது. ஆற்றாமையும் ஆதங்கமும் சேர்ந்தபோது, அவள் அழுதேவிட்டாள். தன்னைப் பற்றி அவள் ஏதும் சொல்லியிருந்தால் கோமதி இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்க மாட்டாள். தூசெனத் துடைத்தெறிந்துவிட்டுப் போயிருப்பாள். ஆனால் சொன்னது அவளுடைய கணவனைப் பற்றி; தன்னைக் கண்ணுக்குக் கண்ணாகப் போற்றிக் கொள்ளை ஆசையுடன் வைத்திருக்கும் தன் அன்புக் கணவனைப்பற்றி. அதனால் அது மனத்தில் பசையாக ஒட்டிக் கொண்டு அரித்தது. நினைப்பின் வேகம் அதிகரிக்கும்போதெல்லாம் அவள் குமுறினாள். ஆத்திரம் ஆவியாய்ப் போய், நெஞ்சு நிச்சலனமாய் இலேசானபோது 'இவர் ஏன் இதற்கு ஆசைப்பட்டார்? இவர் ஒப்புக் கொண்டதாலல்லவா இந்தச் சாரதா இப்படிப் பேசினாள்?'

ஆத்திரம் திசை தப்பி அவள் கணவன் மீது திரும்பியது.

'வரட்டும் இவர்!'

கோமதியின் ஆத்திரம் புகைந்தது. மனத்துக்குள் கறுவினாள்.

சாரதாவும், கோமதியும் பக்கத்துப் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள். இருவருடைய கணவன்மாரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள். எனவே இரண்டு பெண்களிடையேயும் சுமுகமான சூழலும், நேயம் கலந்த பரிவும் நிலவின. கோமதியின் கணவன் நாராயணன் நல்ல அழகன். சிவந்த மேனியும், சுருண்ட முடியும், கவர்ச்சி நிறைந்த கண்களும், எடுப்பான நாசியும், சிவந்த சிரித்த உதடுகளுமாக இருப்பான். கோமதிக்கு அளவிறந்த பெருமை. பிடி கொள்ளா மகிழ்ச்சி. சாரதாவின் கணவன் ராமசாமி மட்டும் அழகில்லை என்று சொல்ல முடியாது. ஓர் ஆணுக்குத் தேவையான அழகு அவனுக்கு இருந்தது. அவ்வளவே. சிறப்பாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

ஓ-இதுவா-சேதி!

ஜேகமஞஎன்

அன்று காலை நாராயணன் அலுவலகத்துக்குப் புறப்பட்டவுடன் சாரதாவின் வீட்டுக்குள் நுழைந்தாள் கோமதி. காலைச் சாப்பாடும் டிபனும் ஒருசேர முடிந்துவிட்டதால் இனி மாலைதான் வேலை. அதுவரைக்கும் அரட்டை, பேச்சு, சிரிப்பு இப்படி நேரத்தை அவள் ஓட்டி விடுவாள்.

கோமதி — சாரதா பேச்சு எப்படியோ ஆரம்பித்து எங்கேயோ முடிந்தது.

''கோமதி! உங்க வீட்டுக்காரர் ஆபீஸ் நாடகத்திலே நடிக்கிறாராமே, தெரியுமா?'' சகஜமாகக் கேட்டாள் சாரதா.

கோமதிக்கு வியப்புத் தாளவில்லை. அவளுடைய வியப்புக்குக் காரணம் இருந்தது. நாராயணன் அது பற்றி அவளிடம் மூச்சே விடவில்லை.

''அப்படியா? எனக்குத் தெரியாதே? என்னிடம் 'அவர்' ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே?''

''சொல்லலியா? எப்படிச் சொல்லுவார்? போடப்போகிற வேஷம்....?'' சாரதா முடிக்கவில்லை. கோமதி சட்டென்று குறுக்கிட்டாள்.

''நிச்சயம் கதாநாயகன்தான். அதிலென்ன சந்தேகம்?'' என்று பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்திச் சொன்னாள் கோமதி. அவள் விழிகள் மின்னின.



சாரதாவுக்குச் சிரிப்புத் தாளவில்லை.

"உக்கும்... நீயும் உன் பெருமையும். நீ நினைக்கிற மாதிரி கதாநாயகன் இல்லை, —கதாநாயகி—அதாவது பொம்பளை வேஷம்"

'நாயகி' என்பதைச் சற்று அழுத்திச் சொல்லிப் பொங்கும் சிரிப்பைச் சிதற விட்டாள் சாரதா.

தூக்கிவாரிப்போட்டது கோமதிக்கு.

"சாரதா, என்ன கேலி பண்ணறே?" அவள் சீறினாள்.

"என்டியம்மா, உனக்கு வெட்கமாக இருக்கா? உன்கிட்ட உன்னுடையவர் ஏன் அதுபற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லலைன்னு இப்பவாவது புரியுதா? அவருக்கே வெட்கம், சொல்லலை!" கோமதியை மேலும் சீண்டினாள் சாரதா.

"போதும், போதும் நிறுத்து" என்று கோமதி கூவினாள்.

"நீ ஏன் இப்படி அலட்டிக்கிறே? ஆபீஸ் பூரா ஒரே கேலியும் கிண்டலும்தானும் போ. உன்னுடையவர் நடக்கிற நடையும் பார்க்கிற பார்வையும், வெட்டற வெட்டும் அசல் பொம்பளை கெட்டாளாம் போ." வர்ணித்துக்கொண்டே போனாள் சாரதா.

"போதும், போதும்!"

"அது மட்டுமா. இன்னுமிருக்கு. ஆபீசிலே உன்னுடையவரை 'டேய் பொம்பளை' 'ஏய், மிஸ் நாராயணி' அப்படின்னுதான் எல்லாரும் கூப்பிடுறாங்களாம். எங்களவர் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார். அவரால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. விழுந்து விழுந்து சிரிக்கிறார்!"

சாரதா சிரிப்பை அடக்க முடியாமல் திணறினாள். விருட்டென்று எழுந்து வந்து விட்டாள் கோமதி.

அவள் வாசல் தாண்டும் வரையில் சாரதாவின் சிரிப்பொலி கேட்டுக்கொண்டேயிருந்தது. வீட்டுக்கு வந்து குமுறிக் குமுறி அழுதாள் கோமதி.

கோமதியின் மனத்தைப் புண்படுத்த வேண்டுமென்று சாரதா பேசவில்லை, வினை

பெரியோர் வாழ்வில்

பேசாத பேச்சு

மார்க் டிவெயினும் சான்ஸி எம். டிப்யூவும் நெருங்கிய நண்பர்கள். ஒரே கப்பலில் பயணமானார்கள். அந்தக் கப்பல் ஒரு துறைமுகப் பட்டினத்தில் சில நாட்கள் தங்கி இருந்தபோது அவ்வூர்ப் பிரமுகர்கள் அவ்விருவரையும் விருந்துக்கு அழைத்து, அவர்களைப் பேசுமாறு பணித்தார்கள். முதலில் மார்க் டிவெயின் பேசினார். அவர் இருபது நிமிடங்கள் ஆரவார மழையாகப் பொழிந்து தள்ளினார். அதன் பிறகு டிப்யூ எழுந்தார்.

''சீமான்களே! சீமாட்டிகளே! விருந்துக்கு வருவதற்கு முன் நானும் மார்க் டிவெயினும் எங்கள் பேச்சை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வது என்று ஒப்பந்தம் செய்துகொண்டோம். இப்பொழுது அவர் என்னுடைய பேச்சை மழையாகப் பொழிந்தார். நீங்கள் அந்த அற்புதமான பேச்சை ஆரவாரத்தோடு கேட்டீர்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் மார்க் எழுதித் தந்த பிரசங்கத்தை நான் தொலைத்துவிட்டேன். அவர் எழுதியிருந்ததில் ஓர் அட்சரம்கூட என் நினைவில் இல்லை'' என்று கூறி உட்கார்ந்துவிட்டார் டிப்யூ.

பாட்டாக அவளைச் சீண்டினான். அது வினையாகிவிட்டது.

அழுது ஓய்ந்தபோது ஆத்திரம் முழுதும் கணவனின் மீது திரும்பியது.

'பொம்பளை வேஷம் போடுவதைச் சொல்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு என்னிடம் மறைத்துவிட்டார். வரட்டும் சாயங்காலம்!' கோமதி குமுறினாள்.

'நாடக ஒத்திகையில் கலந்துகொண்டு வீட்டுக்கு லேட்டாக வருவது. கேட்டால் ஆபீஸில் வேலை என்று புளுகுவது. வரட்டும் இன்று. உண்டு இல்லை என்றாக்கி விடுகிறேன்!' கோமதி கறுவினாள்.

மாலை மணி ஏழு.

'கிணிங்.... கிணிங்' வாசலில் நின்று கொண்டு மணியை அடித்தான் நாராயணன்.

சைக்கிள் மணிச் சத்தம் கேட்டவுடன் புன்முறுவல் தவழ ஓடிவரும் கோமதி வரவில்லை. அவள்தான் உள்ளே புகைந்து கொண்டிருக்கிறாளே.

மனத்தில் வியப்பு விரிய, சைக்கிளை நடையில் வைத்துப் பூட்டிவிட்டு, டிபன்பாக்ஸை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் நாராயணன்.

அடுக்களையில் 'தடால்—புடால்' என்று சத்தம் கேட்டது. எதையோ போட்டு உருட்டிக்கொண்டிருந்தாள் கோமதி.

முகம், கைகால் கழுவி, ஈஸிசேரில் சாய்ந்தான் நாராயணன். அவனுடைய கைகள் எதிரே இருந்த முக்காலி மீது தாளம் போட்டன. காப்பி வரவேண்டும்.

கோமதி அடுக்களையை விட்டு வெளியே வரவேயில்லை.

'என்னடா இது?' ஆச்சரியமடைந்தவனும் அடுக்களையினுள் நுழைந்தான் நாராயணன்.

கோமதியின் மனம் பொங்குவது போல் அடுப்பில் பால் பொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள் கோமதி.

''அடடே!'' என்று சட்டென்று பொங்கும் பால் மீது நீரைத் தெளித்தான் நாராயணன்.

பால் பொங்குவது அடங்கியது.

''ம்... தண்ணீரை விட்டு அதை அடக்கி விட்டீர்கள்....!''

'வெறுப்புடன் பேசினாள் கோமதி.

கோமதியின் பேச்சு நாராயணனுக்கு வியப்பைத் தந்தது. அன்பு ஒன்றையே அவள் பேச்சில் கண்டவன் அவன்.

''கோமதி! என்ன இது புதுசா என்னென்னமோ பேசறே? கொஞ்சம் புரியும்படியா பேசு?''

ஆசையுடன் அவளுடைய தோளைப் பற்றினான் நாராயணன்.

வெடுக்கென உதறினாள் கோமதி.

சட்டென்று அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, ''கோமதி! கண்ணல்ல. என்ன கோபம்? ஏன் இப்படி நடக்கிறே?'' என்றான் பரிவுடன்.

''போதும் உங்க நடிப்பு. உங்க ஆபீஸ் நாடகத்திலே நீங்க நடிக்கிறீங்களா?'' கண்டிப்போடு கேட்டாள் கோமதி.

'ஓஹோ'வென்று சிரித்தான் நாராயணன்.

''சிரிக்காதீங்க. நேரடியாகப் பதில் சொல்லுங்க!''

''ம்... உனக்குத் தெரிஞ்சு போச்சா? ஆமா, நடிக்கிறேன்!''

''என்ன வேஷம்?''

''அடடே! அதுவும் தெரிஞ்சு போச்சா? கதாநாயகி வேஷம்!''

''ஏன் இதை எங்கிட்டே சொல்லலே?''

''கோமதி! நாடகத்தன்னிக்கி உன்னை அழைச்சிண்டு போய்த் திகைக்க வைக்கணும்னு நினைச்சேன். ஆனால் அது முடியாமல் போச்சு. உனக்குத் தெரிஞ்சு போச்சே!''

ஞுன் கொட்டினான் நாராயணன்.

''அது மட்டும் தெரியலே. நீங்க பொம்பளை மாதிரி வெட்டறதையும், பார்க்கிறதையும், நடக்கிறதையும் கண்டு உங்க ஆபீஸிலே 'பொம்பளை, பொம்பளை'ன்னு கூப்பிட்டு, 'மிஸ் நாராயணி'ன்னு கேலி பண்ணி, சிரிக்க, மானத்தை வாங்கறதையும் தெரிஞ்சுக்கிட்டேன். சாரதா சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறா. மானம் போகுது!''

தலையில் பட்பட்டென்று அடித்துக்கொண்டாள் கோமதி.

அதுவரையில் சிரித்துக் காணப்பட்ட நாராயணனின் முகம் சட்டென்று கறுத்துச் சிறுத்து விட்டது.

''எந்த முட்டாள் சொன்னது அப்படி? எந்தப் பயலாவது பேசியிருந்தால் 'போங்கடா, நீங்களும் உங்க நாடகமும்' அப்படின்னு சொல்லி, வேஷத்தை உதறிவிட்

ஜலதோஷம் வராமல் தடுக்கச்

சாப்பிடுங்கள்

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் | சிவப்பு லேபில்

—வெறும் மருந்துமட்டுமல்ல,

நம்பிக்கைக்குப் பாத்திரமான டானிக்குமாகும்!



வாழையடி வாழையாகக் குடும்பத்தினர் நல்லதென நம்பிக்கை கொள்ளச் செய்யும் பல நல்ல காரணங்களுள் நாலு இதோ :

1. கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப் படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.

2. இருமலை இமைப்பொழுதில் கச்சிதமாய்க் கரைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.

3. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் நோய் நிவாரணியும், நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது.

4. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டி, ஜீரண சக்தியை வளர்ப்பதுடன், ரத்தத்தைச் சுத்தப்படுத்தி, தாதுப்பொருள் நஷ்டத்துக்கு ஈடுசெய்கிறது.

WCRY-3-TAM

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் | சிவப்பு லேபில்

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி. (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

டிருப்பேன். கெஞ்சாத கெஞ்சு கெஞ்சி, 'நாராயணா, நீதாண்டா அந்த வேஷத்தைப் போட்டுக்கணும். உனக்குத்தான் பொருத்தி வர்றது' அப்படின்னு கைகால் பிடிக்காத குறையா வேண்டிக்கிட்டப்புறம்தான் அந்த வேஷத்தை எடுத்துக்கிட்டேன். என்னையா அப்படிச் சொல்றுங்களாம்? யார் அப்படிச் சொன்னது?''

ஆத்திரத்தில் கத்தினான் நாராயணன்.

நாராயணனின் வெந்துவிட்ட முகத்தையும், அளவுக்கு மீறிய ஆத்திரத்தையும் கண்டு அதிர்ந்துவிட்டாள் கோமதி.

''சாரதாவோட புருஷன்தான் சாரதாகிட்ட அப்படிச் சொல்லி யிருக்கிறார். காலையிலே உங்களைப் பத்தி அவள் கேலி செய்து பேசியதைக் கேட்கக் கேட்க எனக்கு ரொம்ப அவமானமாகப் போச்சு அத்தான்!''

கோமதியின் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்கள் கலங்கிவிட்டன.

''ராமசாமியா சொன்னானாம்?'' என்றவன் சற்று நேரம் எதையோ யோசித்தான். பிறகு வாய் விட்டுப் பலமாகச் சிரித்தான். அவன் கோபமெல்லாம் பறந்து விட்டது.

''ஏன் சிரிக்கிறீங்க?'' கோமதி நாராயணனின் கைகளை எடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டாள்.

''கோமதி! அவன் ஏன் அதுமாதிரி பேசியிருக்கான்னு புரிஞ்சு போச்சு. விஷயம் என்ன தெரியுமோ? இதுதான்: ராமசாமிக்குக் கதாநாயகி வேஷம் போட்டுக்கணும்னு கொள்ளை ஆசை. சொல்லப்போனால் வெறி. அதுக்காக அவன் மனைவி சேலையை அள்ளிக்கிட்டு ஆபீசுக்கு எடுத்துக் கொண்டு வந்து புடவையைக் கட்டிக்கிட்டுக் கதாநாயகி நடை நடந்தான். அது வில்லன் நடை மாதிரி இருந்தது. காதல் பார்வை பார்த்தான். அது கரடியின் பார்வை, புலியின் பார்வையா யிருந்தது. கழுத்தை ஒரு வெட்டினான். ஒட்டைச்சிவிங்கி கழுத்தை ஆட்டறது மாதிரி இருந்தது. 'நீ இந்த வேஷத்துக்கு லாயக்கில்லேன்னு' சொல் லிட்டாங்க. மத்தவங்களும் போட்டுப் பார்த்தாங்க. எவனுக்கும் பொருந்தி வரலே. 'நீயும்தான் போட்டுப் பாரேன்' அப் படீன்னு என்கிட்டே வந்தாங்க. கச்சிதமாச் செய்து காட்டினேன். ஆனால் நடிக்க முடியா துன்னு சொல்லிவிட்டேன். ரொம்ப தூரம் கெஞ்சினாங்க. போனாப் போகுதுன்னு ஒத்துக்கிட்டேன். ராமசாமி ரொம்ப ஆசையா யிருந்தான். பெண்டாட்டி சேலையைக்கூடக் கொண்டு வந்தான். இடைக்கலே அந்த வேஷம். அதை எனக்குக் கொடுத் திட்டாங்களேன்னு பொறாமை. அந்தப் பொறாமையாலேதான் என்னைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் அவன் பெண்டாட்டி கிட்டே சொல்லி யிருக்கான். அவன் உன்கிட்டே சொல்லி உன் மனசைக் குழப்பியிருக்கா. நீ என்னைக் குழப்பிட்டே. ஒன்னு சொல்றேன். எந்தப் பயலாவது அதுமாதிரி என் முன்னாலேயோ பின்னா லேயோ சொன்னான்னு தெரிஞ்சா உடனே 'போங்கடா நடிக்க முடியாது'ன்னு உதறிவிடு

விஞ்ஞான விநோதம்

அளவுக்கு மீறினால்....

எந்த மருந்தை உட்கொண்டாலும் அதற்கு ஓர் அளவு உண்டு. எப்பேர்ப் பட்ட நல்ல புஷ்டி தரும் மருந்தென் றாலும் ஓர் அளவுக்கு மேற்பட்டால் அதனால் பலன் இராது. வைட்டமின் கள்கூட அளவுக்கு மீறி உபயோகிக் கப்பட்டால் அதனால் கேடுதான் விளைகிறது.

குழந்தைகளுக்கு இந்த அதிக டோஸ் மருந்து மிக ஆபத்தானவை. அதிகமாக வைட்டமின்கள் கொடுத் தால் சீக்கிரமாகவும் நன்றாகவும் வளர லாம் என்பது தவறான அபிப்பிராய மாகும். டாக்டர்களின் ஆலோசனை யின்பேரிலேயே வைட்டமின்களையும் குழந்தைகளுக்குத் தர வேண்டும்.

குழந்தைகள் எலும்பு வளர வைட் டமின் 'ஏ' மிகவும் அத்தியாவசியம். குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை யுள்ள தாய்மார்கள் இந்த வைட்ட மின் அதிக அளவுள்ள பொருள்களைக் குழந்தைக்குக் கணக்குத் தெரியாமல் கொடுத்துவிடுகின்றனர். அதிகப்படி வைட்டமின்கள் கால் எலும்புகளைப் பாதிப்பது மூலம் குழந்தைகளுக்குக் கால் வளைமாகி விடலாம்.

வேன். தெரிஞ்சுக்கோ. இப்ப விஷயம் தெளிவாச்சா? இனிமே கோபம் இருக்காதே?''

''அப்படியா சேதி? இப்பவே போய்ச் சாரதாவிடம் சூட்டை உடைக்கிறேன்!'' என்று எழுந்தாள் கோமதி.

எழுந்தவளைச் சட்டென்று தடுத்து நிறுத்தி உட்கார வைத்தான் நாராயணன்.

''வேண்டாம் கோமதி. பக்கத்துப் பக் கத்து வீட்டிலே நாம் இருக்கோம். அதுவு மில்லாமே ஒரே ஆபீஸிலே நாங்க வேலை செய்யறோம். அந்த அற்ப விஷயத்துக்காக நாம் ஏன் சண்டை போட்டுக்கணும்? அதுவு மில்லாமே நீயும் சாரதாவும் ரொம்ப சிநே கிதமா யிருந்தீங்க. இந்த விஷயத்துக்குச் சண்டை போடப் போய், ஏன் நட்பை முறிச் சுக்கணும்? சாரதாகிட்டே ஒண்ணும் இதைப் பத்திப் பேச வேண்டாம்!''

அமைதியுடன் பேசினான் நாராயணன்.

கோமதியின் கோபம் நெருப்பில் பஞ்சாக மறைந்து விட்டது. கணவனின் பெருந் தன்மை அவளைப் புல்லரிக்க வைத்தது.

''உங்களுக்குத்தான் எவ்வளவு பரந்த மனம்?'' என்று நெகிழ்வுடன் அவள் பேசினாள்.


''ஆ! என் அன்பே!'' என்று நாடக பாணி யில் அவள் முகத்தைப் பற்றினான் அவன்.

''போதும்... போதும்...!''

கோமதி விழுந்து விழுந்து சிரித்தாள்.

கனத்துக் கிடந்த அவள் மனம் வெளி வாங்கிய வானம் போல் இலேசாகி விட்டது.

விபத்து வந்ததும்



தேவிகாவுக்கு ஆத்திர உணர்ச்சி ஒரு புறம்; பரிகாச உணர்ச்சி ஒருபுறம். "ஆமாம் நீங்கள் பேசாமல் உங்கள் அருமையான ஸ்கூட்டரையே திருமணம் செய்து கொண்டிருக்கலாமே!" என்று வெடுக்கென்று கூறினாள்.

"பைத்தியம்! இதற்கு உன்னைப் போல் பொறுமைப்படத் தெரியுமாக்கும்! பேச்சைப் பார், பேச்சை!" என்று கூறி நகைத்தான் மனோகரன்.

தேவிகாவும் பார்க்கிறாள், கடந்த ஒரு வார காலமாக — அதாவது இந்த ஸ்கூட்டர் வாங்கியதிலிருந்து — மனோகரன் சதாசர்வ காலம் இதனுடனேயல்லவா தன் நேரத்தைக் கழிக்கிறான்! ஓர் அரை மணி நேரம் அக்கடா வென்று தன்னுடன் உல்லாசமாய்ப் பேசிப் பொழுது போக்கியது உண்டா? அது போகட்டும். தன்னுடைய அக்காள் தன் கணவனுடன் டில்லியிலிருந்து தன்னைக் காண ஆசையுடன் சில தினங்களுக்கு முன்பு வந்திருந்தாளே! இரண்டே இரண்டு தினங்கள் தான் இங்கு தங்கினார்கள் அவர்கள். அவர்களுடன் இவர் ஐந்து நிமிடம் நிம்மதியாகப் பேசியது உண்டா? வந்திருந்த விருந்தினர்களுக்கு எப்படி இருக்காது? விருந்தினர்களை அலட்சியப்படுத்தி விட்டு, இந்த அருமையான ஸ்கூட்டரைக் கட்டிக் கொண்டு..... சே! சே!.....

பார்ப்பவர்கள் எல்லாரும் ஒருமுகமாய் மனோகரனைப் பாராட்டினார்கள்! மனோகரன் அந்த வீதிக்கே ஒரு கலகலப்பை உண்டாக்கி விட்டான். அவன் ஸ்கூட்டரில் புறப்படும் போதும் சரி, வெளியிலிருந்து திரும்பும் போதும் சரி, அந்த வீதியே திரளாகக் கூடிவிடும்.

மனோகரனுக்கு டெலிபோன் இலாக்காவில் ஒரு பொறுப்புள்ள வேலை. அவனுடைய வீட்டுக்கு இலாகாச் செலவிலேயே ஒரு போன் அளித்திருந்தார்கள்.

மனோகரன் ஓர் இளைஞன். இருபத்தைந்து வயதுதான் ஆகிறது. ராஜா என்றால் ராஜா தான்! அவனுடைய தோற்றத்திலே மயங்கித்தான் அவனைச் சுயம்வரம் செய்து கொண்டாள் தேவிகா. சொத்துக்குத்தான் என்ன குறைவு? பணக்காரத் தந்தையின் ஒரே மகன். தந்தை கிராமத்திலே பெரிய மிராசுதார்! உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஒன்றும் கிடையாது. ஏதோ பொழுது போக்குக்காகவும், கௌரவத்துக்காகவும்தான் அவன் வேலை பார்க்கிறான்.

திருமணம் ஆகி ஒரே ஆண்டுதான் ஆகிறது. தேவிகாவின் மீது அவனுக்கு எத்தனை அன்பு! "தேவிகா! தேவிகா!" என்று அவன் அவளை அழைக்கும் போதுதான் அந்த அழைப்பிலே எத்தனை குழைவு! எத்தனை மென்மை!

ஒரு நாள் மாலை ஐந்து மணி. வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நிற்கும் ஒலி கேட்டது. பரபரப்புடன் வாசலுக்கு ஓடி வந்தாள் தேவிகா. அழகிய ஒரு ஸ்கூட்டரில் அமர்ந்த வண்ணம் குறும்பு நகையுடன் அவளை நோக்கினான் மனோகரன்.

"ஓ! நீங்களா? ஏது இது!"

"வாங்கினேன்!"

"என்னிடம் சொல்லவே இல்லையே!"

"உன்னைத் திகைக்க வைக்க வேண்டும் என்றுதான்.."..

தேவிகாவின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை. ஸ்கூட்டரை ஓரமாய் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தான் மனோகரன்.

"தேவிகா!"

"ஏன்?" என்றாள் தேவிகா காப்பியை அவன் முன்னால் வைத்து விட்டு.

"அன்று ஒரு நாள் நடந்தது நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.



''என்ன நடந்தது?''

''என் நண்பன் சுந்தரம் ஸ்கூட்டரில் தன் மனைவியுடன் வந்து நம் வீட்டின் முன்னால் இறங்கினானே!''

''..............''

''நீ முகத்தை ஒரு மாதிரியாகக் கூட வைத்துக் கொண்டாயே!''

''ஒரு மாதிரியா?''

''ஆமாம், தேவிகா! 'இவள் கொடுத்து வைத்தவள். ஜம்மென்று ஸ்கூட்டரில் தன் கணவனுடைய தோளைப் பிடித்துக் கொண்டு குஷியாய்ப் பயணம் செய்கிறாள்' என்று எண்ணி ஏங்கினாய்!''

தேவிகா முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டாள். ''ஹூம்! ஒரு நாளுமில்லை, அவள் மீது எனக்குப் பொறாமை இல்லை. வீதியிலே வெட்கமில்லாமல் தன் புருஷனுடைய தோளைப் பிடித்துக் கொண்டு பயணம் செய்கிறாளே! நாலு பேர்கள் பார்த்துப் பரிகாசம் செய்ய மாட்டார்களா என்று தான்....''

மேற்கொண்டு பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க விரும்பாத தேவிகா, அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

தன் மனைவியின் முகபாவத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக வருந்தி வெட்கினான்

சரஸன்

மனோகரன். ஸ்கூட்டரை வாங்கியவுடன் அவன் எத்தனை மனக் கோட்டைகள் கட்டினான்? எல்லாம் தவிடுபொடி! தன் மனைவியைப் பின்னால் உட்காரச் சொல்லி ஒய்யாரமாய் வீதியிலே செல்லும் வாய்ப்புக் கிட்டவில்லையே என்ற தாபம் ஒருபுறமிருப்பினும், ஸ்கூட்டர் வாங்கிய பெருமிதம் என்னமோ அளவுகடந்துதான் இருந்தது மனோகரனுக்கு. அதன் மீது ஒரு சிறு தூசி அல்லது கீறல் தென்படக் கூடப் பொறுக்க மாட்டான். ''தேவிகா! இதோ பார் 'நம்பர் பிளேட்'டில் ஒரே தூசி! கவனிக்கக் கூடாதா?'' என்பான்.

ஸ்கூட்டர் வந்த ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் காலை.

''தேவிகா! இன்று சில நண்பர்களுடன் மகாபலிபுரம் செல்லத் திட்டமிட்டிருக்கிறேன். எத்தனை பேர் தங்கள் மனைவிமார்களுடன் வரப் போகிறார்கள், பாரேன்! தேவிகா! தேவிகா! இன்று மட்டும்....!'' என்று கெஞ்சினான்.

''ஐயே! போதும்! நீங்களும் உங்கள் ஸ்கூட்டரும்!'' முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள் தேவிகா.

ஸ்கூட்டர் வாங்கியதிலிருந்து அவள் கணவன் ஒரு நாளைப் போல் இரவில் நேரம் கழித்துத்தான் வருகிறான். தவிர, விடுமுறை நாட்களிலாவது வீட்டில் தங்குகிறானா? வேடந்தாங்கல், காஞ்சிபுரம், திருத்தணி, திருப்பதி, சோளங்கிபுரம் – அது இது என்று

உல்லாசப் பயணம் கிளம்பி விடுகிறாள்: பாவம்! ஓர் இளம் பெண்! எப்படி இருக்கும் தேவிகாவுக்கு?

அன்று இரவு ஏழரை மணி. வீட்டிலே தனிமையிலே தேவிகா தவித்துக் கொண்டிருந்தாள். சீக்கிரம் வந்து விடுவதாய்ச் சொல்லி விட்டுச் சென்ற மனோகரனை இன்னும் காணோம். டெலிபோன் அலறியது.

"ஹல்லோ! தேவிகா! மனோகரன் பேசுகிறேன். ஒரு முக்கியமான வேலையினால் தங்கி விட்டேன். இன்னும் அரை மணி நேரத்திலே வீட்டுக்கு வந்து விடுகிறேன்."

தேவிகாவுக்கு ஏனோ தன் கணவனின் பேச்சிலே நம்பிக்கை இல்லை. அவன் சீக்கிரம் வராததற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஏன் இந்தச் சந்தேகம்? சில தினங்களுக்கு முன்பு தனக்கும் மனோகரனுக்கும் நடந்த வாக்குவாதத்தை நினைவுகூர்ந்தாள் இப்போது:

"ஆமாம், உங்கள் அத்தை மகள் சகுந்தலாவுக்கு உங்கள் ஆபீஸிலேயே வேலை வாங்கிக் கொடுத்ததைப் பற்றி என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே?"

"அதை நான் சொல்லா விட்டால் என்ன? உனக்கு அவளே சொல்லி யிருப்பாளே!"

"சொன்னாள், சொன்னாள். நான் தவறாமல் அவளை ஸ்கூட்டரில் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வருகிறீர்களாம்."

"இதோ பார், தேவிகா! நாங்கள் குழந்தைகளாக இருந்தது முதல் நெருங்கிப் பழகியவர்கள். சகுந்தலா தங்கமான பெண்...."

போன் மீண்டும் ஒலித்தது.

"யார், தேவிகாதானே? நான் லல்லி பேசுகிறேன். சாந்தோம் பீச் ரோட்டிலே ஒரு ஆக்ஸிடெண்டாம். ஒரு ஸ்கூட்டர் ஒரு ஸ்திரீயின் மீது மோதி, ஸ்திரீக்கு நல்ல அடிபட்டு விட்டதாம். ஸ்கூட்டரில் வந்தவன் நிற்காமல் ஓடி விட்டானாம். ஆனால் பின்னால் ஒரு காரில் வந்தவர் ஸ்கூட்டரின் நம்பரைக் குறித்துக் கொண்டாராம். ஸ்கூட்டரின் நம்பர்கூடச் சொன்னார்கள். அது உன் கணவருடைய ஸ்கூட்டர் நம்பரை ஒத்திருந்தது. பின்னால் ஒரு பெண் உட்கார்ந்துகொண்டிருந்தாளாம். எனக்கு மட்டும் நம்பிக்கை இல்லை, தேவிகா!"

ஆத்திரமும் பீதியும் அடைந்த தேவிகா போனை 'டக்' என்று கீழே வைத்தாள்.

கடிகாரத்திலே மணி எட்டு அடித்தது. வாசலில் ஸ்கூட்டர் ஒலி கேட்டது. மனோகரன் வந்து விட்டான்.

"வேலை முடிந்ததா? பாவம், ரொம்பவும் களைத்திருக்கிறீர்களே!" தேவிகாவின் குரலில் ஒலித்த ஏளனத்தை மனோகரன் புரிந்து கொள்ளச் சிரமப்படவில்லை. "ஆமாம். ஆபீஸிலிருந்துதான் வருகிறீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்!" கோபக் கனல் பறக்கக் கேட்டாள் தேவிகா.

"ஏன்? உன் மனத்தில் எதை வைத்துக் கொண்டு சிரமப்படுகிறாய் தேவிகா?"

"நீங்கள் சகுந்தலாவைப் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு, கண் மூடித்தனமாய் சாந்தோம் பீச் ரோட்டிலே போகவில்லை?" தேவிகா ஓவென்று அழுதாள்.

"தேவிகா! என்ன இது? ஏன் ஓலமிடுகிறாய்?" பதறி விட்டான் மனோகரன்.

"போலீசுக்கு உங்கள் ஸ்கூட்டரின் நம்பர் தெரிந்துவிட்டது. நீங்கள் தப்ப முடியாது!"

"நம்பரா? போலீசா?"

"ஆமாம். ஒன்றுமே தெரியாது உங்களுக்கு! நீங்கள் இருவரும் ஸ்கூட்டரில் உட்கார்ந்து கொண்டு, கண்மூடித்தனமாய் ஓட்டி சாந்தோம் பீச் ரோட்டிலே ஒரு பெண் மீது இடித்துவிட்டு ஓடிவிட்டீர்கள்."

"முழுப் பொய்! தேவிகா! நான் சகுந்தலாவைப் பின்னால் ஏற்றி வைத்துக் கொண்டு கிளம்பியது உண்மை. இருவரும் அவளுடைய வீட்டுக்குச் சென்றோம். அவளுடைய தந்தை, நான், சகுந்தலா மூவரும் பேசிக் கொண்டிருந்தோம். சகுந்தலாவுக்குத் திருமணம் நிச்சயமாகப் போகிறது. அவளுக்குப் பார்த்திருக்கும் வரன் என் நண்பன்."

"ஜோடனை பிரமாதமாகத்தான் இருக்கிறது. ஆனால் பிறர் எவ்வளவு தூரம் நம்புவார்கள்?"

வாசலில் போலீஸ் வான் வந்து நின்றது.

"மிஸ்டர் மனோகரன் நீங்கள்தானே?"

"ஆமாம்."

"உங்கள் ஸ்கூட்டரின் எண் எம். எஸ். பீ. பதினேழு பதினாறுதானே!"

"உம்!"

"மிஸ்டர் மனோகரன்! சற்று வாசற்புறம் வாருங்கள்" என்று கூறி இன்ஸ்பெக்டர் மனோகரனை இட்டுச் சென்றார். வானில் அமர்ந்திருந்த ஒரு நபரைச் சுட்டிக் காட்டி, "இவர் யார் சார்?" என்று கேட்டார்.

"ஆ! பாஸ்கர்! நீங்களா?" என்றான் மனோகரன் திகைப்புடன்.

"சார்! இந்த ஆசாமிதான் உங்களுடைய ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு போய், ஒரு பெண் பிள்ளை மீது மோதிவிட்டு ஓடினவர். அரை மணி நேரத்திலே தாமே போலீஸில் சரணடைந்துவிட்டார். உங்கள் ஸ்கூட்டர், கேஸ் முடியும் வரை எங்களிடம் இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டுக் கிளம்பினார் இன்ஸ்பெக்டர்.

எல்லாம் ஒரு நொடியிலே இப்போது விளங்கி விட்டது மனோகரனுக்கு. பாஸ்கர் சகுந்தலாவின் அண்ணன். தாற்காலிக லைசென்ஸுடன் ஸ்கூட்டர் விடப் பழகிக் கொண்டிருக்கிறான். இன்று அவன் சகுந்தலாவின் வீட்டிலே பேசிக் கொண்டிருக்கையிலே, பாஸ்கரன் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு கிளம்பியிருக்கிறான். எதிர்பாராத விதமாய் விபத்துக்குக் காரணமாகி விட்டு, பயந்த பாஸ்கர், ஸ்கூட்டரை ஓசைப்படாமல் வீட்டு வாசலில் வைத்து விட்டுப் பின்பு, தானே போலீஸில் சரணடைந்திருக்கிறான்.

தேவிகாவின் சந்தேகங்கள் தீர்ந்துவிட்டன.

"போதும், தேவிகா! இந்தச் சனியனை விற்றுவிடப் போகிறேன்!" என்றான் மனோகரன் அலுப்போடு.

"ஒன்றும் வேண்டாம். அது இருந்து விட்டுப் போகட்டும். நானும் பின்னால் உட்கார்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டு விடுகிறேன்!" என்று கூறினாள் தேவிகா.


உங்கள் சமையலுக்குத் தேவையான
மணத்திற்கும் ருசிக்கும்
வெஜிடபிள்
எண்ணெய்
களாலான
OK
வனஸ்பதி
உபயோகியுங்கள்
அது ஆரோக்யத்திற்கு ஏற்றது: தூய்மையானது. வைட்டமின்கள் A மற்றும் D யுடன் கூடியது
சுத்தமாகப் பாக் செய்யப்பட்டு 3 வசதியான குடும்பத்திற்கேற்ற சைஸ்களில் கிடைக்கின்றது.
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை
OK
MADE FROM VEGETABLE OILS ONLY
OK பரிசுக் கூப்பன்களை சேகரியுங்கள்

அத்தியாயம் இருபத்தொன்று


சித்த யோகம்

பருவப் பெண்ணின் தங்க நிற மேனியில் பின்னிப் புடைத்தோடும் பச்சை நரம்பு போல் வெண் மணல் விரிப்புக்கிடையே அந்தச் சிற்றாறு சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது: அதன் வலப்புறக் கரைச் சரிவில் மரகத வண்ணச் சூலாயுதம்போல் வானோங்கி வளர்ந்து நின்ற ஒற்றைச் சவுக்கை மரத்தின் அடியில் துறவறத்திலே நம்பிக்கை இழந்த போலிச் சந்நியாசி ஒருவன் தன் வச மிருந்த உருத்திராக்க மாலைகளை அறுத்தெறிந்து விட்டுப் போனாற் போல் உதிர்ந்து சிதறிக் கிடந்த சவுக்கைக் காய்களை மகிழ்ச்சித் துள்ளவிட்டு ஓடி ஓடிப் போய்ப் பொறுக்கிக் கொண்டிருந்தாள் ஆந்திர இளவரசி உத்தமசீலி.

அந்தச் சவுக்கை மரத்துக்கு மேலண்டைப்புறம் ஆற்று நீர் விளிம்பை ஒட்டினாற்போல் எழும்பி நின்ற ஒரு வழுக்குப் பாறைமேல் ஒருக்களித்துச் சாய்ந்து உட்கார்ந்திருந்த பரமேசுவர வர்மன், தூரத்தே தன்னந் தனியாக இறங்கி வந்து களியாட்டமிடும் வனதேவதை போல் விளங்கிய உத்தமசீலியை விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். மாலைச் சூரியன் வானப் பரப்பிலே நிகழ்த்திய எழில் மிகு இந்திர ஜாலங்களும் பூந்தென்றலின் இன்பச் சீதள வருடலும், அந்தச் சிற்றாற்றங்கரைப் பிரதேசத்தைச் சுற்றி அமைந்த மனோரம்மியமான இயற்கைக் காட்சிகளும், அங்கு நிலவிய ஆழ்ந்த அமைதியும் சேர்ந்து அவன் மனத்தில் குதூகலத்தைக் கொட்டி நிறைத்தன. தன் கவலைகளையெல்லாம் மறந்து அந்த இனிய சூழலை அநுபவித்துக்கொண்டே, ஆற்றங்கரைச் சரிவில் உயிர் பெற்ற கந்தர்வ ஓவியமாக ஓடியாடிச் சவுக்கைக் காய்களையெல்லாம் பொறுக்கிக் கொண்டிருந்த உத்தமசீலியை இமை தட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

நேற்றும் அதற்கு முன்தினமும் அவள் இருந்த நிலையை எண்ணிப் பார்த்தபோது, இப்போதைய அவளது தோற்றமும், மகிழ்ச்சித் துள்ளலும் உண்மைதாமா அல்லது ஏதோ ஒரு மனப் பிரமையா என்று அவனுக்கே சந்தேகமாகிவிட்டது.

'பாவம், இந்தச் சின்னஞ் சிறு பேதைப் பெண்ணைத்தான் எத்தனை பயங்கரமாக வஞ்சம் தீர்க்க முயன்றிருக்கிறான் வில்வேலி! மனித இதயத்தின் நியாயமான உணர்ச்சி அணுவளவாவது இருந்திருந்தால் அத்தகைய படுமோசமான தண்டனையை அளிக்கத் துணிந்திருப்பானா? இத்தனைக்கும் இவள் செய்த குற்றம் தான் என்ன? சளுக்கிய மன்னனின் மன்னுசையையும், இங்கே அவனது ஆட்சி அதிகார உறுதிப்பாட்டுக்காகச் சமண சமயத்தின் பெயரால் செய்யவிருந்த அக்கிரமச் சூழ்ச்சிகளையும் இவள் அறிந்து கொண்டிருப்பாளோ என்று அவனுக்கே சந்தேகப்பட்டு அந்தச் சந்தேக மிரட்சியால் இவளை ஒழித்துக்கட்டிவிட முயன்றிருக்கிறான்! சளுக்கியப்





பேரரசனின் சொந்தச் சகோதரனுடைய மகளையே அவன் பழிபாவத்துக்கு அஞ்சாமல் கொடுமைக்கு உள்ளாக்கத் துணிந்தான் என்றால், அந்நியர்களான என் நாட்டு மக்களை என்ன பாடு படுத்திக் கொண்டிருப்பான்!"

பரமேசுவரவர்மனின் உடல் சிலிர்த்தது. நேற்றுக் காலை அவன் பிரக்ஞை தெளிந்து எழுந்த பின் சொன்ன எல்லா விஷயங்களையும் இப்போது நினைத்துப் பார்த்தான். அவன் அவனிடம் எதையும் மறைக்கவில்லை. தான் இந்த நாட்டுக்கு வந்த நோக்கத்தையும், வந்த பின் நடந்த ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிட்டான். தன்னுடைய லட்சிய விஜயம் என்ன என்பதைக் கூறி, அது சிதைந்த காரணங்களையும் விளக்கிச் சொன்னான். சமண சமயத்தைப் பல்லவ நாட்டில் விரிவடையச் செய்யும் பொருட்டுத் தான் வந்ததாக அவன் கூறியதைக் கேட்டு அவன் சிறிதும் மனம் வெறுத்து கொள்ளவில்லை. 'சமயம் என்பது ஒரு தர்ம வழிகாட்டி. தர்மத்துக்குப் பல்வேறு பொருள்கள் உண்டு. சமயத்தைப் பொறுத்த வரையில் அதன் பொருள் கடமை என்பதே. ஒவ்வொரு சமயமும் இந்தக் கடமையைத் தான் பல்வேறு விதமாக உபதேசிக்கின்றன. தார்மீக அடிப்படையில் அதை எடுத்துச் சொல்ல எல்லாச் சமயங்களுக்

ரும் உரிமை உண்டு. அறிவின் வழி நின்று சத்திய எல்லையை மீறாமல் கொள்கைகளை மோத விடுவது தவறே அல்ல.' — இப்படிப்பட்ட ஒரு விரிந்த மனப்பாங்கு கொண்ட அவன் அவளுடைய விஜயத்தின் நோக்கத்தைக் கேட்டுக் கொஞ்சமும் அவள்மீது வெறுப்படையவில்லை. ஆனால், சமண சமயத்தின் பெயரால் சளுக்கிய விக்கிரமாதித்தன் செய்யத் திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சிகளை அறிந்தபோதுதான் அவன் மனம் எரிமலையாகக் குமுறியது. அதே முயற்சியை வேறு திட்டத்துடன் அவன் ஆரம்பித்துவிடுவானோ என்று எண்ணி ஒரேயடியாகக் கலங்கிப் போனான். இத்துடன், பாண்டிய நாட்டின் மேல் விக்கிரமாதித்தன் படையெடுக்கப் போகிறான் என்பதையும், ஆந்திர நாட்டின் ஆட்சிப் பொறுப்பை விஷ்ணுவர்த்தனனிடமிருந்து பறித்து அதைச் சளுக்கிய சாம்ராஜ்யத்துடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள அவன் எண்ணியிருக்கிறான் என்பதையும் அவளுடைய வாயிலாகக் கேள்விப்பட்ட பரமேசுவரவர்மனுக்கு ஒரே அதிர்ச்சியும் குழப்பமுமாகிவிட்டது. இத்தகைய குமுறலுக்கும், குழப்பத்துக்கும், அதிர்ச்சிக்குமிடையே அவள் அவனைப் பார்ப்பதற்காகவும், அவன் இருக்கும் இடத்திலேயே தானும் போய்த் தங்கிவிட வேண்டும் என்பதற்காகவும் பல்லவபுரத்திலிருந்து பெருவள நல்லூருக்குப் புறப்பட்டு வந்ததாகச் சொன்னதைக் கேட்டுத்தான் அவற்றையெல்லாம் அவன் ஒருவாறு மறந்து அவளுடைய பேரன்புக்கு அடிமையாகிப் போனான்.

அவள்தான் அவன்மேல் எத்தனை ஆழ்ந்த அன்பு வைத்திருக்கிறாள்! அந்த அன்பை அவள் தனக்குத்தானே தோற்றுவித்துக் கொண்டதாகவும் அவனுக்குத் தோன்றவில்லை. அவளையறியாமலே அந்த அன்பு அவளிடமிருந்து பொங்கிப் பெருக்கெடுத்து அதிலே அவளையும் அவனையும் அமிழ்த்துவதாகவே அவன் உணர்ந்தான். 'எதிர் முகாமைச் சேர்ந்த ஒரு பெண்ணின் அன்பில் இத்தனை சீக்கிரம் தன்னைக் கரைத்துக் கொள்வது அறிவுடைமையாகுமா' என்று அவன் எண்ணாமலில்லை. ஆனால் அவளுக்கும் தனக்கும் பேதமற்ற ஓர் ஒருமையுணர்வு அவனது உள்ளத்திலிருந்து தீப்பிழம்பாக எழுந்து அந்த எண்ணத்தைத் தீய்த்துப் பொசுக்குவதை உணர்ந்து அவனே ஆச்சரியப்பட்டுப் போனான்.

அவளைப் பற்றி அவன் நன்றாக அறிந்துகொண்டு விட்டான். தன்னையும் அவள் தெரிந்துகொள்ளத் தன் மனத்தைத் திறந்து காட்டிவிட்டான். ஆயினும் அவள் அவனிடம் சொன்ன பல விஷயங்களில் அந்த ஒரே ஒரு விஷயம் தான் இன்னமும் அவனுக்குப் புரிபடாமல் இருந்தது.

'நான் ஓர் இலட்சியத்தோடு இந்த நாட்டுக்கு வந்தேன். அந்த இலட்சியம் சிதறிவிட்டது. அப்படிச் சிதறிய இலட்சியத்திலிருந்தே இப்போது வேறோர் இலட்சியம் என் நெஞ்சத்தில் முளைத்தெழுந்து வேரூன்றியிருக்கிறது. அதை நான் செயல்படுத்த வேண்டும். அதற்காக என் உயிரையே தியாகம் செய்ய நேர்ந்தாலும் தயங்காமல் நின்று அதை நிறைவேற்றியே தீருவேன்.' — இப்படி அவள் சொன்னதுதான் அவனுக்குப் புரியவில்லை. அவளுடைய அந்தப் புதிய இலட்சியம்தான் என்ன...?

மஞ்சள் ஒளிப் புனலில் முழுக்காடியவாறு சவுக்கைக் காய்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த உத்தமசீலி, பாறை மேல் அமர்ந்திருந்த பரமேசுவரவர்மனைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டே ஆற்று நீரின் நுரை தட்டிய விளிம்பை நோக்கி அழகு நடை பயின்று வந்தாள்.

அன்றொரு நாள் இதே ஆற்றங்கரையில் இதேபோன்று சவுக்கைக் காய்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து, அதை மாலையாகக் கோப்பதற்காக அமர்ந்தாளே, அதே இடத்தில்தான் இப்

போதும் போய் அதே போன்ற அழகு நளினத்தோடு ஒரு காலை ஒருக்களித்து மடித்து, மறு காலை நீரில் நீட்டி உகந்த வாறு அமர்ந்தாள். புன்னகை மேவிய அவள் முகத்தில் எள்ளளவு கவலையோ அச்சமோ தலைகாட்டவில்லை. தான் எந்த இடத்தில் எத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறோம் என்ற கிலேசமும் கொண்டவளாகத் தோன்றவில்லை. தன்னுடைய பாதுகாப்பு முழுவதையும் தன் தாயிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் போக்கில் சுதந்திரமாக ஓடியாடி விளையாடும் சிறு குழந்தையைப் போல அவள் ஒய்யார உல்லாசப் பாங்குடன் அங்கே உட்கார்ந்திருந்தாள். தன் மடியில் இருந்த சவுக்கைக் காய்களை ஒவ்வொன்றாக எடுத்து அதைத் திருப்பித் திருப்பிப் பார்ப்பதும், பிறகு பாறை மேல் அமர்ந்திருந்த பரமேசுவரவர்மனைக் குறும்புப் புன்னகையுடன் ஓரக் கண்ணால் கவனித்துக்கொண்டே சலசலத்து ஓடும் ஆற்று நீர்ப் பரப்பில் விட்டெறிவதுமாக வேடிக்கை செய்யலானாள் அவள்.

அவளுடைய அந்தச் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டைக் கண்டு பரமேசுவரவர்மனின் மனம் குதூகலித்தது. அன்றொரு நாள் அவள் விளையாட்டாகக் கோர்த்து வீசிய சவுக்கைக் காய் மாலை தன் கழுத்தில் வந்து விழுந்த சம்பவத்தை இப்போது தனக்கு நினைவுபடுத்துவதற்காகவே அவள் அவ்வாறு குறும்பு செய்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட அவன் மகிழ்ச்சிப் போதையில் கிறுகிறுத்தான். அவனை அறியாமலே அவன் கை அவனுடைய கழுத்தில் தவழ்ந்துகொண்டிருந்த அந்தச் சவுக்கைக் காய் மாலையை மெல்ல வருட ஆரம்பித்தது. பிறகு அதை வாஞ்சையுடன் எடுத்து விலைமதிப்பற்ற நவரத்தின ஹாரமொன்றைப் பார்ப்பதுபோல் ஆசை பொங்கப் பார்த்துத் தனக்குத் தானே அழகாகச் சிரித்துக்கொண்டான்.

இதைக் கவனித்த உத்தமசீலியின் முகம் நாணத்தால் சிவந்து கன்றியது. வெட்சிப் பூவொத்த தன் இடக் கை விரல்களைக் குவித்துக் கன்னக் கதுப்பை மறைத்தவாறு தலைகுனிந்து எழில் சிந்த முறுவலித்தாள் அவள். அவளுக்குப் பின்புறத்தில் ஓர் ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்த நாணற் போத்துக்கள் இளந்தென்றலில் தலையசைத்துப் பஞ்சுச் செண்டு போன்ற பூக் கொத்துக்களிலிருந்து மகரந்தப் பொடிகளை அவள் மேல் தூவின.

உத்தமசீலி தன் நெஞ்சகம் விம்மித் தாழ ஓர் ஏக்கப் பெருமூச்சு விட்டாள். அந்தப் பெருமூச்சொலியை எதிரொலிப்பதுபோல் தூரத்தில் நின்ற சவுக்கை மரம் 'ஜய்ங்' என்ற ஒலி எழுப்பியது. சுருதி நாதமாக இடைவிடாமல் கேட்ட அந்த 'ஜங்'கார ஒலியையே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அவன் ஏதோ ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள முயல்பவன்போல் தன் விற்புருவங்களை வளைத்துச் செவ்வதரங்களை நெளித்துக் குவித்தான். நினைவிலே இழுக்க நினைத்தது நெஞ்சிலே வந்து இறங்கி விட்டாற் போன்ற ஒரு மகிழ்ச்சிப் புன்னகை!

அந்தச் சவுக்கை மரத்தின் 'ஜங்'கார ஓசையை உற்றுச் செவிமடுத்துக் கொண்டிருந்த உத்தமசீலி, அவ்வொலியையே சுருதியாக வைத்துத் தன் இனிய மென் குரலை அத்துடன் இதமாக இழைக்க ஆரம்பித்தாள். அவளுடைய கண்கள் மெல்ல மூடின. முகத்தில் ஓர் அபூர்வ ஒளி விகசித்தது. மகர யாழின் மென்னலைத் துடிப்புகளாக இழைந்த அவளது கண்டத்வனி ஓர் எழிலார்ந்த பண்ணுருவைப் பரிணமித்து, நினைவுபடுத்தி இழுத்து வந்து நெஞ்சில் மிதக்க விட்டிருந்த ஒரு பாடலுடன் ஒருமித்து ஒலிக்கத் தொடங்கியது:

''சொல்துணை வேதியன்
சோதி வானவன்
பொன்துணை திருந்துஅடி
பொருந்தக் கைதொழ...''

பாறைமேல் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த பரமேசுவர வர்மன் இந்தப் பாட்டைக் கேட்டுத் தன் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு சரேலெனக் கீழே சரிந்து நின்றான்.

'என்ன! உத்தமசீலியா இந்தப் பாட்டைப் பாடுகிறாள்? இது என் அன்றாட இறை வழிபாட்டின்போது, நான் பாடும் பாட்டல்லவா? இந்தப் பாட்டை இவள் எப்படி அறிந்தாள்? அன்றொரு நாள் சேதியக் கலைஞரின்

''படம் எப்படி இருக்குதுங்க?''
''ஒரே அழுகைதான் போங்க.''
''ரொம்ப சோகரஸமான படமா?''



''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க... தியேட்டருக்குள்ளே தாய்மாருங்க கொண்டுவந்திருந்த குழந்தைங்கள்ளாம் ஆரம்ப முதல் கடைசி வரையில் அழுது அழுது தீத்திடுச்சுங்க!''

ரோஜாவின்

நறுமணம் ...

ஒரு பவுண்டு ரோஜா எண்ணெய் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 4000 பவுண்டு ரோஜாக்கள் வேண்டியிருக்கிறது. ஆனால் கோத்ரெஜ் ந. 1 லிருந்து ரோஜாக்களின் ஆனந்தமயமான நறுமணத்தை நீங்கள் பெறலாம். ரோஜாவின் இனிய நறுமணம் பெரிய–சைஸ் ந. 1ல் மிகச்சிறந்த பாணியில் சேர்க்கப்பட்டு இயந்திரத்தினால் உரையிடப்பட்டுள்ளது

புதிய ஆராய்ச்சிகள், நூதன முறைகள், நவீன இயந்திரங்கள், பல ஆண்டுகளில் ஏற்பட்ட சிறந்த தொழில் நுட்ப அறிவு இவைகளெல்லாம், கோத்ரெஜின் மற்ற சோப்புகளுடன், இந்த முதல் தாவர எண்ணெய் ஸ்நான சோப்பின் தோன்று தொட்டு ஏற்பட்ட சுத்தம் செய்யும் தன்மையையும், உடம்புக்கு இதமளிக்கும் குணங்களையும் இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன.



கோத்ரெஜ்

ந. 1 ஸ்நான சோப்

பெரிய–சைஸ்

சிறந்தது, சுதேசியும் கூட



கோத்ரெஜ் சோப்புகளில் புகழ்பெற்ற பெயர்

இல்லத்தில் எனக்கென அமைந்த பூஜை அறையில் நான் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தபோது இவள் அங்கு வந்து, என்னை முதன் முதலாகப் பார்த்தாளே அன்றே அதனை மனனம் செய்து கொண்டாளா? அந்தப் பாடலை இப்போது ஏன் பாடுகிறாள்? தொலைவில் இருக்கும் என்னை அருகில் இழுப்பதற்காக இந்தப் பாட்டைப் பாடுகிறாளா? என்னுடைய மனப்பாங்கை அவள் தான் எத்தனை துல்லியமாகப் புரிந்தும் தெரிந்தும் வைத்திருக்கிறாள்!'

அவன் அவளைப் பரவசக் கிறக்கத்துடன் பார்க்க, அதை அறியாதவள் போன்ற பாவனையில் மேலும் தன் கந்தர்வ ரசமயமான பூங்குரலைத் திறந்து அந்த நறுஞ்சுவைத் தேன் பாடலைத் தொடர்ந்து இசைத்தாள் அவள்:

"கல்துணைப் பூட்டியோர்
கடலில் பாய்ச்சினும்
நல்துணை யாவது
நமச்சி வாயவே!...."

மணம் கமழும் பூக்களால் தொடுக்கப் பெற்ற மாலையொன்றால் தன்னை யாரோ பிணைத்துக் கட்டி முன்னால் இழுப்பது போன்ற உணர்ச்சியுடன் உத்தமசீலி இருந்த இடத்தை நோக்கி நடக்கலானான் பரமேசுவரவர்மன். அப்படி நடந்து சென்றவன், அந்த நாணற் புதரில் நுழைந்து தன் இரு கைகளாலும் பசிய நிறத் தண்டுத் தாள்களை நீவிப் பற்றியவாறு குனிந்து அவளை ஆவல் பொங்கப் பார்த்தான்.

பாட்டின் இறுதிச் சொல்லை நிறைவாக்கி அதைப் பண்ணின் கடைசி அலையில் கரைந்து நிறுத்திய உத்தமசீலி தன் செவ்வதரங்களை மடித்துச் சுவைத்தவாறு கண் திறந்தாள்.

"இளவரசி!...."

பூந்துகள் செவியில் படர்ந்தாற்போல் ஒரு மென்னசைவுடன் நெளிந்து தன் வலக் கையை வெண் மணலில் ஊன்றி ஒருக்களித்துச் சாய்ந்து பின்னால் திரும்பினாள் உத்தமசீலி.

நாணற் போத்துக்களை நீவிப் பற்றியவாறு நின்றிருந்த பரமேசுவரவர்மன் அவளுக்குப் பின்னால் வந்து அமர்ந்து அவளின் முகத்துக்கு நேரே தன் முகத்தைச் சாய்த்து நீலமணிப் பரல்களாக ஒளிர்ந்த அவளது நீள் விழிகளை இமைக்காமல் நோக்கினான்.

மறு கணம், செக்கச் சிவந்த செந்தாமரை மலர் தன் பாரம் தாளாமல் தண்டு வளைந்து நீர்ப் பரப்பிலே சாய்வது போல் அவனது அகன்ற மார்பில் துவண்டு சாய்ந்தாள் உத்தமசீலி!

அநங்கனே மயங்கும் விதமாக ஓர் அழகுப் புன்னகை பூத்தவாறு அவளை இதமாக அள்ளி எடுத்து அணைத்துப் பற்றிய பரமேசுவரவர்மன், செந்தேன் பூசிய கொள்ளைக் கனிபோல் சிவந்து தளதளத்துக் கொண்டிருந்த அவளது அதரங்களைக் குறி வைத்துத் தலைகுனிந்தவன், எங்கோ தொலைதூரத்துக்கு அப்பால் அழுகையும் கூக்குரலுமான ஒலி கேட்கவே திடுக்குற்று நிமிர்ந்தான்.

அத்தியாயம் இருபத்திரண்டு

மறலியின் நிழல்

அந்தச் சிற்றாற்றின் மறு கரைக்கு அப்பால் வெகு தூரத்தில் தோப்பும் துரவுமாக இருந்த சிற்றூர் ஒன்று தீப் பற்றி எரிவது தெரிந்தது. வானளாவி எழுந்து பரவிய கரும் புகைக்கிடையே தீச் சுவாலை கோரமாகப் புலப்பட்டது. அந்தச் சிற்றூரில் வசித்த மக்கள் நாலா புறமும் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர். பெண்கள் தத்தமது பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு தலைவிரிகோலமாக ஓலமிட்டு அழுதவாறு பெருவளநல்லூரை நோக்கி வந்தனர். ஆண்கள் கூட்டம் ஒன்று, "அக்கிரமக்கார சளுக்கியர்கள் ஒழிக! அநியாய வரிகள் கொடுக்க மாட்டோம்!" என்று இரைந்து கூவிக் கொண்டே, கத்தி கம்பு ஈட்டி முதலானவற்றுடன் வெறி பிடித்தாற்போல் வேறொரு திசையில் ஓடியது.

இனிய மென்னுணர்வில் தன்னை மறந்திருந்த பரமேசுவரவர்மன் இந்தக் காட்சிகளையும் கூக்குரல்களையும் பார்த்துச் செவியுற்றே அப்படித் துடிப்படைந்தவனாய் எழுந்து நின்றான். அவனது அணைப்பிலிருந்து நழுவிச் சரிந்த உத்தமசீலியும் திகிலுடன் எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

பரமேசுவர வர்மனின் முகத்தில் சினமும் துக்கமும் மாறி மாறிப் பரம்படித்தன. அவனுடைய நெஞ்சம் சிவந்து பழுத்ததால் மார்பிலே மண்டிக் கிடந்த ரோமக்காடு தீய்ந்து பொசுங்குவதுபோல் சுருண்டு சிலிர்த்தது. தலையைத் தாங்கிப் பிடித்தவாறு தட்டுத் தடுமாறி நடந்து போய் அந்த வழுக்குப் பாறைமேல் முகத்தைப் புதைத்துக் கொண்டு சாய்ந்தான்.

அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அந்தச் சிற்றூர் தீப்பற்றி எரிவதும் மக்கள் அழுது புலம்பி ஓடுவதும் ஏன் என்பதை அவன் ஒரு சில விநாடிகளுக்

> ஏழைகளுக்காக உருகுங்கள்; உதவி புரிய விழையுங்கள். உதவ வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால் உதவி செய்யும் வசதி தன்னால் வரும். பார்த்தசாரதி நமக்கும் சாரதியாக வரச் சித்தமாக இருக்கிறான். அவன் மேல், அவனுடைய திருநாமத்தின் மேல் சாசுவதமான நம்பிக்கை கொண்டு உலகத்தவரின் துயர மலையைத் தீயில் பொசுக்குங்கள்!
>
> — ஸ்வாமி விவேகானந்தர்

குள் தெரிந்து கொண்டான். சளுக்கிய அதிகாரிகள் வரி வசூல் செய்ய வந்திருப்பார்கள்; அவ்வூர் மக்கள் வரி கொடுக்க மறுத்திருப்பார்கள்; உடனே அந்தச் சளுக்கியர்கள் ஊருக்குத் தீ வைத்திருப்பார்கள் — எல்லாம் அவன் ஏற்கனவே பார்த்து விட்டு வந்த காட்சிகள்தாமே? அதே நிகழ்ச்சிதான் இப்போதும் அங்கே நடந்திருக்கும்!

'நாடு இந்த நிலைமையில் இருக்கும் போது நான் இங்கே காதல் மாளிகை எழுப்பிக் கொண்டிருக்கிறேனே! என்னைப்போல் ஒரு பொறுப்பற்ற மனிதன் வேறு யாரேனும் இருப்பானா?'-தன்னைத் தானே நொந்து கடிந்துகொண்டு வெட்கிக் குமைந்தான் பரமேசுவரவர்மன். அந்தக் குமைச்சலினூடே அவன் மனத்தில் வேறொரு பரபரப்பான கேள்வியும் எழுந்தது:

'சளுக்கியரை எதிர்த்து விரட்டியடிப்பதற்காக என் நாட்டு மக்கள் இரகசியப் போர் அணியில் திரள வேண்டும் என்ற திருமுக ஓலையில் கைச் சாத்து இட்டுப் பெரும்பிடுகு முத்தரையரிடம் கொடுத்து அனுப்பினேனே, அந்த விஷயம் என்ன ஆகியிருக்கும்? மக்கள் என் கட்டளைக்கு இணங்கிப் போர் அணியில் சேருவார்களா, அல்லது என்மீது நம்பிக்கை இழந்து அந்தக் கட்டளையை உதாசீனம் செய்து விடுவார்களா? சளுக்கிய விக்கிரமாதித்தன் இப்போது பாண்டி நாட்டின் மேல் போர் தொடுக்க விரும்பாததைக் கேள்விப்பட்டு அவர்கள் பீதியடைந்து முத்தரையருக்குப் போதிய ஆதரவு தராமல் இருந்து விடுவார்களோ? அவரை நேரில் பார்த்தால்தான் இந்த விவரங்களையெல்லாம் அறிய முடியும்; ஆனால் அவர் இங்கு வந்து என்னைச் சந்திக்க ஒரு வார காலம் ஆகலாம் என்று சொல்லி விட்டுப் போனாரே! அதுவரையில் சேதியக் கலைஞரின் இல்லத்தில் எப்படித் தங்கியிருப்பது? இரண்டு நாட்களாகியும் அவரைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லையே! அவர் எங்கு சென்றிருப்பார்? என்ன காரணத்தினால் தம் இல்லத்தைப் பாழடையப் போட்டு விட்டுப் போய் இருப்பார்? சாத்திக் கிடக்கும் அந்த இல்லத்தில் நான் தங்கியிருப்பது சரிதானா? தனியாக இருந்து விட்டாலும் என்னை நானே எப்படியாவது சமாளித்துக் கொள்ளுவேன்; என்னுடன் இந்தப் பெண்ணுமல்லவா இருக்கிறாள்? இப்போது இவளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் என்மீது சுமந்து விட்டதே! என்னைப் பற்றிய தகவல் தெரியா விட்டாலும், இவள் கதி என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்து கொள்ளவாவது வில்வேலி இங்கு வந்து விடுவானே! மேலும், அன்று முன்னிரவு நேரத்தில் அந்தச் சென்னி வாய்க்கால் கரையோரம் இவளைத் தூக்கிக்கொண்டு நான் புறப்படவிருந்த சமயத்தில், சோனக வணிகர் போல் இருவர் வந்து என்னிடம் பேச்சுக் கொடுத்தார்களே, அவர்கள் நிச்சயமாகச் சளுக்கிய ஒற்றர்களாகத்தான் இருக்க வேண்டும். என்னை அவர்களுக்கு அடையாளம் தெரியா விட்டாலும், தங்கள் ஆந்திர இளவரசியான இவளை உடனே தெரிந்துகொண்டு அன்றிரவே பல்லவபுரத்துக்கு ஓடிப் போய் அந்த விவரத்தைத் தளபதி வில்வேலியிடம் தெரிவித்து விட்டிருப்பார்கள். இந்நிலையில், வில்வேலிக்கு அறிமுகமான சேதியக் கலைஞரின் இல்லத்தில் இவளை நான் இருத்தி வைப்பது ஆபத்தல்லவா? எந்த விநாடியும் அவன் இங்கு வரலாம்; அவன் வராவிட்டாலும் தன் வீரர்களையாவது அனுப்பி வைக்கலாம். விக்கிரமாதித்தனின் ஜன்ம எதிரியான என்னுடன் இவள் இருக்கக் கண்டால் இவள் கதி என்ன ஆகும்...?'

பாறை மேல் முகம் புதைத்துச் சாய்ந்து நின்ற பரமேசுவரவர்மன் விருட்டென்று நிமிர்ந்து திரும்பினான்.

இச்சமயம், அந்த உயரமான வழுக்குப் பாறைக்கு மறுபுறத்தில் செடிகொடிகளுக்கிடையே ஒரு மனித உருவம் கூரிய கத்துவாளை இறுகப் பற்றியவாறு ஒளிந்து மறைந்து பையப் பைய நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

ஏமாற்றத்தாலும் பயத்தாலும் அதிர்ச்சியடைந்து நின்றுகொண்டிருந்த உத்தமசீலி, தன் பக்கம் திரும்பிப் பரமேசுவரவர்மனைப் பயப்பிராந்தியுடன் பார்த்து, ''என்ன நடந்தது அரசே? ஏன் இப்படித் திடீரென்று...?'' என்று நடுங்கும் குரலில் கேட்டுக் கொண்டே அருகில் சென்று அவன் கையை மிருதுவாகப் பற்றினாள்.

(தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

Shakti Silks சக்தி ஸில்க்குகள் - மற்றும் ஸூட்டிங்குகள்



எடுப்பான ஆடைகள் - எங்கும் அணிந்து செல்லத்தக்கவை! நீங்கள் எங்கு சென்றாலும் தன்னம்பிக்கையுடனும், தோற்றப் பொலிவுடனும் விளங்க உங்களுக்கு சக்தி ஸூட்டுகள் இன்றியமையாதவை. இவை நாள்பட உழைப்பவை மற்றும் மடிப்பு கலையாமல் நிற்பவை. சக்தி ஸூட்டுகள், உருக்குலையாமல் காலையில் அணியும்போதிருந்த வனப்புடன், நாள் முழுவதும் விளங்குபவை.

கசங்காமல், சுருக்கம் விழாமல் எப்பொழுதும புதுமை பளபளப்புடன் விளங்கும் சக்தி ஸில்க்குகளை அணிந்து நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் திகழுங்கள்.

SHILPI - SM 292A TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை. கரைகடந்த நுரைவளம். கேட்பானேன். சொக்காய், சேலை முதல் சிறுவரின் உடை வரை... எதற்குமே நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை. கைப்பட வீட்டிலே துணிவெளுக்க ஒரே வழி: கைகண்ட ஸர்ப்.

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

SU. 28-140 TM